சிரவைக் கௌமாரசபை வெளியீடு.

உ

தேவி சகாயம்.

# திருப்பேரூர்ப்
# பச்சைநாயகியம்மையார்
# பிள்ளைத்தமிழ், மாலை.

இவை

சிரவணபுரம் கௌமாரமடாலயம்

ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் மாணாக்கர்

**ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்**

இயற்றியன.

ஷை மடாலய குருமாணவியார்

**தாயென்னும் ஸ்ரீ அரங்கநாயகியம்மையார்**

பொருளுதவிகொண்டு

கோயமுத்தூர் கூட்டுறவு அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பெற்றன.

உரிமை பெற்றவை.] [விலை அணா 8.

T12992
R003L07

மாதி-௵ பங்குனி-௴.

1940.

உ

சிவமயம்.

சிரவணபுரம் சதுர்வேத சிந்தாந்த சண்மத சமயாதீத அத்துவித
கௌமார மடாலயத் தலைவரும்,
திருப்பேரூர்ப் பிரம்மோற்சவத்தில் நடைபெறும் சபைக்குத்
தலைமை வகிக்கும் தலைவருமான

## ஸ்ரீலஸ்ரீ கந்தசாமி சுவாமிகளுக்கு

பேரூர்

**ஸ்ரீ பட்டீஸ்வரஸ்வாமி தேவஸ்தானம் தர்மகர்த்தாக்கள்**

வாசித்தளிக்கும்

# நல்வரவேற்புப் பத்திரம்.

அருள்கனிந்த திருவுள்ளத்து அடிகளீர்!

*தங்கள் அரும்பெறல் வரவு நல்வரவாகுக! அடியேங்கள் உய்யுமாறு பேரருள்சுரந்து, சபைத்தலைவராய் இங்கெழுந்தருளித் தங்கள் திருவுருவக்காட்சி நல்கியது எங்களையெல்லாம் உவகைக்கடலுள் திளைக்கச்செய்தது.*

கோங்குநன்னாட்டின் குருமணியாய் விளங்குங்கோவே!

வண்ணச்சரபம் ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகளின் திருவருள் பெற்றுயர்ந்த ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமி[illegible]ளுக்கு இளங்கோவாய்த் திகழும் தாங்கள், உலகிற்சிற[illegible]

கௌமார நெறியை மாணவர் குழாங்கட்கு வழங்கி உய்விக்கின்றீர்கள். ஒப்புயர்வில்லா எண்ணிறந்த நூல்கள் யாத்துதவியும் வருகின்றீர்கள்.

பிரசங்கம்புரியும் பேருஞ்சொற்கொண்டலீர்!

மாதவமே ஓருருவாய் வந்ததென அவதரித்து, யதாஸ்தானத்திலும், யாத்திரை செல்லுமிடங்களிலும் புராணப் பிரசங்கமும், சரித்திரப் பிரசங்கமும் செய்து, சிவபத்தி, அடியார்பத்தி, குருபத்தி, திருநீறு, கண்டிகை, சமயநூல் இவற்றிற் பத்தியாதிய நன்னெறி தழைத்தோங்குமாறு அருந்தொண்டு புரிந்துவரும் தங்களுக்குச் சைவசமயிகளாகிய யாமெல்லாம் கடமைப்பாடுடையேம். பல்வகை நூல்களையுங் கற்க விரும்பும் தொண்டர் குழாங்கட்குச் சுக்கிரவாரந்தோறும் சுவாமிகள் புரியும் சொற்பொழிவாற் பயன்பெற்றுய்ந்தோர் பலரன்றே!

அருங்கலை விநோதரீர்!

திருக்கோவலூர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளால் தொடங்கப்பெற்ற இச்சபையின் இவ்வாண்டின் விழாவானது ஸ்ரீ அரசம்பலவாண நடராஜப்பெருமானார் பட்டிமுனி, கோமுனி, காமதேனு இவர்கட்குக் காட்சி நல்கியருளிய, திதி, நட்சத்திரம், இலக்கினம் இவையொருங்கு வாய்க்கப்பெற்றமையால் ஏனைய ஆண்டினும், இவ்வாண்டின் பிரம்மோற்சவம் எவ்வாறு சிறப்புடையதாகிறதோ, அவ்வாறே ஏனைய ஆண்டு விழாக்களிலும் சிறப்புடையதாகின்றது. எதனாலெனின் தங்கள் வருகை [illegible]னலேயே.

இன்கவி புகலும் இயற்றமிழ்வாண !

அன்பர்கள் நாடோறும் ஓதி உய்யும்பொருட்டு ஸ்ரீ பச்சைநாயகியம்மையார் பிள்ளைத்தமிழும் மாலையும் இச்சபையில் அரங்கேற்றியருள்வது ஓர் இன்றியமையாத திருத்தொண்டேயாகும். இதற்கும் யாங்கள் கடமைப்பாடுடையேம்.

அவஞானந் தொலைக்கும் சிவஞானச் செல்வ !

இச்சபைக்குத் தலைமைவகித்து இனிது நடாத்தியருள்வதோடு இச்சபை என்றென்றும் தழைத்தோங்குமாறு நல்லாசியும் புரிவீர்களாக. இத்தமிழ்நாட்டில் தங்கள் திருப்பணி பரவிப் பெரும்பயன் விளைக்கவென எங்கள் பச்சைநாயகியார் சமேத ஸ்ரீ பட்டிப்பெருமானையும், தங்கள் குருமணியாம் இராமானந்த அடிகளையும் மனமொழிமெய்களாற் போற்றுகின்றோம்.

சுவாமி வாழ்க ! சைவம் தழைக்க ! தமிழ் ஓங்குக !

இங்ஙனம்,
சுவாமிகளின் அடிமைகள்,

S. பீமைய செட்டியார்,
D. M. வெள்ளிங்கிரிக் கவுடர்,
V. ஆறுமுகம் பிள்ளை,
தர்மகர்த்தாக்கள்.

திருச்சிற்றம்பலம்.

---



ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள்,
கௌமாரமடாலயம்,
சிரவணபுரம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கோயமுத்தூர் ஊராண்மைக்கழக உயர்தரப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியரும், இந்நூலாசிரியரது மாணவருமான

**வித்துவான், கு. நடேச கவுண்டரவர்கள், P. O. L.,**

எழுதிய

# முகவுரை.

வேதாக மப்பவுரி வீசுங் களாசநிலை
யாதார வெற்பி லபிடேகம் — போதத்
திருளிலெழு பானு வெனதொழிவி லின்பக்
கருணைபொழி வானெடுத்த கை.

(ஒழிவிலொடுக்கம்).

திருப்பேரூர்ப் பச்சைநாயகியம்மை பிள்ளைத்தமிழ், பச்சைநாயகி மாலை என்னும் இவ்வரும்பெறற் பனுவல்களுக்கு முகவுரையெழுதும் பேறுவாய்த்தமைக்குப் பெரிதும் மகிழ்கின்றேன். "பச்சைநாயகி பிள்ளைத்தமிழ்" என்பது செய்யுட்பிறிதின் கிழமையாகிய் ஆறும் வேற்றுமைத்தொகை. "பாரியது பாட்டு" என்பதுபோல பிள்ளைத்தமிழென்பது தமிழ்மொழிக்குரிய தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களில் ஒன்று. இது வித்தாரகவியின்பாற்படும் என்பது "வித்தாரகவிக்கெலா முன்னுறவியன்ற பிள்ளைக்கவி" என்னும் மாதவச்சிவஞானமுனிவரது கூற்றால் விளங்கும்.

இந்நூலாகிய பேண்பாற் பிள்ளைத்தமிழின் இலக்கணம்:

"....வித்தாரகவிதா மெண்ணிடிற் பலவா
மவற்றிற்கு முதலாகவேன்ற பெண்பிள்ளைக்கவி
முனிவோட்டு காப்புநற்சீரை தால்சப்பாணி
முத்தம்வாரானை மற்றுமொழியுமம் புலிப்பருவ
மம்மானைநீரூசன் முறையினை யிருபருவமும்
நனிவாய்த்தகவலின் விருத்தத்தினுற்பாடி நவிலு
[முத்திங்கள்முதலா
நயந்தமூவெழு திங்களளவினிற் கேட்பிக்கு
நன்மையதெனப் புகல்வரே"

(மாதவச்சிவஞானமுனிவர்).

என்பதனுல் அறியலாம்.

பச்சைநாயகிமாலை என்பதும் ஆறும் வேற்றுமைத் தொகையே. கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நால்வகை மலரால் நார்கொண்டு புனையும் மாலைபோல இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்லெனும் நால்வகை மலரால் அன்புநார்கொண்டு தொடுக்கப்படுவதால் இப்பிரபந்தமும் அப்பெயர்பெற்றது. இதன்கண் உள்ள ஒவ்வொரு செய்யுளும் "பச்சைநாயகியே" என்பதை மகுடமாகக்கொண்டுள்ளன.

இப்பிரபந்தங்களின் பாட்டுடைத் தலைவியாகிய பச்சைநாயகியம்மை "மனவாக்குக் கெட்டாத சிற்சத்தியாயிடினும் மன்பதைக ளுய்யவேண்டி மலையரையன் முதலியோர்பால்" மகவாயுதித்து வளர்ந்த பெருங்கருணைச் செல்வியாதலால்,

அவளை மகவாகப் பாவித்துப் பாடும் பனுவல்களுக்குள முவந்து திருவருள் புரிவாள் என்பதிற் சிறிதுமையமில்லை. இவ்வம்மையாருக்குப் பிள்ளைத்தமிழொன்று, முன்பும் ஒரு புலவரால் பாடப்பெற்றுளதெனினும் பின்பு தோன்றிய இத னையும் உவந்தேற்றருள்வள் என்பதற்கு, அவள் மலையரை யன் மகளானதேயன்றி மலயத்துவசன் முதலோர்க்கும் மக ளாய்த் தோன்றியதே சான்றாகும்.

## இந்நூல்களின் ஆசிரியர்:

வண்ணச்சரபந் திருப்புகழ்ச்சு வாமிதண்ட பாணியெனும்
அண்ணல்முருக தாசனரு ளமுதவாரி தனைமுகந்து
மண்ணிலிடித்து மின்னுமல் வழங்குமிராமா னந்தமுகிற்
றண்ணந்துளியால் விளைந்தமுத்தந்தனைநேர் **கந்தசாமியே.**

இவரது வரலாறு இதுவரையில் வெளிவந்துள்ளவாய இவரது நூல் பலவற்றின் பாயிரங்களின் வாயிலாய் அன்ப ரனைவரும் நன்கறிவராதலின் ஈண்டு விரிக்காது விடுக்கின் றேன்.

பெரிதுந் திரிசொற்களான் இயன்று ஓர்ந்துணரும் பொருளவாய் மிளிரும் இப்பிரபந்தங்களுக்குக் குறிப்புரை யேனும் எழுதி வெளியிட்டிருப்பின் சால நன்மைதரும். பங்குனியுத்தரத் திருநாளன்று அரங்கேற்றவேண்டும் என்ற நோக்கத்தால் போதிய அவகாசமின்மையால் அவ்வாறு செய்தற்கியலவில்லைபோலும். இச்சிறு முகவுரையில் இந் நூல்களின் அருமைப்பாடனைத்தும் எடுத்துக்காட்ட முயல் வது குடத்துள் யானையைத் துறுத்த முயல்வதே யொக்கும். இந்நூலிரண்டனையும் ஒருமுறையாயினும் ஆர அமரப்படித்

தின்புறவும் போதிய ஒழிவு வாய்க்கப் பெருமையால் அங் கங்கே ஒன்றிரண்டாகப் படித்த வேகத்தில் தென்பட்ட இரண்டொரு நலங்களையேனும் தாலீ புலீக நியாயத்தாற் குறிக்கின்றேன்.

பிள்ளைத்தமிழ் முன்சொல்லியதுபோல் பெரிதுந் திரி சொற்களான் இயன்று ஓர்ந்துணரும் பொருளினவாய செய் யுட்களைக்கொண்டது. இதன் காப்புப் பருவம் முதற்செய்யு ளொழிய ஏனைய ஒன்பதும் சந்தப்பாக்களாலாயது. ஏனைய பருவங்களிலும் சந்தப்பாட்டில்லாதது இல்லை. திரிபு மடக்கு முதலிய சொல்லணிகள் செய்யுள்தோறும் பொதிந்துள்ளன. எடுத்துக்காட்டாகப் பாயிரச் செய்யுள் மூன்றும், செங்கீரைப் பருவம் முதலைந்து செய்யுள்களும், தாலப் பருவம் 7-ம் செய் யுளும், சப்பாணிப் பருவம் 1, 3, 4-ம் செய்யுள்கள் முதலிய வையாம்.

சிலேடை பாடுவதில் இந்நூலாசிரியருக்குள்ள திறமை அம்புலிப் பருவம், நீராடற் பருவமுதலியவற்றின் செய்யுள் களால் நன்கு புலனாகும். பிள்ளைத்தமிழ் பாடுவதில் ஏனைய புலவர்க்கெல்லாம் புலியாயுள்ள அம்புலி இவ்வாசிரியர்பாற் பதுங்கி யடங்கிப் பணிகேட்கிறது.

அம்பிகையின் அருட்பெருக்கை வித்தாரித்தோத எடுத்துக்கொண்ட இந்நூலில், அவளது திருவருட் செல்வம் பெற்ற பெரியோர்கள் பலரது சீர்த்திகள் ஆண்டாண்டு மிளிர் வன ஏனையவரையும் அவள்பாலன்புசெய்துய்ய ஊக்குவனவா யுள்ளன. எடுத்துக்காட்டாக, காப்புப் பருவம் 3-ம் செய்யு ளிலும், சப்பாணிப் பருவம் 3-ம் செய்யுளிலும், கவிராசபண் டிதர், காப்புப் பருவம் செய்யுள் 6-ல் அபிராமபட்டர் செய்

யுள் 8-ல் முத்துத்தாண்டவர் முதலியோர் அருள்பெற்ற வரலாறுகள் திறம்படக் கூறியுள்ளமை காண்க. அருணகிரி நாதர், சம்பந்தப்பெருமான், சுந்தரமூர்த்தி நாயனர் முதலிய பேரருட்டிருவாளர் புகழ்களும் அங்கங்கே பரவப்படுகின்றன. பயின்று பயின்றின்புறத்தக்க பொருள் வளம் ஆங்காங்கு அமைந்துகிடக்கின்றன. எடுத்துக்காட்டாக, பாயிரம் விநா யகர் துதியில் சிவனே கணபதியாயுள்ள தன்மை செவ்வன் அமைந்து பேரூர்ப்புராண காப்புச் செய்யுளை நினைப்பிக்கி றது. காப்புச் செய்யுள் 8-ல் மலரவன் செய்வெற்றுடம்பினும் கலைமகள் செய்புகழுடம்பு சிறப்புடையதென்பது நன்கு கூறப் பட்டுள்ளது.

செங்கீரைப் பருவம் 5-ம் செய்யுளில் கோபுரத்தைத் தேவேந்திரனேடு ஒப்பிட்டுள்ளமையும், அதனை அபுத்திபூர்வ மாக வணங்குவாரும் பேறுறுவரென்று கூறியுள்ளமையும் பேரின்பம் பயப்பன.

அப்பருவம் 6-ம் செய்யுள் "அவளன்றி யோரணுவும் அசையாமையைப் புலப்படுத்தி," "சிவமெனும் பொருளுமா திசத்தியொடு சேரினெத்தொழிலும் வல்லதாம், இவள் பிரிந் திடினியங்குதற்கு மரிதரிதெனுமறையிசைக்குமால்" என் னும் சௌந்தரிய லகரிச் செய்யுளை நினைப்பிக்கிறது.

7-ம் செய்யுளில் "பதியினுடனே கலந்தொன்றி........ உணர்ந்தேன்" என்பது சிலேடை நயமும் சித்தாந்தப் பொருள் நுணுக்கமும் பொருந்தியுள்ளது.

தாலப் பருவம் முதற் செய்யுளில் அம்மை குழவியா யழுவது, ஆருயிர்கள் மும்மலவாதனைப்படல் கண்டிரங்கியழு

வதாகக் கற்பித்துள்ளது அருமையும் பெருமையும் அமைந்த தாகும்.

அப்பருவம் 7-ம் செய்யுளில் அம்பிகையைத் தாம் தாலாட்டுவதற்குத் துணிந்தமைக்குக் கூறியுள்ள காரணம் இந்நூலாசிரியர் மேற்கொண்டுள்ள ஆச்சிரமத்திற்கு ஏற்ற தாகவும், ஏனையோருக்கும் பிறப்பறுக்க வழிகாட்டுவதாகவும், கற்பனைத்திறம் கவின்றதாகவும் விளங்குகிறது.

சப்பாணிப் பருவம் 5-ம் செய்யுளில் பிறவித் துன்பம் நன்கு புகலப்பட்டுள்ளது.

முத்தப் பருவம் 9-ம் செய்யுளில் மலர்மகளிரிருவரும் அம்மையின் இரு கண்களாய் அமைந்துள்ளமை கூறி, அவ ளது காமாட்சியென்ற பெயர்ப்பொருளை விளக்குகின்றது.

வருகைப் பருவச் செய்யுளனைத்தும் அம்மையை ஊனக் கண்ணும் ஞானக்கண்ணும் காணவிழைவாரனைவரும் போற்றிப்படித்துப் பேறெய்தற்குரியன.

அப்பருவம் 7-ம் செய்யுள் அம்பிகையருள்பெற்ற பெரி யோர் பலரைக் குறிப்பிடுகின்றது.

அம்புலிப் பருவமுழுதும் அமைந்துள்ள பிரிமொழிச் சிலேடைநயம் பெரிதும் வியத்தற்பாலது. சதுர்வித உபா யங்கள் சதுர்படச் சமைந்துள்ளன. 3-ம் செய்யுளில் 12 ராசிகளின் பெயரும் தொனிப்பது புலவர்களுக்குப் பெரு மகிழ்ச்சி தருவதாம்.

6-ம் செய்யுளில் திருப்பேரூரையடைந்து சேமமடைந்தோர் பலரையும் குறிக்கின்றது.

இங்ஙனமே எண்ணிறந்த பொருள்வள நிரம்பியுள்ள இப்பிரபந்தத்தின் சிறப்பை இச்சிற்றுரையில் எங்ஙனம் எடுத்துரைப்பது.

பச்சை நாயகிமாலை என்னும் பிரபந்தம் காப்பும் வாழ்த்தும் உட்பட நூற்றுமூன்று கட்டளைக் கலித்துறைகளாலாயது. 'பத்திச்சுவை நனி சொட்டச் சொட்ட,' அமைந்த இப்பாடல்களில் ஏனைச்சுவைகளும் இலங்குகின்றன. நிந்தாஸ்துதியாக அமைந்த சில பாடல்கள் மிகவும் சுவை தருவன. எடுத்துக்காட்டாக, 4, 10, 13, 18-ம் பாடல்களை நோக்குக. 20-ம் பாடலில், அம்மை தன் திருமுலைப்பாலைப் பிள்ளையார்க்கு ஊட்டியும் தன் புகழையவர் ஓதாமல் தன் கணவன் புகழையோதுவித்தமைக்குக் கணவன் புகழைக் கேட்பதிலுள்ள பெருவிருப்பமே காரணம் என்பது மிக நயமாக இருக்கிறது.

அம்மையின் கருணையைப் பலவிடங்களிலும் பலபடப் பாராட்டியுள்ளார் இவ்வாசிரியர். உதாரணமாக, 24, 28, 31-ம் செய்யுள்களைக் காண்க.

43-ம் பாடல் அம்மனது அருளுருவக் காட்சி வேண்டுவோர் மந்திரமாகக்கொண்டோதத்தக்க மாட்சிகொண்டமைந்துள்ளது.

அம்மை, இம்மை, மறுமையின்பமுதவுபவள் என்பதை நயம்பட 83-ம் கவி கூறுகின்றது.

96, 100, 101-ம் கவிகள் சரணாகதித்தன்மையை விளக்கி யானெனதென்பதை நீக்குதற்கு உபாயம் அறிவிப்பனவா யுள்ளன.

பன்னிப் பன்னிப் பகர்வதேன் ?

"பவப்பணிக்கு மருந்துளகப் பகைக்குவிளக் ககத்துறவோர்
தவத்துணைநற் றமிழ்க்கிலக்குச் சந்தவண்ணக் கருவூலம்
சிவத்திலெமைப் பிணித்திருத்துஞ் சிரவைநகர்க் கந்தமுனி
தவப்பெரிய னருட்பெருக்கிற் றருமருமைத் தமிழ்க்கவியே"

என்று முன்னொருபொழுது அடியேன் சொன்னதையே சொல்லி இச்சிற்றுரையை நிறுத்துகிறேன்.

நூல் வெளியீட்டாளர் :

இப்பிரபந்தத்தின் அருமை பெருமைகளைப் பாராட்டித் தமிழுலகிலுள்ள சைவத்திருத்தொண்டர்களும், புலவர்பெரு மக்களும் கைக்கொண்டுபோற்றி உண்மைப்பயனடையுமாறு தமது புண்ணியப்பொருள்கொண்டு அரிய புத்தகங்களாக ஆசிரியர், நூலாசிரியராதியர் படங்களுடன் வெளியிட்ட ஸ்ரீமதி தாயம்மாளென்னும் அரங்கநாயகியம்மையார், பூர்வத்தில் முருகம்மையாராய் விளங்கி முருகனருள் வாக்கின்படி இம்மையிற் பிரமசரிய சந்நியாசினியாகி முத்தமிழிலக்கண கர்த்தரான ஸ்ரீ அகஸ்தியகலாமிசாவதாரமூர்த்தியாய் விளங்கும் சிரவணபுரம் கௌமார மடாலய தாபகாசிரியராகிய ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள்பால் சடாக்ஷர மந்திரோபதேசம்பெற்று, தியானயோகம், குருபணிவிடையாதிய புரியும்

தவச்சிறப்பினர். இத்தகைய பாக்கியமமையப்பெற்ற இவ்வம்மையார்க்கு மேன்மேலும் பத்தி ஞானங்களாகிய இகபர சாதனங்களைத் தந்தருளுமாறு பரமசற்குருநாதன்றிருவடிகளைப் பன்முறையும் பிரார்த்திக்கின்றேன்.

"குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்."

கோயமுத்தூர்,
11—3—1940.

இங்ஙனம்,
வித்துவான், கு. நடேசன்.

முகவுரை முற்றிற்று.

உ

குருவே துணை.

# சாத்து கவிகள்.

---

பேரூர்த் தெற்குநந்தவனம், சாமிமடம்

## ஸ்ரீமத் சுந்தர சுவாமிகள் இயற்றியன.

அறுசீர் விருத்தங்கள்.

வெள்ளைப்பங் கயத்தின்மிசை வீற்றிருக்கு மெல்லிய லாள் விரைப்பூம் பாதம், உள்ளப்பங் கயமீதி யானிருத்திச் சாத்துகவி யுரைப்ப தோர்ந்து, பிள்ளைத்த மிழ்க்கவிக்குப் பிள்ளைத்த மிழ்ச்சாத்தே பெரிதா மென்னி, லள்ளற்க டற் புவியி னறிஞர்மிக மகிழ்தகமைத் தாகு மன்றே. (க)

சிரவைநகர்க் குருமுனிவ னருளுபதே சந்தனது செவி வா யேற்று, விரவுமுள மிகத்தெளிந்து நிட்டைகூ டத்தகு மெஞ் ஞானம் வாய்ந்தோன், கரவுதவிர் நன்மனத்தன் கந் தசா மிப்பெயர்தோய் கவிஞ னன்னோன், பரவுபுக ழுவனி யற்று நூல்களிடை மிகவிளங்கும் பரக்கக் காண்மோ. (உ)

காயிகம்வா யிகமான சீகமென வான்றோர்கள் கழற வின்னோன், வாயிகமே மிகதிறத்தன் வாரமொரு முறை வெள்ளி வருவோர் தங்கட், கேயிகமா லறத்தனதோ ரநு பூதி கலந்துகலந் திசைக்குந் தூயோன், சேயினடி பதியுளத் தன் றிறற்புலமை யமைபவனெஞ் செல்வன் றானே. (ங)

ஆயிரமா யிரமாகச் சந்தவண்ணம் வேண்டிடினு மமைத் தற் கஞ்சான், மாயிருஞா லத்திலவி ரறிஞர்கா ளவனியற்றி வருநூல் தன்னிற், பாயிரமாத் திரமொருவ னெருமன தாய்ப் படித்திடின்மெய்ப் பத்தி வாய்க்கு, மாயிடினூன் முழு மையுநெஞ் சகத்தழுத்தின் மெஞ்ஞானி யாவா னன்றே. (ச)

உடல்வகையி லெனக்கிளைய னுயிரைமதித் திடிற்சமமே யுணர்வை யோரிற், றிடமிகுமோர் சற்குரவ னுகையினு லடித்துகளைச் சிரமேற் றுங்கிற், படர்பிறவிப் பிணியகற்றி யகங்கார வேர்களையும் பாற்றி மற்றோர், மடமைமலி யொரு மாதின் கருப்பையிடை யொருக்கா லும் வருத்தா தன்றே.

## கட்டளைக்கலித்துறைகள்.

பிள்ளைத் தமிழ்வர் ணனையலங் காரம் பெருமிதமா
யுள்ளை வியப்பிக்கு நான்கென்னு பாயமு ரைப்பரிதாம்
விள்ளிற் றொடைநயம் மோனை யெதுகை மிகவியப்பாங்
கள்ளிற் களிக்கு மதுகரத் தின்செயல் காட்டிடுமே. (சு)

பத்தென் பருவ மொருமகட் கேசுட்டிப் பாடுமதன், சத்தென்னென் றோரி லுலகோர்தம் மக்க டமைவளர்ப்ப, தொத்தே யிருப்பினும் வேற்றுமை மிக்கவு முண்டுண்டென் பேன், பித்தே பிறவிப் பிணிக்குவித் தேயது பின்னெனன் றரோ. (எ)

சத்தித் திறலை மிகவே யளித்துச் சகத்தினர்க்காஞ்
சித்திப் பெருச்சைத் திருவோ டளித்துத் திரும்புதலில்
முத்திச் சுகத்தையு மீயுமென் றேபெரு மூதறிவோர்
எத்திக் கினும்பகர் வாரிவண் யான்சொல லேற்றமன்றே. (அ)

### சந்தம் — நூற்பயன்.

தந்த தானதன தய்யத் தனனு.

சந்த நாவலர்கள் கொள்ளத் தகுமா
சம்ப்ர தாயமிக வுள்ளிற் பொதிசீர்
பந்த பாசமற வெள்ளித் தகைசால்
பண்பை யேவளர நல்கித் திரமா
யெந்த நாளும்வள மெய்திக் களிகூ
ரின்ப வாரியினி லெய்துற் றிடவே
கந்த நாதனடி யுய்கைக் கெனவோர்
கந்த சாமிபகர் பிள்ளைத் தமிழே. (கூ)

---

திருவாமாத்தூர்க் கௌமார மடாலயம்
ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் மாணுக்கரும் குமாரருமான
## தி. மு. செந்திநயகம் பிள்ளையவர்கள் இயற்றியன.

### சந்தக்கவி.

தய்பத்தனத்ததன தந்ததானதனனு.

செல்வப்பெருக்குமுயர் கல்விச்சிறப்பும்வளர்
தெய்வப்பிடிப்புமுல கின்கண்வாழுமடியார்
செவ்வைப்படத்தருமொர் வள்ளற்றகைப்பரமர்
செல்லிற்கறுத்தகள நம்பர்கோமுனியொடே
நல்வர்த்தனைத்தவசு புல்லுற்றபட்டிமுனி
நைவற்றுயப்பொனர சொன்றுகாவினிடையே
நவ்வித்துணைக்கணுமை வவ்வுற்றிடச்செய்நடம்
நவ்வற்புவிக்கணரர் கண்டபேரையிடம்வாழ்

மல்வற்றலற்றவருள் கொள்பச்சுடற்பரைதன்
மல்லற்புகழ்த்தொகைய மைந்தபேழையெனவே
வல்விற்பனக்குழுவிள் பிள்ளைத்தமிழ்ப்பனுவல்
வள்ளைச்செவிக்கினிமை பொங்கவோதினனரோ

வெல்வச்சிரக்கையரி வைகற்பசொர்க்கசுகம்
வெஃகற்கிணக்கமறு சிந்தைமேவுதுறவோன்
வெள்ளப்புனற்பொதியை ஐபொற்சபைச்சிரவை
மெய்யற்புதச்சுதனோர் கந்தசாமிமுனியே. (க)

## கட்டளைக்கலித்துறை.

பொற்பதக் கந்தந்தொர் பிள்ளைத் தமிழ்கொள் புகழ்ச் செந்திலான், அற்பமை தாயெனும் பேரையிப் பேரையி லாக்கவுமை, செற்படர் சீர்ச்சிர வைக்கந்த சாமிதன் சிந் தையிற்றன், பொற்பதக் கம்பொருந் தச்செய்தொன் றேற்றி டல் போதநன்றே. (உ)

## வேண்பா.

நற்பேரை மேவுபச்சை நாயகிபிள் ளைத்தமிழாஞ்
சொற்பேரைச் சூடுந் துதிப்பனுவல் — கற்பேறு
சிந்தையொடு கற்போர் செவியேற்போர் சிந்திப்போர்
நிந்தையில்பே றெய்தன்மெய்சொன் னேன். (ஙு)

## எழுசீர் விருத்தம்.

இச்சைநா யகிகண் மாலையு மறநீத் திலங்குமெய்த் துற வரும் விரும்பப், பச்சைநா யகிதன் மாலையென் றொருநற் பனுவல்நா லருந்தமிழ்ப் பாவாற், கொச்சைநா யகிநேர் குணத்தின ரறியாக் கொழுஞ்சுவை யுறச்சொனான் வேதா, விச்சைநா யகிகண் ணருள்கொடு சிரவை மிளிர்கந்த சாமிமா தவனே. (ச)

### வெண்பா.

நாரூ ருளப்பச்சை நாயகியிள் ளைத்தமிழ்ப்பாத்
தாரூர் நூன் மெய்ப்புத் தகமாக்கிப் — பேரூரின்
வாயரங்க மேற்றி மணக்கச்செய் தின்படைந்தாள்
தாயரங்க நாயகியார் தாம். (ரு)

---

மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவரும், கோவை அரசியலார் கல்லூரித்
தமிழ்த் தலைமை ஆசிரியருமாகிய

## சைவத்திருவாளர் அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள்

இயற்றியன.

### அறுசீர் விருத்தம்.

பாடல்சால் சிறப்பிற்பொன்னி பவானியான் பொருநைபாய்
கோடல்சால் குறிஞ்சியாதி நாற்றிணை வளங்குலாவி [ந்து
ஆடல்சால் விடையெம்மண்ணல் அமர்தலம் பலவுமாகி
நாடல்சால் திறத்துநாடா வளத்தது கொங்குநாடு. (க)

### வேறு.

விண்பு குந்திடு வியன்சினைத் தருக்குல மிடைந்து
கண்ம லர்ந்தபன் மலர்தரு நந்தனங் கவைஇத்
திண்ம லர்ந்தவிந் நாட்டினுக் கணியெனத் திகழும்
வண்ம லர்ந்தசீர்ச் சிரவண புரத்தினின் மடமே. (உ)

எந்தை எம்பிரான் முருகவே ளிணையடி வழுவாச்
சிந்தை யன்பர்கண் மோனமுந் தியானமுஞ் சிறந்து
மைந்தர் பல்லவர் பலவகைப் பணிவிடை வகுப்ப
முந்து மாதவம் புரிவது மடங்களின் முதற்றால். (ங)

கந்த சாமிநா மத்தவக் கடவுள்*கண் காண
வந்த சாமி$யென் றருந்தவர் வணங்குறு மாண்போன்
இந்த மாமடா லயத்திருக் குரவனு யிலங்கிப்
பைந்த மிழ்க்கவிப் பனுவல்கள் உலகுயப் பயந்தோன்.

தன்னை யொப்பிலாப் பேரையிற் றண்ணளி கொழிக்கும்
அன்னை யென்னையாள் பச்சைநா யகிமல ரடிக்குச்
சொன்ன யம்பொரு ணயஞ்செறி பனுவல்கள் தொடுத்
என்ன ஞேர்களு முய்திகூ டுதலினி யெளிதே. [தான்

---

கோயமுத்தூர் தமிழ்ப் பண்டிதர்

## திருவாளர் C. S. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள்

இயற்றியன.

### ஆசிரிய விருத்தங்கள்.

நாடாத வளமுடைய நன்னுடா மீகொங்கி னலஞ்சேர் காஞ்சிப், பீடாருந் தென்கரைவாய்ப் பிறங்குதிருப் பேரூரிற் பெட்பி ஞேடும், வாடாம லுலகுயிர்க ளுயவெண்ணிப் போதி வைப்பில் வதிவோன் மாலும், தோடாரு மறையயனுந் துரு வியுங்காண் பரியன்பட்டீ சுரன்றன் பாகம். (க)

மருவிவளர் பச்சைநா யகியம்மை மாண்புமிகு மலர்ப்பா தத்தி, லுருகுமன்பொ டொருபிள்ளைத் தமிழெனுமொண் பிரபந்த மோதிச் சாத்தி, வருபிறப்பின் பயனடைந்தான் சிர வணஞ்சார் கௌமார மடால யத்துக், குருமணியாங் கந்த சுவா மிச்சாமி கோதில்புகழ் குலவ மாதோ. (உ)

---

* கடவுள் — முனிவர். $ சாமி — முருகன்.

## நேரிசை வெண்பா.

பச்சைவல்லித் தாயாரின் பாதமலர் மேற்கொண்ட
விச்சையினாற் பாமாலை யாத்ததனை — மெச்சவன்பர்
தந்து புகழ்கொண்டான் சாமிகந்த சாமிதமிழ்ச்
சந்தைபயில் தாலுத் தவன். (ரு)

## கட்டளைக்கலித்துறை.

அலைபுனற் காஞ்சி யகன்கரை மேவு மரசவையிற்
புலியுரி பூண்டிடு புங்கவன் வாமம் புரிந்தமரும்
பலமிகு மம்மைதன் பாதாம் புயத்துப் பரிவுமிக
நலதமிழ் மாலைசொற் றான்கந்த சாமியென் னற்றவனே.

---

கோயமுத்தூர்

அரசினர் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர்

## திருவாளர் S. ஐயாசாமிப் பிள்ளையவர்கள்

இயற்றியது.

## அறுசீர் விருத்தம்.

நீடுபுகழ்ப் பேரைக்கே வளர்பச்சை நாயகிபால் நிறையு மன்பால், நாடுபுகழ்ப் பாமாலை யொடுபிள்ளைத் தமிழொன் றும் நயந்து ரைத்தார், கூடுபுகழ் ஓங்குசிர வணபுரக்கௌ மாரமடங் குலவு சைவம், தேடுபுகழ் நாவலவர் கந்தசா மிப் பெரியார் தெளிவி னம்மா.

---

பவானி போர்டு உயர்தரப் பாடசாலைத் தமிழாசிரியர்

உயர்சைவத்திருவாளர்

## து. குமாரசாமிப் பிள்ளையவர்கள் இயற்றியன.

### எழுசீர் ஆசிரிய விருத்தங்கள்.

காஞ்சிவாய்ப் பேரூர்க் கண்ணுறை யமலை கருணைமே
வியபரை கனிந்த, தீஞ்சுவைக் கனிவாய் மொழியுமை பட்டிச்
சிவபிரான் பங்கினிற் றிகழ்வா, ளாஞ்சிவைக் கினிய வழகிய
பிள்ளைக் கவிதையு மாலையு மணிந்தா, ஞைஞ்சுவைத் தறிய
வன்னவன் யாரே னவிற்றுவ னினிமையொ டியானே. (க)

அருமறைச் சிரத்து மன்பர்த முளத்து மணிமயிற்
புறத்தும்விட் டகலான், கருமுறைப் பிறவிக் கடலினின்
றேறக் கடையனைக் கருணையா லாண்ட, மருவுறை கடப்ப
மலரணி குகேசன் மலரடி பணிபவன் மாதைக், குருபரன்
முருக தாசனன் மரபிற் கொட்பொடுந் தோன்றிய குண
வான். (உ)

சிரவண புரத்துத் திகழ்தவ சீலச் செம்மல்ரா மானந்த
தேவன், றரவண தவத்தின் கோலமே பூண்டோன் றண்ட
மிழ் நூல்பல கற்றுச், சரவண பவற்குப் பற்பல நூல்கள்
சாற்றினேன் கந்தசா மிப்பேர், வரவண னீற்றுக் கவசமு
மக்க மணியுமே திகழுமார் பினனுல். (ங)

பேச்செலாங் கவிதை யென்னலா மன்றிப் பேசிட
வெடுத்திடு நாவின், வீச்செலாங் கவிதை விழிப்பெலாங்
கவிதை வியப்பொடு விடுத்திடு மொவ்வோர், மூச்செலாங்

கவிதை முன்னுவ கவிதை முறைமையொ டிவ்வெலாங்
கவிதை, யாச்சொலா நின்ற வவ்வணல் பெருமை யாவரே
பகர்ந்திடற் பாலார். (௪)

---

மருதாசலப் பிள்ளைத்தமிழ், மருதீசர் நவரச வண்ணத்திருப்புகழ்,
ஓதிமலைப் பிரபந்தங்கள், சென்னிமலைப் பிரபந்தங்கள்,
சிவமலைப் பிரபந்தங்கள், சசிகாந்தன் — நாவல்,
வேளாள புராண வசனம், புலமை நூல்,
அகத்தியர் தமிழ் வாசகம்,
இந்திய பத்திரிகைத் தொழிலியல் முதலிய
நூல்களின் ஆசிரியர்
கோயமுத்தூர் — விளாங்குறிச்சி

## வி. நா. மருதாசலக் கவுண்டர் இயற்றியன.

### வெண்பாக்கள்.

குராமானந் தத்தமிழாற் கோதறுபிள் ளைப்பாட்
டிராமானந் தக்குருதாட் கேற்றிப் — பரானந்தி
பாக்கொழித்த கொங்கைநங்கை பட்டித் தலத்திதுதிப்
பாக்கொழித்த னன்சிரம்வைப் பாம். (௧)

அன்னவனெண் சந்தவண்ண மாசுமுத னற்கவியும்
சொன்னகந்த சாமி துறைத்தமிழ்நூல் — மன்னறிஞன்
முல்லை யிடைக்குறையும் குஃறொடர்ந்த அன்மொழியும்
தொல்லை யெனத்துறந் தோன். (௨)

தித்திப்பி லுந்தெவிட்டாச் செந்தமிழின் பச்செழுந்தேன்
சத்திபத்தி சித்திவித்து சான்றிடுவிற் — பத்திவெற்பு
மட்டீ சுரிகுழலி மாதவத்தோர் போதவத்தோர்
பட்டீ சுரிபிள்ளைப் பாட்டு. (௩)

பிள்ளைத் தமிழ் ; மாலை : பேருலகோ ரேத்தியுய்வான்
விள்ளுகந்த சாமியுயர் மெய்ஞ்ஞானி — கள்ளமர்பூ
நந்தனஞ்சூ ழாமாத்தூர் ஞானகொலு வீற்றருளும்
எந்தையருட் சேயருட்சே யே. (௪)

வெண்பாப் புலியருடன் வீறம் புலிப்புலியர்
ஒண்பாப் பெதும்பைபா டும்புலியர் — எண்பாயும்
சந்தவண்ண வான்புலியர் தாமும் வணங்குபுலி
கந்தசா மிக்கவிக்கோன் காண். (௫)

செந்தமிழ்முன் ஞரியம்பின் றேர்ந்துமலை யாளநடுக்
கந்தசா மித்தவசி கட்டுதமிழ் — சந்ததமும்
பாடிப் பரிந்துபச்சை நாயகித்தா யன்பருளும்
கூடிமிக வாழிதொண்டர் கும்பு. (௬)

மாதவரா மானந்த வள்ளலடித் தொண்டொன்றால்
காதலித்த பேரின்பங் கைவரப்பெற் — றீதலிசை
நாட்டினள்கௌ மாரிரங்க நாயகிதாய் பேரையம்பாள்
பாட்டினங்க ளச்சிற் பதித்து. (௭)

---

ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் மாணாக்கரும்
ஸ்ரீ தண்டபாணிமூர்த்தி ஆலயப் பூசையினருமான
## ஸ்ரீ. சின்னசாமி சுவாமிகள் இயற்றியன.

### இரட்டையாசிரிய விருத்தம்.

சதுர்மறைக ளுடனுக மத்தொகுதி யாவுமுணர்
தக்கமே லவர்வாழ்வதாஞ்
சகலகே வலமற்ற சாசுவத மெய்முத்தி
தானமாத் தருபேரைவாழ்

விதுவுடைய் சடிலப் பிரான்பட்டி நாயகர்
விரும்பிடப் பாலமர்ந்த
வியனூர்ச வுந்தரிய மிகவுந்து பைங்கதிர்
விரிக்குமணி மேனியின்ப

மதுமலர்த் தாட்பச்சை நாயகிநன் மாலையொடு
மருவுபிள் ளைத்தமிழுமே
மகரநிறை வாவிபல மல்கியுள சோலைகொண்
மகத்துவச் சிரவைமன்றிற்

பொதுநெறிக் கவுமார குருவிரா மானந்த
புனிதகுரு வருள்பொருந்தும்
புத்தமுத நிகர்கந்த சாமிமோ லோன்சொனூன்
போற்றுநற் கருள்பெருகவே.

---

ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் மாணுக்கரும்
சபாலய பூசைப் பணியினருமான

## ஸ்ரீ ரங்கமுத்து ஐயா அவர்கள் இயற்றியது.

### சந்தக்கவி.

தனதானதந்ததானன தனதானுதந்ததனன தனதான.

பதியானகும்பமாமுனி கலைராமானந்தபரம குருதாள்கள்
பதிவானகந்தசாமிமெய் யுணர்வேதோய்துங்கனெமது தபபானு
மதியாறுகொன்றைவேணியர் வளர்பேரூர்தங்குமரகத மெய்நாம
வளர்தேவிமுன்பிமாசல மிசையோர்சேயென் றுபுரியும் விளையாடல்
விதியானவின்பமீடுத மிழும்வானுரும்பரமிழ்தி னிதாகும்
வியன்மாலையுஞ்சொனுனிவை தமையேடாயன்பர்துதிசெய் திடுமா
புதிதானபொன்கொடேபுரி தவமார்தாயெங்களனைகொள் குரு [று
புகலாரரங்கநாயகி யிசைவார்பேரின்பநிலைமை கொடுவாழி. [நாதர்

---

இந்நூலாசிரியர் மாணாக்கர் புஷ்பப்பணிவிடை

## குமாரசாமி ஐயா இயற்றியன.

### இரட்டையாசிரிய விருத்தம்.

அரனனையகுறுமுனிவ னமிசராமானந்த
னற்புதத் திருவருளி ஞ
லரியசெந்தமிழ்வாரி முழுதுமுண்டுமிழ்வதென
வவனிமிசை யளவிலா த
திரமுடையபக்தமான் மியமுதற்பெருமைமலி
சிவதலபு ராணங்க ளுந்
திருவளத்தோத்திரத் திரள்களுஞ்செய்தன்பர்
சிந்தனையு ளின்புதேக் கிச்
சிரவையினின்மருவியென திருவினையுமறவருள்செய்
தேசிகக் கந்தமூர்த் தி
தேவர்புகழ்பேரையூர்ப் பச்சைநாயகியம்மை
திருவுளங் களிசிறப் பத்
தரமுற்றிசைந்தபிள் ளைத்தமிழுமாலையுந்
தயவோடு தந்தருளி னன்
தவநமக்கென்றிதைத் தாங்கிப்படித்தவர்கள்
சத்தியக் கதிபெறுவ ரே. (க)

### எழுசீர் விருத்தங்கள்.

சிரவையி ராமா னந்ததே சிகன்றுள் சிந்தனை செய்திடு நலத்தாற், றிரமுறு பிரமச் சாரியாம் விரதச் சிறப்பொடு மடத்தினிற் றிகழ்ந்து, கரவறு மடியர் தாயெனச் செப்பக் கனிவொடு மவர்பணி புரிந்தே, வரம்பெறு தன்மை வாய்ந்தவி ரம்மை மகிமையென் னளவின தாமோ. (உ)

அரியவிந் நூலை யுரியதன் பொருளீந் தச்சிலிட் டன்பி னர்க் குதவிப், பெரியமெய்ப் பொருட்செட் டிச்சிமா தவந் தோய் பெற்றியை நாடிடிற் பூர்வத், துரிமையின் முருக நாம மே மறவா துருச்செபித் துய்ந்ததாப் பகர்சீர், சரியென லாமிவ் வரங்கநா யகியாந் தாயினை யென்றுமே வாழி. (௩)

---

சிரவணபுரம் கௌமாரசபை அடியவரிலொருவராகிய
விளாங்குறிச்சி பெரியதோட்டம்

## திருவாளர் சுப்பண கவுண்டரவர்கள் இயற்றியது.

அறுசீர் விருத்தம்.

சீரோங்கு கொங்குநாட் டின்முகநேர் பேரைதனில் சிறந்து மல்கும், பாரோங்க வருள்மலியும் பட்டிலிங்கர் பதிக முந்தன் பாகத் துள்ள, பேரோங்கு மரகதவல் லியின்பிள் ளைக் கவிமாலை பேசி விண்டான், நாரோங்க வவதரித்த னங் குருக்கந் தானந்த னல்லோன் றானே.

---

கோயிற்பாளையம்

## ஸ்ரீமத் எறிபத்த சுவாமிகள் இயற்றியது.

எண்சீர் ஆசிரிய விருத்தம்.

பூவர்க்கத் துயர்ந்தகஞ்சப் பூவே போலப் புவியினுயர் திருப்பேரூர் மன்னி வாழும், தேவர்க்கத் துயர்பரன்பட் டீசன் வாமத் தேவிபச்சை நாயகிமேற் செய்ய தாய, பாவர்க் கத் துயர்பிள்ளைத் தமிழ்ப்பா மாலை பகர்ந்தனனெற் கருந் துணையாய்ப் பாரில் வந்தோன், யாவர்க்கு மினியபுகழ்க் கந்த சாமி யெனும்பெரியன் சந்தவண்ண மிசைவல் லோனே.

---

இந்நூலாசிரியர் மாணுக்கர் சிரவணம்பட்டி

## தம்பி என்கிற மருதாசல ஐயா இயற்றியன.

### எண்சீர் விருத்தங்கள்.

மலயமால்வரை வீற்றிருந்திளமை வந்தசெந்தமிழ் மானிடர்க்கருளுங், கலயமாமுனி யாமிராமானந் தப்பிரான்வழித் தோன்றலாக்கவின்றே, யுலகினல்லவா நெறியெலாமோங்க வொயில்குலாஞ்சிர வையிலெழுந்தருளி, யிலகுகந்தசா மிக் குருமணிதா னிசைத்தநூலினம் பற்பலபலவே. (க)

அன்னவற்றுண்மே லுச்சிதம்பரம்வா ழம்மைபச்சைநாயகிபிள்ளைத்தமிழும், நன்னலம்பொலி மாலையுமிந்நா ணற்பொருட்செல விட்டச்சிலேற்றிப், பன்னலத்தடி யர்கொளவளித்த பான்மைத்தாய்ரங்க நாயகியம்மை, யிந்நிலத்தினனுள்ளநாளளவு மேய்ந்தமெய்ப்புகழ்க் கெல்லையின்றின்றே.

---

சிரவணபுரம் கௌமாரமடாலயம் சபை அடியவர்களில்

ஒருவராகிய கணவாய்ப்பாளையம்

## வைத்தியம் இராமசாமி ஐயா இயற்றியன.

### அறுசீர் விருத்தம்.

சிரவைக்கௌ மாரமன்றத் தேசிக னுக்கன்பார்ந்த
சுரர்புகழ் கந்தசாமித் தூயவன் பேரூர்ப்பச்சை
மரகத வல்லித்தாய்க்கு மாபிள்ளைத் தமிழுமாலை
சரபவண் ணத்தாத்தன்போற் சாற்றின னன்பினாலே. (க)

## நேரிசை வெண்பா.

பேரூர்வா ழம்பிகையின் பிள்ளைத் தமிழ்மாலை
பாரூரூர் தோறுமன்பர் பாடியுய்யச் — சீரூகி
தாயரங்க நாயகியார் தங்கைப்பொன் கொண்டச்சிட்
டேயரங்க மேற்றலின்ப மே. (உ)

---

இந்நூலாசிரியர் மாணாக்கர் சிரவணம்பட்டி

## பாப்பையா என்கிற மருதாசல ஐயா இயற்றியன.

### எழுசீர் விருத்தங்கள்.

மங்களப்பொதியை வரைமுனிகலையாய் வந்தராமானந் தக் குருகண், பொங்கருளூததி முங்கித்தேக்கெடுத்துப் பொங் கவிற் கொங்கின்பாக் கியமாஞ், செங்குணப்பத்தர் மான்மிய முதலாந் தெம்பமைநூல்பல பொழிந்தா, னெங்குருகந்த சாமிப்பேர்வள்ள லெண்டிசைபரப்புசீர்த் தபனன். (க)

இச்சையில்லவரு மிச்சைகொள்பேரை யிறையிடம் பொலிபெருங் கருணைப், பச்சைநாயகியை னம்மைபொன்ன ளினப் பதத்தினுக்கரும்பிள்ளைத் தமிழு, மிச்சையரேனு முரைக்கிலுள்ளுருக்கும் மிகுசுவையலங்கலும் புனைந்தான், செச்சை யனமிசன் கந்தசாமிப்பேர்த் தேசிகன் றேசவிர் தவனே. (உ)

கொள்ளைநூல்ரசத்தைப் பிழிந்துமெஞ்ஞானக் கூட்டு டன்கலந்ததென் றிசைக்கும், பிள்ளைப்பாவலங்க லெனுமிதை யன்பின் பெருக்கினுற்சந்தத முரைக்கிற், சள்ளைமுற்றகலும் மதிநிதிபெருகுஞ் சாம்பவிபதத்தன்பு வளரும், பிள்ளையென் றன்னை யேந்திப்பாலருத்தாப் பேரின்பவாழ்வும்வந் துறுமே.

இந்தநூலச்சிட் டன்பினர்க்குதவி யிசையமைந்திட்டதா ரென்னிற், செந்தகைராமா னந்தமாமுனிவன் றிருவருட் செல்வியா யவன்றுட், சந்ததமேத்துந் துறவியாய்மடத்திற் றவத்தர்தொண்டாற்றிவாழ்ந் திருக்கும், முந்துறுபவத்தில் முருகம்மைத்திருப்பேர் மொய்ம்பளா மரங்கநா யகியே. (ச)

மதனனங்கணைகள் தைத்திடாமனத்தள் மாட்சிமைக் குருபத மன்றிச், சதமொன்றுமுலகி லின்றெனவறியுந் தவப் பெருக்கோங்கிடும் பெரியள், மதலையிலெமையு மதித்தன்பு மொழிசொல் வாஞ்சையள்தாயென வுரைக்கு, மிதமுளரங்க நாயகியம்மை யிசைதழைத்தென்றென்றும் வாழி. (ரு)

---

கோ. தா. செட்டிபாளையம் திருவாளர். ரா. நஞ்சப்ப கவுண்டர் குமாரரும் நால்வகைத் தோற்றத்தார் நன்மகாநாடு (அல்லது) கொலைமறுத்தல், கந்தன் சித்திரபந்தனமாலை, கந்தன் வெண்பாமாலை, ஈச்சநாரி விநாயகர் வருக்கவெண்பா அந்தாதி, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேச வெண்பாமாலை முதலிய நூலாசிரியருமாகிய

## திருமிகு. R. N. கல்யாணசுந்தர கவுண்டரவர்கள்

இயற்றியன.

### அறுசீர் விருத்தங்கள்.

கொங்குமலி காஞ்சிநதி சூழ்பேரூர்ப் பட்டீசக் கூத்தன் வாமப், பங்குமலிந் தின்பநலம் வேண்டுவார் வேண்டியவா றளிக்கும் பச்சை, தங்குமர கதவல்லி தாளிணையிற் சிரவை யோன் சாத்தியேத்துந், துங்கமலி சீர்பிள்ளைத் தமிழ்மாலைப் பொருள்கடலாய்த் துலங்கு மாதோ. (க)

மாதைநகர் வாழ்முருக தாசனுப தேசமொழி மாறு மெய்யன், பேதையருக் கோதியருள் சீராமா னந்தகுருப் பெரியோன் றுளே, வாதையுறு மிருவினைக்கு மாமருந்தாய்ச் சேவித்தோன் மாலின் றொண்டர், காதைபல தலச்சரித முதலனந்த தமிழ்ப்பனுவற் கவிசொல் வோனே. (உ)

தெண்டிரைசூ ழுலகத்தே ஜீவகொலை தீர்க்கவெனச் செய்நோன் புள்ளோன், அண்டினர்கள் வீடடைய நெறிகாட்டு மாற்றலுளோ னறிவின் மிக்கோ, னெண்டிசையும் புகழ் சிரவைக் கௌமார சபைத்தலைமை யேற்றமேலோன், கண்டி கையுந் திருநீறும் புனைகந்த சாமிதவக் காவலோனே. (ங)

---

கோவை வைத்தியம் ஜோதிடம்

## M. சுப்பிரமணிய செட்டியார் இயற்றியன.

### எழுசீர் விருத்தங்கள்.

பரவைதன் கேள்வன் பண்ணிசைப் பாடிப் பரவுபு பணிந் திடப் பேறூர், வரப்பர மேசன் மகிதலத் தியாரும் மனத்தி னுல் கணித்திடா தியலுங், கரவமை யுருவப் பள்ளனுய் வந்த கண்ணுதல் பிறைசடை முடியான், சிரசினிற் கங்கை தரித்தவ னிடபாற் சிற்சத்தி பச்சைநா யகிக்கே. (க)

பிள்ளைதன் கவியாம் பிரபந்த மொன்றும் பேசுசீர்ப் பாமாலை யொன்று, முள்ளுற வுணர்வோர்க் குவப்புமிக் குறவே யுரைத்தனன் சிரவையின் மருவுந், தெள்ளுசீ ரிராமா நந்தசற் குரவன் திருவடி கருதிய மனத்தன், கள்ளமார் கவிஞர்க் கேறுபோல் பவனுங் கந்தசா மிப்பெயர்த் தவனே. (உ)

---

சிரவணபுரம் கௌமார சபை அடியவரிலொருவராகிய
கணவாய்ப்பாளையம்

## சின்னப்ப செட்டியார் இயற்றியன.

### அறுசீர் விருத்தங்கள்.

காலவன் காமதேனு கலைமிகு வியாசனுதி
சீலமா முனிவர்பல்லோர் சிறந்தபூ சனைகளாற்றி
மேலவாம் பேறுபெற்ற மேன்மைசேர் பட்டியீசன்
பாலரை மேனிகொண்ட பச்சைநா யகிதனக்கே. (க)

கண்டொடு தேனும்பா லுங் கலந்தெனும் சொற்களாலே
விண்டனன் பிள்ளைநா லும் வியன்மிகு மாலையொன்று
மண்டரும் மெச்சுசீர்சா லணிபொழிற் சிரவைவாழும்
பண்டிதன் கந்தசாமிப் பரமசற் குரவனம்மா (உ)

அருணிறை சிரவைவாழு மரங்கநா யகிதா யம்மை
திருமிக வுடையாளிந்நூல் செகதலத் தவர்கள் தேறப்
பொருள்மிக வழங்கியச்சிற் பொறித்துப்புத் தகமாச் செய்து
குருபரனருளைப் பெற்றுள் கோதிலா ளென்முன்னுளே. (ங)

---

தேவராயபுரம் ந. இராமசாமிக் கவுண்டர் குமாரர்

## ரா. இராமசாமிக் கவுண்டர் இயற்றியன.

### எண்சீர்ச் சந்தவிருத்தம்.

*தந்ததன தந்ததன தந்ததான.*

சந்தமிகு வண்கவிபெய் தண்டபாணி
சந்ததமு வந்தருள்செய் விந்தையாலே
தந்தசிவ கும்பமுனி யெந்தைராமா
னந்தனரு ளன்புதவ மைந்தனுவார்

கந்தமுனி யென்றுவள ரெங்கள்சோதி
கந்தமலர் சிந்துமது வுந்தியோடும்
நந்தனவி யன்சிரவை யின்கண்மேவி
நந்தமிழி லின்கவியி யம்பினரே. (க)

## வெண்பா.

உள்ளத் துறுபத்தி யோங்குபச்சை நாயகிமேற்
பிள்ளைக் கவியொன்று பேசினன் — விள்ளுதமிழ்ச்
சிந்துமறை நாவான் சிரவைக்கௌ மாரச்சீர்க்
கந்தமுனி பாதங் கதி. (உ)

## கலிவிருத்தம்.

தரங்க நேரருள் தாய்பச்சை நாயகி
வரங்க ளேதர வாழ்த்துபிள் ளைக்கவி
யரங்க மேறிட வம்பொரு ளேதரு
மரங்க நாயகி யார்பணி சீரிதே. (ந)

---

க்ணபதி பிராஞ்சு போஸ்ட் மாஸ்டர்

# R. திருமலை அய்யங்கார் இயற்றியன.

## கட்டளைக் கலித்துறை.

சீர்தந்த செந்தா மரையின் றிருசேர் சிரவணன்வெண்
வார்தந்த மாவின் வலியடர்த் தான்றன் வயங்கிதயத்
தேர்தந்த மீட்டுக் கினிதெனு மன்பர்க் கடக்கமென்றே
யோர்தந்த றிந்த வொருகந்த சாமி யுயர்தவனே. (க)

## அறுசீராசிரிய விருத்தங்கள்.

உயமாலன் பர்சரித மோரேழா யிரங்கவியா லும்பர் போற்ற, நயங்கொளுஞ்செம் பாகமதாய் நற்சந்த முங்கலந்து நவின்ற மேலோன், வயணவமா மதத்தாழ்வா ரெவரேனு மித்துணைப்பா வகுத்தி லாராற், கயக்கொழிமா முனிவரனுங் கந்தசுவா மியையவர்மேற் கழற லாமே. (உ)

ஆகுபிர பந்தவகை யத்தனையு மறைந்திட்டு மடியா ருய்ய, வாகுபுகர் வாரமெலா மாதவன்மா தேவன்சேய் வகை யோர் காதை, ஏகுமள வினிதியம்பி யெண்ணிலமா நலம்புரியு மேந்த லாவான், நாகுவரி வண்டுணும்பூஞ் சோலைசிர வைப் திநா வீர னமே. (ங)

## நேரிசை வெண்பா.

தேரூர்வான் றென்றற் செயித்தகந்த சாமிசசி
யாரூர்வான் செஞ்சடில னட்டுகந்த — பேரூர்வாழ்
பச்சையம்மன் பிள்ளைத் தமிழ்மாலை பாடியிட்டா
னிச்சகத்தா ரேத்தியுய்தற் கே. (ச)

சாத்துகவிகள் முற்றுப்பெற்றன.

உ

தேவி சகாயம்.

# திருப்பேரூர்ப் பச்சைநாயகியம்மை

# பிள்ளைத்தமிழ்.

## பாயிரம்.

### விநாயகர்.

*யானைமுக னென்றுசடை யிற்பா சடைக்கூ
விளந்தூ விளந்திங்களோ
டிதழியர வத்தம்பு மணியணிப் பணியணியொ
டெண்ணுமுக் கண்ணுமெய்தி
யானைமுக மொன்றியவிர் கோனைமுதிர் சோனைநிக
ரென்றருண் மதம்பெய்வானை
யிதயமலர் விரியவெழு முதயபரி தியினைநம
திணைவிழிமு னணையநினைவாம்
தேனைமுக ரலர்கொண்ட கானைமுக ரென்றுதிர்த்
தலைமடுத் தலைமடுவினந்
தேங்குமடை யுடையவளி கனியுகுத் திரதந்
திருக்காஞ்சி யிற்பெருக்கி

* யான் ஐமுகன் எனப் பிரித்துக்கொள்க.

வானையெட் டியதண் டலைத்தண் டலைத்திரள்கொள்
வண்டலைத் திடுபேரைவாழ்
மகிமைமர கதவல்லி யம்மையிசை நிறைசெல்வ
வண்டமிழ்க் கவிதழையவே.

சற்குரு துதி.

பொத்தியம லப்பிணியி லெய்த்திசையு மறிவிச்சை
போந்தசெய லற்றவென்னைப்
புறமாய மாயையின ளித்தகம யக்கம்
பொருந்தாம லேதிருந்தப்
பத்திநிலை யாருபா சனைமார்க்க மீதுறப்
பதிவித்தொல் பதிவித்திடும்
பரமதே சிகவிரா மானந்த நாதனிரு
பாதமுடி மீதுமுடிவாம்
சுத்திபொலி காமதே னுக்கன்றி னடிதலைச்
சுவடுதன்மு டித்தலத்திற்
ரேய்பட்டி லிங்கப்பி ரானுளமு ருக்கருட்
சுந்தரக் கிளியாயிகப்
பித்திசையு மென்னையர் சித்திமுத் திப்பெரும்
பேறுறச் சேர்த்துகருணைப்
பிரவாக மார்விழிகொள் பேரைமர கதவல்லி
பிள்ளைத் தமிழ்க்கருளவே. (உ)

நூற்பிறப்புக் காரணம் முதலியன.

பழுத்திசைய ருட்பெருக் கார்பேரை வாழ்வான
பட்டிலிங் கேசன்வாமப்
பாற்குலவு மிச்சைநா யகிபச்சை நாயகிப்
பரைகுழவி யாய்ச்செயாடல்

வழுத்திசைப் பிள்ளைத் தமிழ்ப்பனுவ லிதனையிசை
வாணியென் கைப்பொறியினுன்
மனைக்குடவி ளக்கிலுற வைத்தவிதி தன்னையற
மாற்றியற மாற்றிசைபொனல்

அழுத்திசையெ ழுத்துச்சி மிசையமைத் துயர்வெற்
பணித்தலைம ணிச்சுடரென
வரங்கேற்று நன்மணங் கண்டுதா யம்மையொ
டரங்கநா யகியாம்பெயர்

முழுத்திசை கமழ்ந்திடப் பெறுசெல்வி யெனதுகுரு
முதிரிரா மானந்தமெய்
மூர்த்திதவ புத்திரியு ளார்த்தியிசை பா னெலா
முற்றுறப் பெறுகமாதோ.

பாயிரம் முற்றிற்று.



ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்,

கௌமாரமடாலயம்,

சிரவணபுரம்.



பச்சைநாயகியம்மன்.

உ

குருவே துணை.

# நூல்.

## காப்புப் பருவம்.

---

### திருமால்.

பத்தித் தரங்கக் கரங்கொண்டு பேரொலிப்
பாட்டிசைத் துத்தவளவான்
பாற்கட லசைத்திடக் கைமருவு சக்கரம்
பணிலநழு வாதொளிகுலாந்

துத்திப் பணுமகுட மோரா யிரத்தின்மேற்
றாண்டா விளக்கிலிணைநீர்
சூடிகைமணி கால்சேட பாயலிற் றுயிலுமச்
சுதனுபய பதநினைகுவாம்

சித்தித் திறத்தனபர் புத்தித் தலத்தலகில்
  சிற்சுகா நுபவவின்பந்
தேனிப்ப வென்றுந் தெவிட்டாது நல்குமெய்த்
  திருவருட் கடலைநாதஞ்
சத்திக்கு நூபுரத் தாண்மலர்கொ ளம்மையைத்
  தண்காஞ்சி வாய்ப்பேரையூர்
தங்கியற் பச்சைமர கதவல்லி யைப்பெரிது
  தளராது காத்தமைபவே. (க)

## பரமசிவன்.

தானா தனதன தய்யனத்தாத்தன.

சேணார்கதிர்வல மாமேருவையெதிர்
  சேரார்குலமற வில்லெனக்கோட்டினர்
சேலாகியகொடி யோன்வாழிகளொடு
  தீய்வாணுதல்விழி விள்ளுறக்காட்டினர்
தேனேர்கவிபொழி யாரூரனைமனை
  சேரார்வமனதி னுள்ளுறக்கூட்டினர்
திராவகமிகை யார்காளியொல்கவொர்
  சீர்பாதமலரி னள்ளணித்தோட்டினர்

மாணாதரநிறை வார்வாத்புரியின்
  வாழ்வானவனவில் செய்யுள்பற்றேட்டினர்
வான்மீதினுமுல கேய்சானவிநதி
  மாடார்திறல்குறை செய்சடைக்காட்டினர்
மாறுவருளமு தார்பாலகன்மண
  வாய்நீள்கரமிசை துய்யமெய்ப்பாட்டினர்
மாயோனறிவரி தாநீளிருபத
  வாரீசமலர்க ளுள்ளம்வைத்தேத்துதும்

வீணுவிமையவர் பானீள்பகைகொடு
மீளாதமைசிறை யல்லலிற்ருேய்த்தவர்
வீருருலகன லாலேயடலேசெய்
மேவார்களுடல்கள் புள்ளுணச்சாய்த்திடு
வேலாயுதவடி வாவேள்கரதல
மீதேயவிர்தரு செல்வியைத்தூத்திரை
வேலாவலயம ஞனுன்மகளென
மேனுள்வளர்தரு பிள்ளையைத்தாட்டுணை

பேணுதரநிறை வார்மாதவருயர்
பீடாரிருதய கிள்ளையைப்போற்றெமொர்
பேராசைகளென நீளார்கலிபொலி
பேய்மானுளமிசை கள்ளமுற்ருேச்சுபு
பேராவொளியவிர் மாமேருவைநிகர்
பேறேய்திருவருள் வெள்ளமுட்கூட்டியொல்
பேசாமகிமைகொண் ஞானுகரமருள்
பேரூர்மரகத வல்லியைக்காக்கவே. (உ)

## பட்டிவிநாயகர்.

தத்தனதானனந் தானனத்தாத்தன.

அத்தியின்மேலெழுந் தார்திரைக்காட்சியி
னற்புதநேர்தரும் பேரருட்சீர்த்தியை
யக்கமுளார்தினந் தேறிமிக்கேத்திட
வத்தியினுனனந் தோய்சிறப்பேற்றியல்

பத்தியினீள்பசுந் தூர்வைநற்பூத்திரள்
பற்பனிவேதனந் தாமமைப்பார்க்குயர்
பக்குவர்கூடுமின் பார்கதிச்சீர்ப்பருள்
பட்டிவிநாயகன் ருள்களைப்போற்றுவல்

புத்திரிபோலணைந் தோர்கவிக்காத்திரை
பொற்புறவீசுகங் காநகர்ப்பாற்றிகழ்
புத்தடிநோவவின் பார்கவிப்பார்த்திபர்
பொற்றொடிசூடமின் றோய்கரத்தேற்றிடு

சத்தியைநாடொறுந் தாணிணைத்தேத்துநர்
சக்ககலாதமைந் தோகைமிக்காட்டயர்
தற்கிணைமாணுறும் பேரையிற்சீர்த்தியல்
தற்பரைநீள்பசுந் தோகையைக்காக்கவே. (ந)

## முருகக்கடவுள்.

தனத்தானதனதன — தய்யனத்தாத்தன.

தருப்பால்வாழிமையவர் தமைக்கோதார்சிறைபுரி
சயச்சூர்மாவினதணி மெய்பிளப்பாக்குமோர்
தனிக்கூர்வேலமைதரு புயக்கோமான்மலைமுடி
தனிற்பேராடல்கணவில் செய்யபொற்றாட்கொள்சேய்
தவச்சீர்நாரதன்மயன் மகத்தூடாமிகன்மலி
தகர்ப்பாலூர்தரும்விறன் மல்குமெய்க்கீர்த்திதோய்
தனைத்தானேர்குருபர னிருக்கோதாயெனமிகு
தருக்கார்வேதனைமுன மெய்த்திடக்கூய்ப்பொனூர்

பொருப்பார்பேரிடியதிர் வெனக்காணுன்முடிமிசை
புடைத்தேகாவலுளமை துய்யன்விற்சீர்த்தகோ
புரச்சோணசலமிசை யருட்கார்கோளலைநிகர்
புதுப்பாவோவறநுவன் மெய்யனைக்காட்சிசால்
புனக்கோன்வானிறைமக ளுளத்தாவுவகைசெய்
புயத்தோவாதமையவொர் கிள்ளையிற்கூட்டியாள்

புயற்போனீடருள்பொழி விழிச்சீ‡ரீர்நவமுறு
புகழ்த்தேவாதிபனடி யுள்கிமிக்கேத்துவாம்

மருப்பூவேய்பொழின்முகி லுடுத்தோய்வானணியிம
வரைக்கோன்மாதவவரு ணள்ளுருக்காட்டியோர்
மறுக்கூடாவடியவ ருளத்தோடாரணமுடி
வரச்சிரார்மணமலி பொய்கையிற்பூக்கணே
மகட்பேருயிசைதவ மிகத்தோடார்பரசுகம்
வளர்ப்பாளேய்தரவளர் செல்வியைத்தோற்றுரு
மதிப்பாநூலிடையிடர் பெருக்காமாறெழுமிள
மணிப்பூணார்கனதன வல்லியைப்பார்த்துநே

ரருப்பாமாசுகமெறி தரச்சார்வேளுடலடு
மணிக்*கோமாலுறுமெழில் பல்கருட்கூர்ப்பினீ
ளணிக்காதார்குழையணி விழிக்கூர்வேலுமையையெ
மகத்தோவாவருமறை மௌலியொப்பேற்றமா
ணலர்த்தாளேய்சிவையினை நினைப்போர்திவினைமுழு
தறுத்தாண்மாகணபதி தள்ளையைப்பார்க்கணே
யமைப்பாரூர்பலவினு மிகச்சீரூர்பெருமைகொ
ளருட்பேரூர்மரகத வல்லியைக்காக்கவே. (௪)

## பிரமதேவர்.

தானன தத்ததனதன தய்யனத்தாத்தன.

போராடுதுட்டருடன்மிசை வல்லையிற்போய்க்குடர்
பூணேமிபற்றுகரதல னள்ளுகொப்பூழ்ப்பொலி
பூமீதுதித்துவிரியெழு பவ்வமெய்ப்பாற்புனை
பூமாதெனைப்பில்வளமலி செல்விபெற்றூற்றல்கொள்

---

*கோ — நெற்றிக்கண். ‡ ஈர்நவம் — பதினெட்டு.

நாராயணற்குதவுமுயர் கைகளெட்டேற்றவிர்
ஞானகரப்பன்மறையின நல்கணிச்சீர்த்தியி
னுமாதினைத்தனிறைபொலி யில்லெனற்பாக்கிய
நாலானனப்பிரமனையுள் வைகவைத்தேத்துது
மாரார்முடிப்பரமசிவ னுள்ளருட்பாப்பொழி
யாரூரனுற்றளவில்பொரு ணல்கெனக்கேட்டிடி
லாமீதுமுத்தியருள்பதி யில்லெனப்போக்குத
லாகாதெனத்தனுளமிசை யுள்ளிநெற்கூழ்ச்செயொல்
பேராடன்மிக்கியலவவிர் பள்ளனெப்பாய்த்தளி
பேர்காலையொப்பினலமலி பள்ளியிற்றேற்றிடு
பீடேர்மறைத்திறைவனெடொர் பள்ளியிற்சேற்றமை
பேரூர்கொள்பச்சைமரகத வல்லியைக்காக்கவே. (ரு)

## தேவேந்திரன்.

தனதனதய்ய தய்யானனத் தாத்தன.

தருநிறைசைய மெல்லாமணக் காட்சிசெய்
சரண்முருகையன் வைவேலுரத் தோய்ப்பமை
தருமகணல்கு மெய்மாதவச் சீர்த்திகொ
டலைவனைவெள்ளை யைராவதப் பாற்கடல்
பருகிடுமையி லெய்தார்வனைச் சீர்ச்சசி
பதிதருமையன் மையார்விழித் தோட்கமழ்
பரிமளமெய்கொள் வல்லோனைமிக் கார்த்தெதிர்
பகையடுவைர வொள்வேலனைப் போற்றுதும்
நிருபனெர்கையில் வெள்வாள்பிடித் தோச்சுமு
னிசியிதிலெல்கொ ளல்லோனுதித் தேக்கமு
ணிறையுமெனுள்ள மொவ்வாவியப் பேற்றிட
நினையெனவிள்ளு மெய்யோனுவப் பாய்த்தொழ

வருமுயர்செல்வி யைவார்செவித் தோட்டினை
மதியெனவெய்தல் செய்காரணத் தாட்கதிர்
வளமலிசெய்ய விர்பேரையிற் ரேற்றெழின்
மரகதவல்லி கௌமாரியைக் காக்கவே. (கூ)

## இலக்குமி.

தானன தனதன தனதத்தத்தன.

கார்கோளென்ருெருபெயர் கடலுக்கமைத்தொளி
கான்மேகநிறவரி யகலத்தினிற்கமழ்
காணர்துளவுமணி யுடனுற்றுளத்திடை
காணுதசுகநிறை வருள்பொற்புமிக்கவிர்

சீர்நீடுபவளவில் வடிவுற்றபொற்கொடி
சேலானகொடியினி லுலகத்தை வெற்றிகொள்
சேயோனையுதவிய வருண்மெத்திலக்குமி
சீபாதமுளமிசை கருதிப்பழிச்சுவல்.

பார்மீதிலுளமலை தொறுமுற்றிசைத்துதி
பாடார்வமிகுபுல வருளத்தினித்தியல்
பாகானமொழிகள்கொ டமையச்சமுற்றடு
$பாதாரமிகமலி பவளப்பொருப்பயில்

பீர்மேவுகனதன வருவிப்பனிக்கிரி
பேணர்வமகடனை யுறுபட்டிவித்தகர்
பேரோகைபெறவரு ணிறைகட்சிறப்பமை
பேரூரின்மரகத மயிலைப்புரக்கவே. (எ)

---

$ பாதாரம் — ஒளி.

## சரசுவதி.

தானதனதன தய்யனத்தாத்தன.

கோடாதுயிர்வகை செய்வினைக்கேற்றழி
கூடேய்தரவுத வையனிற்சீர்த்திசை
கூராகமுலகி லெல்லெனச்சேர்த்தருள்
கூர்வேல்விழியமை செல்வியிப்பார்க்கிடை

வாடாவகையெனுள் வைகிமெய்ப்பாப்பகர்
மாணுதரமிக நல்குநற்பாக்கிய
வாழ்வேகவின்மண வெள்ளிதழ்ப்பூப்பொலி
வாணீயுனதடி யுள்ளமைத்தேத்துவன்

ஏடார்மலர்புனை மையணிக்கார்க்குழ
லேர்வேசையர்மகிழ் நல்லியக்கீர்த்தியி
னேரானலிபிணி மெய்படைத்தேக்கமு
ளேயாதருள்பொலி தில்லையுட்போய்க்கரை

பீடார்சிவன்வரை செய்யுள்சொற்ருற்குறு
பேறேய்தரவருள் கிள்ளையைத்தாட்டுணை
பேணுர்வநிறைவெ முள்ளுறக்கூட்டிடு
பேருர்மரகத வல்லியைக்காக்கவே. (அ)

## சத்தமாதர்கள்.

தனதனதனதன தானத்தனத்தன.

எகினமிசையிசைகொள் வேதக்கைபெற்றவ
ளிடபமிவர்தருபி நாகக்கரத்தின
ளினியசிகியிலயில் வேல்கைப்பிடித்தவ
ளெழில்கொள்கருடனிவ ராழிக்கரத்தினள்

சிகிவிழியரியினி லூர்கைக்கலப்பைபய
டிகழ்தவளகரியி னேர்வச்சிரத்தின
டிரியலகையிலிசை சூலக்கைபெற்றவள்
செறியிவரெழுவர்க டாளைப்பழிச்சுது

முகிலுறழணியருண் ஞானத்துணர்த்திரு
முருகுகமழ்குழலை வாரிச்சிறப்புற
முடியொருபணிதனி லூழிக்கணக்கொழி
முதல்வியையளவறு வேதத்திரட்பகர்

மகிமைகளலகறு கோடிக்கணக்கெனும்
வகையினுமமைதலி லாளைத்தவத்தருண்
மதியினருளமிசை பேரைத்தலத்தவிர்
மரகதமயிலினை மேவிப்புரக்கவே. (கூ)

## முப்பத்துமுக்கோடிதேவர்.

தனனதனதத்தன தனனதனதத்தன
தனதனதத்தத்த தத்தானதானன.

அருணிலவுளத்திடை நிலவுமுயர்சத்துவ
மமையுமுடற்குப்பு றத்தூடுமேயதெ
னணிகுலவியொப்பறு திருமுடியுமிக்கபொ
னடிகளுமிக்குட்செ ருக்கோடுநாடிமு

னறிகுவமெனத்தம துருவினையகற்றியொ
ரனமெறுழிப்பொய்ப்பு மெய்க்கூடியோடின
ரகமழிதரப்பர சிவனைமுடியிற்பெறு
மனககைலைக்கொக்கு மிக்கானசீர்பொலி

தெருணிலவிடக்கரு தியபுகழிமக்கிரி
திகழ்தவளப்பற்ப வுத்தூளிதாகர
திடநிலவுபத்தர்கண் முறையிலசைவற்றயர்
செழியதவப்பெட்பி னிற்காவலோனெதிர்

செறிபதுமைநற்றட மிசைகொள்பதுமப்புடை
சிறுகுழவிப்பொற்பு ருச்சாரமேவுபு
தெரிசனமளித்திறை கரமலரிலுற்றவிர்
திருமனையிற்புக்கு மெய்ச்சீலமேனைகொள்

பொருணிலையவெற்பிய லருவியின்மிகப்பொழி
புனிதமுலைப்புத்தி யற்பாலுணுவளர்
புதல்வியைமனத்தினுண் மறைமுடியெனத்திகழ்
புரணவிணைச்சிற்ப ரத்தாள்கணுடுபு

புதுமைமதுரத்தமிழ் வளமைநிறையற்புத
புகழ்பொலிநற்றுத்தி யப்பாடலோதிடு
புலவர்தினநத்துபல் பொருள்களுமளித்தடி
புகவருண்மெய்க்கற்ப கத்தானசோதியை

இருணிலையிடைச்சுழ லெனையனையசிற்றறி
வினர்களுமுத்திச்சு கத்தூயவாழ்வுற
விணையில்கருணைத்திரு வுளமிசைமதித்தணி
யிலகுசிறப்புத்தி ருப்பேரையூரினி

லிசைதளிகொள்பச்சைநன் மரகதவியற்குல
வெம்தொரனைக்கிட்ட மெய்ப்பானகாவல
ரிரவிக ளுருத்திரர் வசுவினர் மருத்துவ
ரெனமிளிர் முப்பத்து முக்கோடிதேவரே. (கO)

காப்புப் பருவம் முற்றிற்று.

## செங்கீரைப் பருவம்.

அம்பங்க சைக்கவசை யும்பங்க யத்தண்மல
*ராவியிற் கண்டவாவி
யாய்ந்தவிம வேந்தல்கரம் வாய்ந்தருள வேந்துமனே
யானவுயர் மேனைசுவணக்

கும்பங்க ணன்கணியும் வம்பங்க றுத்துமைக்
குன்றினின் ருன்றருவியிற்
கொட்டுபா லூட்டிமிக வொப்பில்பா ராட்டிநெடு
கொண்டாடி யுண்டாடிடா

தெம்பங்க வல்வினையில் வெம்பங்க வல்லலற
வெம்பங்க மைந்தவமுதே
யென்றுவிண் மாரியென வொன்றுகண் மாரிபொழி
யினியவனை கனியுமுளமாஞ்

செம்பங்க யம்பேரை யன்பங்கு றுந்தேவி
செங்கீரை யாடியருளே
செச்சையார் புயனம்மை பச்சைநா யகியம்மை
செங்கீரை யாடியருளே. (க)

பொன்னம் பொருப்பைநிக ரன்னம் புயத்திண்
பொருப்பிறை விருப்பிறைவிகட்
புலனுக்கு மிக்கபுற் கலனுக்கு மொப்பில்பரி
புரபுரண சரணமமையா

||வின்னஞ்சொ லின்னஞ்சொ †லென்னம்மை யென்னம்மை
யென்றென்று கெஞ்சவருள்சீ
ரின்குதலை மழலையவர் நன்குதலை முடிதுளக்
கிக்கனிவி னேற்றுவந்து

---

* ஆவி — தடாகம் || இன், அம், சொல். † என்னம்மை யென்றுசொல்லும், அம் — அழகிய, மை — மேகமே.

கன்னம்பொ ருந்தமுத் திக்கரையின் முத்தியங்
 கரையேற்ற விரையேற்றபூங்
காமர்மெய்த் திருவடித் தாமரைத் துணைகண்முற்
 காட்டியருள் கூட்டிடவருஞ்
சின்னஞ்சு கம்பேரை மன்னன்பு றுந்தேவி
 செங்கீரை யாடியருளே
செச்சையார் புயனம்மை பச்சைநா யகியம்மை
 செங்கீரை யாடியருளே. (௨)

நறவார் புனற்றிகழ்நி னிறமேனி மிசையாட்டி
 நன்கருந் திப்படிந்தே
ஞாலத்த னைந்தநதி சாலத்தின் மூழ்குபெரு
 நலமுழுது மிலகியின்பத்
திறவார் பதத்துணைக் குப்பரிபு ரந்தண்டை
 செம்பாத சாலமிட்டுச்
சிறுகரத் திற்றொடி யுடன்காப் பணிந்துசிர
 சின்மணிச் சுட்டிசூட்டிப்
பிறவாம் பணித்திரள்கள் கண்டமுர மீதிற்
 பிறங்கப் புனைந்தெம்விழியார்
பேறே யுனக்கெதுகை மாறேயெ னத்துதிகள்
 பேசியனை யாசிமிகவே
சிறவா வளர்க்கவளர் பிறவா நெறித்தலைவி
 செங்கீரை யாடியருளே
செச்சையார் புயனம்மை பச்சைநா யகியம்மை
 செங்கீரை யாடியருளே. (௩)

ஏரூரு மிமையவர்கள் சாரூரு முவமையில
தென்னமா ளிகைசூளிகை
யேன்றகோ யிற்கணொளி கான்றகால் பவளத்தி
லிட்டுமே லிட்டிடுங்கோல்

கூரூரும் வயிரத் தமைத்துநீ லத்தினிற்
கொள்பலகை யார்தொட்டிலிற்
குலவவைத் தாட்டியின் பாலூட்டி யெழின்மடிக்
கொண்டாட்டி யுயர்கொற்றவன்

போரூ ருரத்துங் கரத்துஞ் சிரத்தும்
பொருத்தித் திருத்திமிகவே
பொங்கவருண் மங்களங் தங்கநகை பங்கயப்
புரணவிரு சரணமலர்தோய்

சீரூர் களிற்பெரிய பேரூ ருடைத்தலைவி
செங்கீரை யாடியருளே
செச்சையார் புயனம்மை பச்சைநா யகியம்மை
செங்கீரை யாடியருளே. (சு)

பெருவளத் திரள்சால மருவளக் கரெனீடில்
பெயர்கொள்கண வற்புணரவே
பெரிதுமால் விண்டணைந் தரியசூல் கொண்டுவிண்
பெயருமா கொண்டன்மிசைநீள்

குருவளத் திரண்மணியெய் துருவளப் பரியசீர்க்
கோபுர மிலங்கல்கண்டுட்
குளிர்தமிழ்ப் புலவரிறை யொளிர்மேனி யிற்கண்டு
கொண்டாடி யேத்தலென்னத்

தருவளக் கற்பகத் திறையென்று விண்புலவர்
  தாமுமேத் திடுதிறத்தாற்
 தக்கபிற வாநெறியை யொக்கவவர் களுமுறத்
  தந்தியற் பெயர்புரக்குந்

திருவளப் பேரைபொலி தருபுகழ்த் தேவியவிர்
  செங்கீரை யாடியருளே
 செச்சையார் புயனம்மை பச்சைநா யகியம்மை
  செங்கீரை யாடியருளே. (ரு)

## வேறு.

திரையார் கங்கை நதியாடத்
  திநச் சரவப் பணியாடத்
 திங்க ளாடக் கொன்றைமலர்
  தேன்விண் டாடப் பைந்தளஞ்சால்

விரையார் வில்வ மறுகாட
  விருக வினத்தோ லுடையாட
 விரவுங் கழலார் பதமாட
  வெற்றிப் படைக்கைத் தலமாடத்

தரையா ராட விண்ணகத்தே
  சாரும் பலரு மாடிடப்பா
 தலமாந் தலத்தோர் தாமாடத்
  தலைவன் றனையாட் டியற்றவைப்பாய்

அரையர் வடமா டிடச்சிறிதே
  யாடி யருளாய் செங்கீரை
 யணிப்பே ரூர்வாழ் மரகதமே
  யாடி யருளாய் செங்கீரை. (சா)

பதியி னுடனே கலந்தொன்றிப்
பதியுஞ் சுகமின் பேமயமாம்
பண்பா லறியப் படாதெனுமெய்ப்
பான்மை யுணர்ந்தே னீர்சிரந்தோய்

விதியி னுடனே கலந்துளவி
வேகம் பொருந்தி யுடலோம்பி
வீணே மடியா திலங்குபுவி
விண்பா தலத்தி லமைவீர்காள்

கதியின் வழியை யெளிதுமக்குக்
காட்டி யருள்வேன் வம்மினெனக்
கருணை மிகையாற் கூவிடுஞ்சீர்
கடுப்பக் கடைக்கண் கொடுநோக்கி

யதிக மகிழ்வா யெம்மன்னை
யாடி யருளாய் செங்கீரை
யணிப்பே ரூர்வாழ் மரகதமே
யாடி யருளாய் செங்கீரை. (எ)

தனனதனதன தய்யதனத்தன தானனதந்தான.

கவினீடியகமு கெய்துதுவர்ப்புரை
காயுக வம்பூடு
கதிபாய்கயன்மிசை யெய்தியடித்தணை
காரிலி வர்ந்தேகி

நவின்மீனெனவிணில் வைகுமவற்றொடு
நாமந லந்தோய்நீர்
நதிவாவியினிடை புல்லுதிரற்பக
னொடொளி குன்றாது

குவிவாரிருதய மெய்படிமைத்தவர்
கோலமி யைந்தேகொள்
குறைதீர்தரவென விள்ளுறுமற்புத
கோடிமி குஞ்சீல

மவிர்பேரையில்வளர் செல்விகளிப்புட
ஞடுக செங்கீரை
யணியார்மரகத வல்லிமணிக்குயி
லாடுக செங்கீரை. (அ)

தனனதான தனதனதய்யா தானன தந்தான.

திரையார்கார்கோ ளறலயின்மைநேர்
சீலமி குந்திடில்
சிவையேகாவா யுனதடிவல்லே
சேரவி ழைந்தேமெய்

யுரையீதான துலகிடைநையா
தூழ்வினை வென்ருேர்த
முடனேவாழ்வா னருளுனையல்லா
லோர்துணை யுண்டோசொல்

பரையேதாயே திருவருண்மெய்யாய்
பாசமொ ழிந்தோர்கொள்
பதிநேர்தாளா யெனநுவல்வல்லோர்
பாடன்மி கும்பேரை

யரைசீபூமா தர்கள்புகழ்செல்வீ
யாடுக செங்கீரை
யருண்மாதேவீ மரகதவல்லீ
யாடுக செங்கீரை. (கூ)

தனதனதாஞ தனதனதய்யா தந்தாதந்தான்.

கருணையருதே பொழிதருமையார் கண்டோய் பைந்தோகை
கதிர்வடிவேல்சார் புயமிசை செவ்வேள் கண்பேரின்பார்வ
மருவிய தாய்மா தவமிகும்வல்லோர் வண்டே னுண்டாடு
மணமலிதாள்வா ரிசமலர்மெய்யாய் மங்கா தொன்றீடி
லருமைகொண்மேல்வீ டிசைதரவுள்வா ரன்பார் வந்தோய
வணையருண்மாஞர் புகலெனுமொய்யா ரஞ்சே ருஞ்சோதி
திருநடமார்பே ரையில்வளர் செல்வீ செங்கோ செங்கீரை
திகழ்பெருவாழ்வா மரகதவல்லீ செங்கோ செங்கீரை.(கo)

செங்கீரைப் பருவம் முற்றிற்று.

---

## தாலப் பருவம்.

சேட்டித் தலைக்கு மூலமலச்
சிமிழ்ப்பின் மருளார் வினைத்தூல
தேகத் தமையு முயிர்கள்படுந்
தியக்க நினைந்து நினைந்தியன்மை

தீட்டித் திகழும் பெருங்கருணைத்
திருக்கண் ணிணைநீர் பொழிந்திரங்குந்
திறங்கண் டாற்றுள் சிமயமன்னன்
றேவி யெடுத்துத் திருமுலைப்பா

லூட்டிச் செவியா ரருளமுத
வூற்று யுவட்டா தண்ணித்துள்
ளுருக்கு மழலைக் குதலைமொழி
யுண்டு தேக்குந் தலிற்பாடி

யாட்டித் துயிற்றுந் திருப்பேரூ
ரரசீ தாலோ தாலேலோ
வவிர்சீர்ப் பச்சை நாயகியெம்
மன்னே தாலோ தாலேலோ. (க)

சுரும்புந் தியசெங் கமலமயற்
றேய்வெண் கமலத் தினுக்கெம்மைத்
துணையும் பெருமை யுண்டெனின்முற்
றேன்றும் பிரம னிலக்குமியுள்

விரும்புந் தரமுண் டாமமையா
விதியாற் ருழ்வென் றிடவிவிதழ்
விளிம்பு வெளிநீட் டிடக்கண்ட
வெண்டா மரைசத் துவத்தென்மறை

தரும்புந் திகொள்வள் ளுவர்வெண்மைத்
தகைதற் புகழுஞ் செருக்கென்று
சாற்ற லகத்தோர் கிலேகொலென்னத்
தந்தத் தவளங் காட்டிடவி

லரும்புந் திருத்தண் பணைப்பேரூ
ரரசீ தாலோ தாலேலோ
வவிர்சீர்ப் பச்சை நாயகியெம்
மன்னே தாலோ தாலேலோ. (உ)

நீடிக் கவின்ற பளிக்குநிலா
நிலையுப் பரிகை மீதுதிரு
நிகர்க்கு மடவா ரின்பமையு
நினைவுட் பொருந்தி மகிணருட

னூடிக் கடுத்தார் போன்றொருசா
ரொதுங்கக் கவன்றங் குறுபுலவி
யொழிப்பக் கருதி யவருருப்போன்
றுற்ற விம்பந் தனையார்வத்

தோடிக் கனிவிற் கெஞ்சவய
லொருவா மையின்மாற் றூர்பலரீண்
டுற்று ரோவென் றெல்லைதவ
னுடைய திருத்தாட் டுணைபோற்றி

யாடிக் களிக்குந் திருப்பேரூ
ரரசீ தாலோ தாலேலோ
வவிர்சீர்ப் பச்சை நாயகியெம்
மன்னே தாலோ தாலேலோ. (ரு)

*முன்னப் பணைத்த கழைத்தனுவின்
முழங்கு §நாண்கைக் கொண்ட$கொடி
¶முரச நிகர்க்கும் விழியின்மதன்
முடியி லமைபக் கவித்தமுடி

யென்னப் பணைத்த கனதனத்தி
விதயங் கரைக்குங் கடைசியர்க
ளிதழார் மதுவுந் தென்னைபனை
யீந்த மதுவுந் துய்த்தலர்க்கண்

மன்னப் பணைத்தண் மடுக்கணறன்
மடுத்து மள்ளர் மயங்கமுக
மதிகாட் டுபுபள் ளிகண்முன்னை
மதிகாட் டுபுதேற் றிடும்வியனு

---

* கழைத்தனுவின் முன்னப்பு — தாமரை.
§ நாண் — வண்டு. $ கொடி — மீன். ¶ முரசம் — கடல்.

ரன்னப் பணைத்தண் டிருப்பேரூ
ரரசீ தாலோ தாலேலோ
வவிர்சீர்ப் பச்சை நாயகியெம்
மன்னே தாலோ தாலேலோ. (ச)

பிசையுங் கொடுவெம் மலமாயைப்
பித்த மொழித்துச் சித்தமிசை
பிரியா தள்ளூ றிடும்புரண
பேரின் புறமுற் புரிதவச்சீ
ரிசையும் பெரியீர் வம்மின்க
ளென்ன வழைத்தல் போன்றுமிதி
லேற்ற மாம்பே ரூர்பிறிதொன்
றின்றென் றிசைத்தல் போன்றுமெறி
கசையும் போன்றெம் மிறைமுடிநேர்
கதிகொள் ளேலென் றோராழிக்
கனலி தேரின் பரிபுடைத்துக்
கயிலை வாயி னந்தியொத்து
மசையும் விடைக்கே தனப்பேரூ
ரரசீ தாலோ தாலேலோ
வவிர்சீர்ப் பச்சை நாயகியெம்
மன்னே தாலோ தாலேலோ. (ரு)

வேறு.

எண்ணில்பல வண்டங்க ளுண்ணிலவு பிண்டங்க
ளேற்றமைச ராசரங்க
ளெல்லாமொர் நின்னசைவ தல்லாலி யங்கிடுத
லின்றென்று நன்றென்றுசீர்ப்

பண்ணிலவு வேதாக மங்கண்முத லாங்கலைகள்
பறையறைந் திடுதிறத்தாற்
பாசுவிரி மெய்யருட் டேசுவிரி வடிவமெம்
பாக்கியத் தாற்படைத்தே

யொண்ணிலவு தரிசனம் பரிசனம் புரியவீண்
டுற்றநீ சற்றிரங்கி
லோவென்றெ லாமிரங் கிடநேரும் யாஞ்சிவத்
தொன்றிடவு றங்குதியெனத்

தண்ணிலவு மேனைதுதி விண்டுபா ராட்டுசுதை
தாலேல தாலேலவே
தார்கொள்சுரர் பரவுபே ரூர்கொண்மர கதவல்லி
தாலேல தாலேலவே. (சு)

காத்திட்ட வுயிருனைக் காக்குமாய்த் திட்டவுயிர்
கருணையற மாய்க்குமுண்ட
காயங்க ணீகொண்ட காயமுண் டிடுமெனக்
கண்ணறிஞர் விண்ணலத்தால்

வாய்த்திட்ட வெனைவயிறு வாய்த்திட்ட முடன்மிக
வளர்த்திட்ட வன்னைமாரை
மக்களென வுட்கொண்ட ஞோர்கள்செய்க டன்புரிய
வருமுன்பு வந்துமுளவா

லோய்த்திட்ட மனதிலொளி பூத்திட்ட வுன்றனை
யுறக்குதுதி யோதிலப்பே
றுதவுதற் கையமொன் றின்றென்று நம்பியுள
முருகென்மிசை பெருகருட்கண்

சாத்திட்ட முற்றுயர் சிவத்திடை யுறக்குதாய்
தாலேல தாலேலவே
தார்கொள்சுரர் பரவுபே ரூர்கொண்மர கதவல்லி
தாலேல தாலேலவே. (எ)

தன தன தானு தன தன தய்யா தானுதானு.

வயமலிகூரார் விதிரிலைவைவேல் வாண்மான் மான்மீன்மா
வடுநிகர்தோடே யருள்விழிகொள்வாய் மாணார் பூணார்தா
ணயவழிபாடோ வருநனிநல்லார் நாமீ தேபாமா
னணிவதிவாயோ திடவருள்செய்தே ¶நாணு ணுநாவா
மியல்புளபேரா டல்கள்புரிமெய்வீ றீயா வீறூர்போழ்
தினியொருதாய்பான் மகவெனவெய்தா தேரார் வீடவாய்
தயவுருவார்கோ மளநிறைசெல்வீ தாலோ தாலேலோ
தனைநிகர்பேரூர் மரகதவல்லீ தாலோ தாலேலோ. (அ)

தத்தனுதன தன்ன தத்தனுதன தன்ன தானுதானன.

விக்கினேசுரனென்னு மொப்பில்பாலனைமுன்ன
மேலோ ரூறாருய்
மெய்த்தபோநலமின்ன முட்கொளாவல்களெண்ணின்
மேன்மே லேயீவான்

மெய்க்கிரீசனெனுர்மும்ம தக்கைமாவெனநண்ண
வீறூர் சீர்சாலோர்
விச்சையார்பிடிவண்ண முற்றுலாவருண்மின்ன
மேனுள் சேர்வாய்நீள்

கைக்கிரீதரனன்ன சித்திமாதவரெண்ணு
கார்கோ ளார்மானேர்
கட்சரோருகதண்ண ருட்குலாவியவெம்ம
காதே வீவானேர்

---

¶ நாள்நாள் நாநாவாம் எனப் பிரிக்க.

சக்கிருடருமுண்மை நற்சொரூபமெய்தன்னை
தாலோ தாலேலோ
தக்கபேரையின்மன்னு பச்சைநாயகியம்மை
தாலோ தாலேலோ. (கூ)

தனனதான தனதன தனதன தய்யா தானன.

கழைதோய்பூவா ளிகளவிர்வளைபுனை
கையாய் தாலேலோ
கலையாராலோ னெனவருகுழைபொலி
கர்ணீ தாலேலோ

தழைசால்$கேதா ரமிசைகொண்முருகனோர்
தல்லீ தாலேலோ
தகுசீர்நீண்மே னையிறைவனணிகொள்பு
தல்வீ தாலேலோ

பிழைநாடாதா ரருளடியவர்மிசை
பெய்வாய் தாலேலோ
பெறவோர்தாய்பால் வருகிலதுருவுகொள்
பிள்ளாய் தாலேலோ

மழைமால்போல்வாள் விழியுடல்பொலிவுறும்
வல்லாய் தாலேலோ
வளநீள்பேரூர் மருவியமரகத
வல்லீ தாலேலோ. (கO)

தாலப் பருவம் முற்றிற்று.

---

$ கேதாரம் — மயில்.

## சப்பாணிப் பருவம்.

கும்பந்த னிடையருண்மெய் பம்பந்த முதிர்வடிவு
கொண்டதண் டமிழ்முனிவனீள்
குரைதிரைக் கடலைக்கை வரைவரை யறைக்குட்
குறைத்துணற் கெதிர்மறையதாய்
வெம்பந்த வினையிலுடல் வெம்பந்த கத்தகைகொள்
வெறியமணர் புத்தர்தம்மை
வெங்கழு வடித்தலை யிடங்கழு வடித்தலைய
விட்டிடிமு டிக்கண்வீழ்த்தி
யம்பந்த விழிமலர்க் கொம்பந்தண் மயிலையிடை
யடலையத னிற்புரிந்தே
யானந்த வாழ்வாமுய் வானந்த முத்தியணை
வார்க்கருள வமுதுசிறிதே
சம்பந்த னுக்குதவி டும்பந்த ணைக்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
தழையுமிர ணியவில்லி விழையுமர கதவல்லி
சப்பாணி கொட்டியருளே. (க)

வண்டமிழ்ப் புலவர்பா வலர்கொட்ட வாரியறல்
வாரிமழை மழைகொட்டல்போல்
வானிலகு புலவரலர் கொட்டவன் னவர்தம்
மடந்தையர்கள் கொம்மைகொட்டக்
குண்டமண் கையருட் டுயர்கொட்ட வவர்மகளிர்
கொங்கையிடை செங்கைகொட்டக்
கொட்டமலி துட்டர்மனை முட்டநெய் தற்பறைகள்
கொட்டமட் டற்றமெய்ச்சீர்த்

தொண்டரிமை கொட்டலற் றின்பநீர் கொட்டவிசை
துன்றுமா லயமடங்கள்
தோறுமுயர் சேமக் கலங்கொட்ட வர்ச்சனைத்
துணர்நின்மு னடியர்கொட்டத்
தண்டலைநின் விழிகொட்ட மெய்ப்பேரை யூரிறைவி
சப்பாணி கொட்டியருளே
தழையுமிர ணியவில்லி விழையுமர கதவல்லி
சப்பாணி கொட்டியருளே. (உ)

ஆறுமதி புனைமுடியர் கூறுமதி வாசக
மபத்தப்ப டாமலன்பா
லாறுமதி காறுமதி வேறுமதி யாதுசுவை
யாங்கோல மோங்கியின்பாக்
கூறுமதி மதுரகவி ராசபண் டிதனுடன்
குளிர்கங்கை நதிபடிந்து
கோதகலு மாவிசுவ நாதரிரு பாதமலர்
கும்பிட்டு நம்பிட்டமாய்
வீறுமதி சயம்வீதி தோறுமதி கங்கண்டு
விற்றெடிகொள் பற்றெடிகலி
மிடியிட்ட வன்றனது மடியிட்ட ணிந்தகல
வேண்டுமென் றுண்டகையாற்
*சாறுமதி யாவினுமொல் பேறுமலி பேரையிடை
சப்பாணி கொட்டியருளே
தழையுமிர ணியவில்லி விழையுமர கதவல்லி
சப்பாணி கொட்டியருளே. (௩)

---

*சாறு—திருவிழா.

இஞ்சிதங் கியபொறியி னங்களங் கங்களி
விலங்குகஞ் சுகமஞ்சுகொண்
டிந்துவணி கன்கடையி லுந்துமணி யுடுமணிக
ளேற்றுவிண் மேற்றிகழ்தல்போன்

மிஞ்சிதம் பெறுமனோ ரஞ்சிதம் பொலிவீதி
மீதிலவி ராதிசோதி
விரிகார ணன்பொருவில் பரிபூர ணன்பெருமை
மிளிரார ணத்தின்முடியிற்

குஞ்சிதந டஞ்செய்மே லஞ்சிதம் பரமெனக்
கொஞ்சுமஞ் சுகபேரையிற்
கும்பிடுமென் மீதுமிகு வம்பிடுபி ராத்தமொடு
கும்பிடுங் காமியங்கள்

சஞ்சிதமு மறவுளங் கிஞ்சித மிரங்கியொரு
சப்பாணி கொட்டியருளே
தழையுமிர ணியவில்லி விழையுமர கதவல்லி
சப்பாணி கொட்டியருளே. (சு)

பொய்ப்பாச பவவறக் குப்பாய குப்பாய
போகமோ கத்தில்வறிதே
பூதலத் தொடுமீ தலம்பாத லத்தினிற்
புக்குமிக் கிக்குகைக்கும்

மைப்பாசு டற்கொண்மத னப்பாவி *யப்பாலும்
வன்கோட்டு மோட்டுக்கடா
மாட்டியைந் துறுபாச நீட்டியொன் றுயிரையற
மாட்டியம ஞட்டினரகத்

* அப்பு — அம்பு.

துய்ப்பாச தாலுமெண் கைப்போதன் விதிவழிய
தூலமுற லாலுமடியேன்
றேய்துயர முற்றுநின் றிருவுள்ள மறியுமென்
சொல்லளவை யல்லவதனுற்

றப்பாது பேரையிடை யப்பாலின் மேலமையொர்
சப்பாணி கொட்டியருளே
தழையுமிர ணியவில்லி விழையுமர கதவல்லி
சப்பாணி கொட்டியருளே. (ரு)

வேறு.

வெயிற்றுன் றியநுண் மணற்புழுவில்
வெதுப்புங் கொள்ளித் தலையெறும்பில்
விண்ணோர் துடிக்கச் சிறைபுரியும்
வீர தீர சூரனுட

லயிற்றிண் படையாற் பிளந்தவர்கட்
கமரா வதியின் வாழ்வளித்தெம்
மகத்தும் புறத்து மண்டமுக
டணையுஞ் சோலை வளப்பொலிவா

ரொயிற்றுன் றியதண் குறிஞ்சிதொறு
மோவா தென்றுங் கமழ்திருத்தா
ளுபயம் பொலிசண் முகப்பெருமா
ளுவப்பக் கனிவிற் றுலாட்டுக்

குயிற்றுந் திருக்கைத் தாமரையாற்
கொட்டி யருளாய் சப்பாணி
குளிர்சீர்ப் பேரூர் மரகதமே
கொட்டி யருளாய் சப்பாணி. (௬)

வாட்டுங் கொடிய மும்மலத்தின்
வலியா லுண்மை மதியொழிந்து
வந்த தெவணின் றினிப்புகுநன்
மார்க்க மெதுவென் றுணரவிடா

தாட்டும் புலக்கள் வரின்வழிப்பட்
டவர்க்கின் பளிக்கும் போகம்விழைந்
தவமே யலேவே னெனக்கென்னை
யறிவித் தன்பா லுணர்த்துமுன்னைக்

காட்டும் படிபின் னிருந்தழைக்குங்
கடனே போன்று மென்னறிவிற்
கலந்து செலுத்தி யபேதமுறக்
கரணங் கரைத்துச் சிவத்தோன்றக்

கூட்டுந் தகைபோன் றுங்கனிவிற்
கொட்டி யருளாய் சப்பாணி
குளிர்சீர்ப் பேரூர் மரகதமே
கொட்டி யருளாய் சப்பாணி (எ)

தன தன தன தன தன தன தய்யா தத்தன தத்தான

அலகறுமுலகுதொ றிலகுமெணில்லா
வற்புத நற்சீவ
ரமைதருமுடல்வகை வினைவழிநல்கே
ரத்தமொ ரெட்டேயு

மலரயனவைகளை யழிகுதலெய்தா
மற்றிதி நற்சீர்செய்
மணமலிதுளவணி முகினிகர்மெய்யோன்
மட்டறு மற்போடு

நலனிறைமுனிவரி னிலவுபுமெய்யா
நற்றவ முற்காண
நவிலருமிரசித சபையிடையுய்வா
னட்டமெய் தப்பேரை
குலவியவணிபொலி தளிவளர்செல்வீ
கொட்டுக சப்பாணி
குமரனையருளிய மரகதவல்லீ
கொட்டுக சப்பாணி. (அ)

தன தன தன தய்ய தத்தா தத்தான.

அளவறுமறையெல்லை யப்பா லுற்ருடு
மரன்மகிழ்வுடனுள்ள மைத்தார் வச்சீர்கொள்
வளமலியருள்வெள்ள மைப்போ லுற்ருடு
மலர்விழிபொலிசெல்வ வைப்பே பொற்பான
தளவுறழ்நகைவில்கொள் சத்தி விட்பாலர்
தளர்வறுபடையொவ்வு தக்காய் மெய்ப்பேரை
கொளவமைதருசெல்வி கொட்டாய் சப்பாணி
குளிர்மரகதவல்லி கொட்டாய் சப்பாணி. (கூ)

தத்தானதத்ததன தத்தானதத்ததன தத்தான தத்ததனனு.

பொய்த்தாமதக்குணவி ருட்டுகெட்டுலனெல்
புட்போலெ மூச்சிமிகவே
புக்காசுடைத்தொழில்க ளிற்றேய்வினைத்திரள்கள்
புற்காகி யற்றெழியநீண்
மெய்த்தாபதர்க்குளிடை யற்றா றுபத்தியெனோர்
விற்கா லு ளத்தினிறைவாய்
வெற்பார்முழக்கருவி யொப்பாயுரத்துறவி
ழிப்பால றற்பெருகவா

னத்தார்சுதைத்திரளை யொப்பார்சுவைச்செறிவி
னற்பாடல் பற்பல்பகர்சீர்
நட்பாலளித்தளவில் சித்தாடிமெய்த்தநின
னைத்தாளி டைப்புகுதவே
சத்தாரணச்சிரசி யற்பேரைநற்றலைவி
சப்பாணி கொட்டியருளே
தக்கோர்வழுத்துமெழின் மிக்கானபச்சையுமை
சப்பாணி கொட்டியருளே. (௧௦)

சப்பாணிப் பருவம் முற்றிற்று.

---

## முத்தப் பருவம்.

---

மின்னை நிகராங் காயமிதை
மெய்யே யென்றும் யானென்றும்
விரும்பி யுழலா தென்னுளத்தில்
விளக்கஞ் சிறிதீந் தனையதனு
லென்னை யடியே னின்சுதனென்
றெண்ணு முணர்வெய் தினன்புறத்தி
லிசைத்தற் காமெய்ச் சிறப்பருளா
வியல்பா னுணு வேனெனினு
முன்னை யெனக்காந் திருவருட்பே
ருரிமைத் தாயென் றேத்துமுர
முடையேன் கண்டா யடிச்சிறியே
னுடையா வண்ண முவந்தருளான்

முன்னை வினைக ளறக்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முதிர்சீர்ப் பேரூர் மரகதப்பேர்
முதல்வீ முத்தந் தருகவே. (௧)

இழிந்த கரணேந் தியபோக
வின்பப் பொருட்டா லுலகில்வறி
தெய்க்குங் கொடியே னெனைப்பொருளா
வெண்ணிப் பலவாங் கனவினிடை

வழிந்த வருளா னீயளித்த
வண்ண முத்த முழுவதுந்தா
மதத்தி லெழுந்தத் துவப்பகைவர்
வாரி விழுங்கிக் கொண்டதனு.

லொழிந்த விதங்கண் டியான்றுயர
முறலோர் பொருளென் றுன்னுகிலே
னுன்பே ரருளித் தகையிளப்ப
மொன்றப் பார்த்தன் முறையன்றுன்

மொழிந்த வகைமெய் பெறக்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முதிர்சீர்ப் பேரூர் மரகதமா
முதல்வீ முத்தந் தருகவே. (௨)

ஆக்க மலிமெய் யடியவர்தம்
மகந்தைத் திமிர மோர்போது
மணையா வகத்திற் குவியாம
லாசார் மாயைச் சேறுபடா

தூக்க வன்மக் கன்மமெனு
மூதை யலைக்க வாடாம
லோங்கு நின்பொற் றிருத்தாள்கட்
கொவ்வா வனசத் தியன்முத்தந்

திக்கண் ணுதலார் தமக்கின்பந்
தேக்குந் தாய்நின் சந்நிதியிற்
செப்பித் துதித்துப் பெறலாகுஞ்
சிறப்புந் தியதன் றுகையினுன்

மோக்க மளிக்கு நின்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முதிர்சீர்ப் பேரூர் மரகதமா
முதல்வீ முத்தந் தருகவே. (௩)

நத்துக் களிவ்யா னையின்மருப்பி
னண்ணு முத்தம் புவியிடைமெஞ்
ஞானம் பத்தி நலஞ்சிறிது
நயவா வீணர் தம்மனையில்

வைத்துக் களித்துச் செருக்குதற்கா
மாடை யளித்து மானிடர்பால்
வாங்கிப் புரந்து கரவினர்தம்
வன்கைச் சிலைதண் டோச்சிடுமோர்

மொத்துக் களிக்கும் பரிசாகு
முறையா லவற்றை யுன்றிருத்தாண்
முளரி கருது மனத்தெண்ணேன்
முருகார் கடம்புத் தடம்புயந்தோய்

முத்துக் குமரற் கருள்கனிவாய்
 முத்தந் தருக முத்தமே
முதிர்சீர்ப் பேரூர் மரகதமா
 முதல்வீ முத்தந் தருகவே. (௪)

அல்லை ¶விரிக்குந் தண்கதிரா
 யம்மை நின்பொற் றிருமுகத்துக்
கமையு முவமம் பெறவளர்ந்து
 மாகா மையினாற் குன்றுசசி
வல்லை விரிக்கு முத்தமினன்
 வாங்குங் கலையி னுடனணைந்து
மறுகி வெதும்பி மதிதோறு
 மதிப்பற் றிடலால் விரும்புகிலேன்
வில்லை விரிக்கும் பரன்வலந்தோய்
 விழியின் மலரு முகத்திருந்தும்
விரியா திடக்கண் பார்வையமை
 வேலை யரும்பு மாம்பல்பொலி
முல்லை விரிக்கு நின்கனிவாய்
 முத்தந் தருக முத்தமே
முதிர்சீர்ப் பேரூர் மரகதமா
 முதல்வீ முத்தந் தருகவே. (௫)

வேறு.

இயங்குதிணை யுடனிலைத் திணைகளின்வல் வினைவடிவி
 லேய்ந்தமுத் தங்களினமா
யிலங்குடற் குப்புறத் தாய்ப்புறப் பார்வைபெறு
 மியல்பினர்க் கணியாயணி

---

¶ விரித்தல் — விளக்கல்.

நயங்குலவி னர்க்கொர்பய மின்ருய்ப் பெரும்பயமு
ஞட்டலிற் புலனீட்டமார்
நனவிதனி லன்றுறுங் கனவிலும் விரும்புகிலன்
ஞானவா னந்தமயமாஞ்

சயங்குலவு சித்திமுத் திப்பேற டைந்தவர்க
டாமெலாம் வேட்டடைந்த
தரமருவி யவிர்பே ரருட்சோதி யாந்தந்தை
தன்னைமுற் காட்டியொன்ற

முயங்குதுணை யாத்திகழு நின்றிருக் கனிவாயின்
முத்தங் கொடுத்தருள்கவே
*முச்சைபுரி தருசொல்லி பச்சைமர கதவல்லி
முத்தங் கொடுத்தருள்கவே. (௬)

கடங்கவிழ்த் திடு¶ தண்ட நான்றவள வான்றவள
கவி †ஞெருத் தலி$னெருத்தக்
கண்கொண்ட வின்கணிவர் மெய்பெறுச கத்திரக்
கண்கொண்ட விண்கொண்டகோ

னிடங்கவின் றிட்டசிந் தாமணியும் வடதிசை
யியக்கர்கோன் வான்மணியுநீ
ளிருங்கிர சீகரச் சேகரச் சாகரத்
திற்றுத்தி யின்பத்தியார்

---

*முச்சை—மூன்றென்ருய் முடிகை.

¶ தண்டம் — துதிக்கை- † ஒருத்தல் — யானை.

$ எருத்தக்கண் — பிடரின் கண்ணும், கொண்டலின் கண்ணும் எனப் பிரிக்க.

படங்கவின் றிடுசுடிகை மணியாயி ரச்சேட
பாயல்வளர் மாயனகலம்
பரித்தவல ரிக்கதிர் விரித்திடு கவுத்துவப்
பருமணியு மொருமணியெனு
முடங்கக மொழிக்கவண் பேரையிற் கனிவாயின்
முத்தங் கொடுத்தருள்கவே
முச்சைபுரி தருசொல்லி பச்சைமர கதவல்லி
முத்தங் கொடுத்தருள்கவே (எ)

தானனதானன தானனதானன தத்தன தத்தனு.

நாவலர் கோன்வய லூடுநி லாவுபு
நக்கன தற்புதமார்
நான்மறை மீதமை தாள்குழை யூடுற
நற்கனி விற்றருமூர்
காவளர் போகித னீள்வினை சாடுபு
கட்டம றுத்தருளூர்
காமர்கு லாவிய தேனுவி னேர்மிகு
கற்றிசை பெற்றிசையூர்
பாவலர் வாழிசொல் கோமுனி காலவர்
பட்டிமு னிக்கும்விணீள்
பார்புகழ் நாடக வாழ்வருள் பேரைகொள்
பச்சைம ணிக்குயிலே
மூவலி லாநலம் யாவையு மேவவொர்
முத்தம ளித்தருளே
மோனவி சாலவ பாரசு பாகர
முத்தம ளித்தருளே. (அ)

தன தன தானன தன தன தானன தத்தன தத்தனை.

அமலவி லாசமல் கியபுகழ் மாதவ
ரக்கம னத்திலுறு
தமைதரு பூரண னுளமக லாதமை
யட்சய மெய்ச்சொருபீ
கமலநி லாவிரு மகளிர்க ளாயவிர்
கட்புல முற்றடியார்
கருதிய பேறுகண் முழுதும்வி டாதருள்
கற்பியல் பொற்கொடியே
பமரமு லாவிய பொழின்மலர் வாவிகள்
பற்பல வற்புதநீர்
பரவிய பேரையி லருள்வடி வாயவிர்
பச்சையு ருக்கிளியே
முமலவி ராவறும் வகைகனி வாய்பொலி
முத்தம ளித்தருளே
முனிவர்கள் வானவர் புகழ்விரி வாரணி
முத்தம ளித்தருளே. (சு)

தத்தன தத்தன தத்தன தத்தன தத்தன தத்தனை.

நித்தம கத்திடை யுட்புற மற்றுள
நெக்குரு கித்தொழுவார்
நிச்சய புத்தியி னைத்தளி யிற்கொடு
நிற்குமு யிர்த்துணைதோய்
புத்தடி பெற்றமை சத்திமி கப்பொலி
பொற்புரு வக்கொடிநீள்
புற்றர வப்பணி யப்பரு ரத்தமை
பொற்கல சத்திருவே

பத்தர்கள் சித்தர்கண் முத்தர்க ணத்திடு
பற்பற லத்தணிசால்
பச்சிம மெய்த்திலை யிற்பொலி யற்புத
பச்சைய ணிச்சிகியே
முத்தமிழ் விற்பன ரிச்சைகொ ளொப்பரு
முத்தம ளித்தருளே
முத்தர கத்திலி னிக்குமி யற்பர
முத்தம ளித்தருளே. (க0)

முத்தப்பருவம் முற்றிற்று.

---

## வாரானைப் பருவம்.

---

விண்ணம் பொலிவார் மணிநீல
வெற்பார் முடியிற் பசுங்கிரணம்
வீசும் புரண முழுமதிபோல்
விளங்கு முகமும் வள்ளையணித்
தண்ணம் பொலியுஞ் செவியிலொளி
சால்பன் னிருசூ ரியரயனந்
தகப்பன் னிருதோ டாமுறையிற்
றழைக்கக் குதம்பை யசையவன்ப
ரெண்ணம் பொலிசீர்க் கருணைபொழி
யிருகட் கடையும் புன்முறுவ
லிதழுங் கவினுர் கரமலரு
மிசையார் மணிமே கலையுமுற

வண்ணம் பொலிபொன் னடிபெயர்த்து
வளப்பே ரூர்த்தாய் வருகவே
மகிமைப் பச்சை மரகதமெய்
வல்லீ வருக வருகவே. (க)

தழங்குந் தவள முறிதரங்கச்
சலதிப் புனலுண் டிருண்டுயர்வான்
சார்ந்திந் திரசா பம்பிடித்துத்
தடித்து வண்ணத் தமிழ்க்கவியின்
முழங்கும் புயனு ணுறுங்குழன்மேன்
முயங்கு மணிச்செம் மணிப்பணிவின்
முதிரக் கவித்து மதுகரங்கண்
முரலு ஞான முருகமைந்த
¶குழங்க லணிந்து பணிந்துவந்து
கோக னகமா தர்கள்வழுத்துங்
கோலங் கண்டென் விழியருவி
கொட்டிக் குளிரும் படியொருகால்
வழங்க வருளார் திருப்பேரூர்
வாழ்வே வருக வருகவே
மகிமைப் பச்சை மரகதமெய்
வல்லீ வருக வருகவே. (உ)

மைக்கும் பணைபூம் பொழிலிமய
மன்ன வனுந்தே வியுமின்ப
வாரி படியும் படியமைநன்
மணக்காட் சியினின் பெருங்காமர்

---

¶ குழங்கல் — மாலை விசேடம்.

மொய்க்குங் கமலத் தாளையரன்
முரண்கற் புணர்த்தித் திருவருட்சீர்
முதிர்கற் புணர்த்துந் திறமதுதான்
மூல மலத்துட் கிடந்தவமே
யெய்க்கு மடியேஞ் சிரத்தில்விதி
யெழுத்தற் றொழிய வமைத்துமெம
திருண்ட கருங்கன் மனமிசைநீ
யிழுதி னிளகிக் கரைந்துருக
வைக்கும் படிக்குங் காண்பேரூர்
வாழ்வே வருக வருகவே
மகிமைப் பச்சை மரகதமெய்
வல்லீ வருக வருகவே. (ரு)

பணியே பணியாப் புனைந்தவருட்
பட்டிப் பெருமா னகம்புறத்தும்
பார்த்துப் பரமா னந்தமுறும்
பச்சைக் கிளியே யணித்திரள்கட்
கணியே மதுர வருள்வளப்பாட்
டமையும் பொருட்கோர் மெய்ப்பொருளே
யல்லற் பிறப்பி லெம்மைவிடா
தழைக்கு மொழியார் நாதக்கிண்
கிணியே யடித்தா மரைபொலியுங்
கிருபைக் கடலே யமுதவெற்பே
கிரிவேந் தியற்றுந் தவப்பேறாய்க்
கிடைத்த மணியே யெம்மிருகண்

மணியே யொளியே திருப்பேரூர்
வாழ்வே வருக வருகவே
மகிமைப் பச்சை மரகதமெய்
வல்லீ வருக வருகவே. (ச)

கதியே வருக விதியொழிக்குங்
கதிரே வருக வுட்புறந்தோய்
கருவி கரணங் கலந்தினிக்குங்
கரும்பே வருக வருட்சேம
நிதியே வருக மலமாயை
நிரப்பு நிரப்பை யழிக்குமின்ப
நிறைவே வருக கன்னியென
நின்றே யணைத்து மீன்றருளம்
புதியே வருக வவிர்பொன்னம்
பொருப்புச் சிலையார் விருப்புறுமற்
புதமே வருக வெமக்கமைமெய்ப்
புகலே வருக சிவஞான
மதியே வருக திருப்பேரூர்
வாழ்வே வருக வருகவே
மகிமைப் பச்சை மரகதமெய்
வல்லீ வருக வருகவே. (ரு)

வேறு.

ஏடகம் பொலியுபய தோடகந் திகழ்திருவொ
ரிருவருமொ வொருவரென்ன
வெண்ணவுயர் விண்ணமைமின் வண்ணமுறு நுண்ணி
ளேந்திழையர் வருநவமணி
[டைகொ

யாடகப் பாடகத் தாடகக் கூடகத்
தடியவரி லொருவனென்றே
யண்டர்களு மண்டலத் தொண்டர்களும் விண்டருண்
யற்புதப் பொற்புதவவே [மெய்

நாடகத் துவகைநிறை நாடகத் துணையடிகொள்
நாதன்வளர் நாதமுடிநேர்
ஞானவா னந்தசுக மோனவா னந்தசபை
நணிசிறந் தோங்குமகதி

மாடகத் தவனேது பீடகப் பேரையின்முன்
வந்தருள்க வந்தருள்கவே
வரமிகத் தருதல்லி மரகதத் திருவல்லி
வந்தருள்க வந்தருள்கவே. (சு)

காழியம் பதியில்வரு மேழிசைத் திருமறைக்
கவுணியப் பிள்ளைக்குநீள்
காக்கையர்மு தற்சொலவி ராக்கையபழி யாச்சித்தர்
கட்கும்பல் பத்தர்கட்கு

மாழியென நின்கைபுனை பாழியர வத்தின்முடி
யமைசுமைத் தண்டரங்க
வாழியற் கணிகுலவு பூழியற் கிணையில்பணி
பசலமன் னற்குமன்பர்

சூழியமு டிச்சிறிய வீழியித ழார்சுதைத்
தோற்றமுற் றுங்கருணைசெய்
சூற்கொண்ட கொண்டல்புரை கண்களொடென்
தோன்றிநீ யஞ்சலினிதே [விழிமுனங்

வாழியென் ருேதியவி ரூழிபொலி பேரூரில்
வந்தருள்க வந்தருள்கவே
வரமிகத் தருதல்லி மரகதத் திருவல்லி
வந்தருள்க வந்தருள்கவே. (எ)

தனனத்தான தனதனதய்யா தந்தன தந்தனன.

*துகினக்கோடாள் புரவலனில்லா
டொன்றுசெ யுந்தவமார்
சொருபப்பாவா யிரணியவில்லார்
சுந்தர நெஞ்சகலாய்
சிகியிற்ருேய்தே சமைகதிர்வைவேல்
செங்கைய மைந்தியல்சேய்
செகம்விட்பாலார் துயரறவல்லே
சிந்துர வைங்கரனர்
மகிழ்நற்ருயே வழிபடுநல்லோர்
மஞ்சுள பஞ்சரநேர்
மனதிற்ருேய்கோ புரமிசைவில்லேய்
மஞ்சுப டிந்தணியார்
மகிமைப்பேரூர் மருவியசெல்வீ
வந்தருள் வந்தருளே
வளமைச்சீரூர் மரகதவல்லீ
வந்தருள் வந்தருளே. (அ)

---

* துகினக்கோடு — இமயமலே.

தனனதனன தன்னதனன தனனதன்ன தனதனு.

அருவ முருவ முபய நிலைகொ
டடிய ரிதய கமலமே
ரனலி னிழுதி னுருக விரவு
மமுத கிரண சொருபியே
கருவ வுததி யமிழு மடையர்
கனவி னிலுமெய் தரியமா
கடவுள் புலவி யொழிய முடிகொள்
கவினன் மவுலி யணையதாண்

மருவு புரண கவுரி மதுர
வசனி யுரகர் புவியுளோர்
மகிமை முனிவர் சுரர்கள் பரவும்
வளமை யரச வனமுளாய்
வருந மடியன் மிசையெய் தலைமுன்
வருக வருக வருகவே
மணிம ரகத மயிலென் விழிமுன்
வருக வருக வருகவே. (கூ)

தத்தனுதன தன்ன — தனதனு.

கற்பகா டவிவிண்ணி டத்தில்வாழ் வுறவெண்ம
கத்தர்கா ணருமன்னை வருகவே
கற்புநீ டியமெய்ம்ம கத்துவா கரர்கண்ண
கத்துளோ வருதிண்மை வருகவே

வெற்பதா யவிர்வண்ண விற்கொளீ சுரனுன்னும்
வெற்றிவே ணிகர்கண்ணி வருகவே
மிக்கவா ரமுதன்ன வொப்பில்பா டல்கள்பன்னு
மெய்த்தபோ தனருண்மை வருகவே

துற்பசா சுறழ்பொய்ம்ம னத்தவா வழிநண்ணு
துட்டரோர் வருகன்னி வருகவே
தொக்கவா ரணமெண்ணில் பற்பல்கோ டிகள்சென்னி
துற்றதாண் மலரன்னம் வருகவே

பற்பமா ணமைகண்ம ணிக்கணூர் வமுண்மன்னு
பத்தர்வாழ் வெனுநன்மை வருகவே
பட்டிநா யகர்தம்மொ டொப்பில்பே ரையின்மின்னு
பச்சைநா யகியம்மை வரு

வாரானைப்பருவம் முற்றிற்று.

---

## அம்புலிப் பருவம்.

---

### சாமம்.

திங்குவளை மாலையக லத்தினம் பிரமரத்
தினமா விருந்திடுகையாற்
சேவாக னத்துவச ரெண்ணிடத் தின்முடி
திருக்காட்சி யாந்திறத்தா

லோங்கிமய வரைமன்ன வன்பாக்கி யச்சுதை
யுருக்கொண்ட விற்பொலிதலா
லுந்துமீ னக்கொடிய னங்கமீ திற்கவிகை
யொத்தோம் படைப்பணியினாற்

றுங்குமதி மாதுரிய வெண்ணிலா வானந்
தமெய்ப்பா லளித்திடுதலாற்
றுனவப் பேரேற்ற வத்திமுக மாங்காத
லாரவா ரம்பெறுதலா

லாங்குண வளப்பச்சை நாயகியை நிகர்வையா
லம்புலீ யாடவாவே
யாரூரர் பன்னிசைகொள் பேரூரர் பன்னியுட
னம்புலீ யாடவாவே. (க)

## தலைவி பகுதி

(பதப்பொருள்) தீங்கு — தீமைகளையெல்லாம், வளை — சுற்றச் செய்யும், மாலை - மாயா மயக்கங்களை, அகல - நீங்கும்படியாக, தின் - விழுங்குகிற, அம் - அழகிய, பிரமரத்தினமா - பரப்பிரமத்தைக்கூட்டும் மாணிக்கப்பிரகாசமாக, இருந்திடுகையால் - நிலை பெறுதலாலும், சேவா - தரிசனஞ்செய்யும், கனத்து - தவமகிமை மிக்க, வசர் - சாத்தியசித்தர்கள், எண் இடத்து - நினைத்தவிடங்களில், திருக்காட்சி - மனத்தைக் கவரும் சகுணவடிவத்தைக் காட்டுகை, ஆம்திறத்தால் - ஆகும் தகுதியாலும், ஓங்கு - உன்னதமான, இமயவரை மன்னவன் - பருவத ராஜனது, பாக்கியம் - பெருவாழ்வாகிய, சுதை - மகளாகி, உரு - வடிவமானது, கொண்டலில் - நீலமேகம்போன்று, பொலிதலால் - சிறத்தலாலும், உந்தும்- செலுத்தும், ஈனக் கொடியன் - இழிவுள்ள துற்குணமுடையேன், அங்கம் - சரீரம், மீது - எதிர்காலத்தில், இல் - இல்லையாகும்படி, கவி - விரும்பக்கூடிய, கையொத்து - ஒழுக்கமிசைந்து, ஓம் - பிரணவமாகிய, படைப்பு - சிருட்டியைச் செய்யும், அணியினல் - அலங்காரத்தாலும், தாங்கும் - காக்கும்படி, மதி - எண்ணுகின்ற, மா - பெரிய, துரியக்கண் - துரியநிலைமீதுள்ள, எண்ணிலா - அளவுபடாத, ஆனந்த மெய்ப்பால் - பரமானந்தமயமாகிய உண்மையினிடத்து, அளித்திடுகையால் - கொடுத்தலாலும், தான - மதமாகிய, அப்பு - கருணை நீரையுடைய, ஏர் - சிறப்பை, ஏற்ற - தன்பாற் கொண்ட, அத்தி முகமாம் - யானை முகத்தையுடைய, காதல் - மூத்தபிள்ளையார்பால், ஆர, நிறைவாகிய, வாரம் - உரிமையை, பெறுதலால் - அடைதலாலும்; தலைவிக்கும்:

## சந்திரன் பகுதி

(பதப்பொருள்) தீம் - தித்திப்பாகிய தேனையுமிழும், குவளை

மாலை - நெய்தற் பிணையலணிந்த, அகலத்தின் - மார்பினிடத்து, அம்-நலம்பொருந்த, பிரமரத்து இனம் - வண்டுக்கூட்டங்களுண்ணும்படி, விருந்திடுகையால் - புதுமையாகிய உணவு தருதலாலும், சே - இடபமாகிய, வாகன துவசர் - வாகனமும் கொடியுமுடைய சிவபெருமானது, இடத்தில்-வாமபாகத்தும், முடி-திருமுடியின்மேலும், திருக்கு ஆட்சி ஆம்திறத்தால் - கண்ணுகை ஆளப்படுந் திறத்தாலும் (கண்களைக் கவரும் தோற்றத்தோடு கூடியிருத்தலாலும்), ஓங்கு - மிகுதிப்படும்படி, இமையவரை - தேவர்களை, மன்ன - நிலைபெற்ற, அன்பாக்கிய - சிநேகர்களாக்க, சுதை உருக்கொண்டு - அமுத கலை வடிவந்தாங்கி, அல்லிற்பொலிதலால் - இராக்காலத்தில் சந்திரிகை வளங்கொண் டுலாவலாலும், உந்தும் - எழுச்சி நிறைந்த, மீனக் கொடியன் - மச்சத்துவசத்தையுடைய மன்மதனது, அம் - அழகிய, கம் - சிரசின், மீதில் - மேலிடத்தில், கவிகையொத்து - குடையாகிப் பொருந்தி, ஓம்படை - காக்கின்ற, பணியால் - தொழிலாலும், அதிமாதுரியம் - மிக்க சுவையமைந்த, வெள் - வெண்மையான, நிலா - சந்திரிகையை, வான் - ஆகாயம், அந்தம் - அழகமையுமாறு, தாங்கு - தரித்துள்ள, மெய்ப்பால் - சரீரத்தினின்றும், அளித்திடுகையால் - கொடுத்தலாலும், தானவப்பேரேற்று - தானவனென்னும் பெயரடைந்து, அ - அந்த, அத்திமுகம் - கடலிடமாகிய, ஆங்கு - பிரதேசங்களில், ஆரவாரம் - பேரோசையைப், பெறுதலால் - அடைவித்தலாலும் ; சந்திரனுக்கும் ஒத்ததென்க.

பைங்கதிரி னங்கமஞ் சார்மணி திரட்டுதன
பாரமல்கு தாரவணியாற்
பதுமத்த ளங்கணீ ரானனைந் திரவான
பாணிகூப் பிப்பணிதலாற்

பொங்கமா சித்திங்க ணண் ணுமே லவருமன்
புண்ணியம மைந்துமெய்யாம்
போக்கியங் காவும்பர் வாய்விண்ட தேசியற்
பொருளார வாக்கையுறலாற்

றங்கவம் பரமாவி ரத்திநம னந்தவஞ்
சக்கரற் கிடமாதலாற்
சானவிக் கண்மைத் திருக்குந் தளக்கொன்றை
யலர்தலைவி யாமவிசையா
லங்கமர கதவல்லி யெங்களனை யனையையா
லம்புலீ யாடவாவே
யாரூரர் பன்னிசைகொள் பேரூரர் பன்னியுட
னம்புலீ யாடவாவே. (உ)

## தலைவி பகுதி

(பதப்பொருள்) பைங்கதிரின் - நீலமணிபோன்ற பிரகாசத்தை யுடைய, அங்கம் - திருமேனியின்கண், மஞ்சு ஆர் - அழகு நிறைய, திரட்டு தனபாரம் - திரண்டுள்ள ஞானமயமான கொங்கைகளாகிய மலைகளில், மல்கு - நிறைவுபெற்றுள்ள, மணி - இரத்தினமயமாகிய, தார் - மாலைகள் பிரகாசிக்கும், அ - அந்த, அணியால் - புனைவினாலும், பதுமத்தள் - இலக்குமிதேவி, அம் - அழகிய, கண்ணீரால் - ஆனந்தபாஷ்பத்தினால், நனைந்து - முழுகி, இரவான - கெஞ்சுதலுடன் விரித்த கைகளை, கூப்பி - சிரசின்மீது குவித்து, பணிதலால் - வணங்குதலாலும், பொங்கம் - மிகுதியாகிய, மா - பெரிய, சித்து - சித்திவல்லபங்கள், இங்கண் - இவ்வுலகத்து, நண்ணும் - பொருந்தியுள்ள, மேலவரும் - பெரியோர்களையும், அன்பு - பக்திப்பொலிவுறக்கூட்டி, உள் நியமமைந்து - இதயத்தில் விவேக வலிமைகள், மெய்யாம் - சத்தியமாக்கும், போக்கு - கதியில், இயங்கா - நடப்பித்து, உம்பர்வாய் - பரமாகாயத்தில், விண்ட - விரிந்த, தேசு - பெருஞ்சோதி மயமான, இயற்பொருள் - உண்மை வஸ்துவானது, ஆர - உண்ணும்வண்ணம், ஆக்கையிடலால் - அவர்களின் சரீரத்தைக் கொடுத்தலாலும், தங்க - (உள்ளத்தில்) நிலைபெறுமாறு, அம்பரம் - பரமாகாசத்தையிசைக்கவல்ல, மாவிரத்தி - மேலான துறவுநெறியைக் கூட்டி, நமன் - இயமனை, நந்த - கெடும்படிசெய்யும், அஞ்சக்கரற்கு - பஞ்சாக்ஷரத் திருமேனியமைந்த சிவ

பிரானுக்கு, இடமாதலால் - வாமபாகம் பொருந்தியுள்ளதாலும், சால் - பொருந்திய, நவி - மான்போன்ற, கண் - விழிகளும், மை - மேகம்போன்ற, திரு - அழகமைந்த, குந்தளம் - அளகபாரத்தையும், கொன் - கற்பின் பெருமையையும் உடைய, தையலர் - மங்கையர் கட்கெல்லாம், தலைவியாம் - இறைவியாய் விளங்கும், அ - அந்த, இசையால் - கீர்த்திப் பொருத்தத்தாலும்; தலைவிக்கும்:

## சந்திரன் பகுதி.

(பதப்பொருள்) பைங்கதிரின் - (நெல் முதலிய தானிய வகைகளின்) இளங்கதிர்களின்பால், அம் - அழகமைந்து, கமஞ்சார் - நிறைவு பெற்றுள்ள, மணி - வித்து மணிகளை, திரட்டுதன் - மினுக்கமிசையச் செய்தலாகிய, அபாரமல்கு - எல்லையற்ற வளப்பமிகுந்த உதாரம் - வள்ளற்றன்மை அமைந்த, அணியால், சுதாகரனுகிய அலங்காரத்தாலும், பதுமத்தளம் - தாமரை மலரிதழ்கள், கள் நீரால் நனைந்து - தேனுகிய சலத்தில் முழுகி, இரவானபாணி - இராக்கால வேளையில், கூப்பி - குவிந்து, பணிதலால் - கவிழ்தலாலும், பொங்கம் - பொலிவை, ஆசித்து - விரும்பி, இங்கண் - தன் மண்டலத்தில், அண்ணுமேல் - பொருந்தியகாலம், அவரும் - பாவிகளும், மன் - நிலைபெறும், புண்ணியமமைந்து - பரிசுத்தத் தன்மையிசைந்து, மெய்யாம் போக்கியம் - சரீராநுபவமாகிய போகாநுபவம் நிறைந்த, கா - கற்பகத் தருவின்கீழ், உம்பர் - தேவர்களுடன், வாய்விண்ட - சொல்லியவண்ணமான, தேசியல் - கீர்த்தி பொருந்திய, பொருளார் - வஸ்துக்களின்பால் நிறைந்த, அவா - ஆசைப்படி, கையுறலால் - தரிசன விசேடத்தாற்பெறக் கூட்டுதலாலும், தங்கவம்பரம் - பொற்பீதாம்பரமும், மா - இலக்குமியும், இரத்தினம் - கௌஸ்துப மணியும், மன் - நிலைபெற்ற, நந்த - சங்கமும், அம் - அழகிய, சக்கரற்கு - சக்கராயுதமும்பொருந்தியுள்ள திருமாலுக்கு, இடமாதலால் - உறைவிடமாயதாலும், சானவிக்கு - கங்காநதிக்கு, அண்மைத்து - நெருங்கிச் சிவபிரான் சடையினிடத்து, இருக்கும் - பொருந்தியுள்ள, தளக்கொன்றையலர் - இதழ்விரிந்த கொன்றைமலரின், தலை - இடத்தில், வியாம - ஒளியமைந்துள்ள, இசையால் - ஒற்றுமையாலும்; சந்திரனுக்கும் ஒத்ததென்க.

மையகங் கோவினிலி ரட்டையங் கங்கூர்ந்து
வண்கடக மேறுகையினுல்
வன்மடங் கல்லிவர லாலெண்ண ணிக்கன்னி
வாசத்தி லத்தமார்ந்த
செய்யதூக் கேற்ருல வாலமறை யவிருச்
சிகத்திசைவி ஞவல்பெறலாற்
சேயென்ன வாண்டளப் பற்குமுன் ஞேதுமுப
தேசவிற் பாலனிடலாற்
கையமக ரத்தங்க மாற்றலினுல் கும்பங்
கவின்ருரு மேற்கைகொளலாற்
காணுமச் சத்திருப் பார்வைபவ ராசியங்
கட்டங்கெ டுப்பமைகையா
லையமிலை நீயருட் டுய்யமர கதநிகர்வை
யம்புலீ யாடவாவே
யாரூரர் பன்னிசைகொள் பேரூரர் பன்னியுட
னம்புலீ யாடவாவே. (ரு)

## தலைவி பகுதி.

(பதப்பொருள்) மைய - நடுவிலுள்ள, கம் - ஆகாயமயமான, கோவின் - தலைவனுகிய சிவபெருமானது, இல் - மனைவியாய், இரட்டையங்கம் - இருவிதத் திருமேனிகள், கூர்ந்து - நுணுக்கமாய் நெருங்கி, வண் - வளப்பமாகிய, கடகம் ஏறுகையினுல் - இடப்பாகத்தில் கங்கணங் காட்டியுள்ள கையாலும், வன் - வலிதாய, மடம் - அஞ்ஞானத்தை, கல்லிவரலால் - அகழ்ந்தெடுத்தலாலும், எண் - மதிக்கத் தகுந்த, அணி - அழகு பொருந்திய, கல் - வரையிடத்தில், நிவாசத்தால் - வசித்தலாலும், அத்தம் - பொருட் சிறப்பு, ஆர்ந்த - நிறைந்த, செய்ய - மேலாகிய, தூக்கு - பத்தர்களது தோத்திரப் பாக்களை, ஏற்று - கைக்கொண்டருளியும், ஆலவால - பாத்தி

போன்று பல விஷயங்களால் நிறைந்துள்ள, மறை - வேதங்களின், அவிர் - ஒளியமைந்த, உச்சி - முடியானது, கத்து - சத்திக்கின்ற, இசை - ஒலியின்பத்தை, விறைவல் பெறலால் - கேட்டுவகை யமைத விறலும், சேயென்ன - குமாரனென்று, ஆண்டு - ஆட்சி செய்து, அள் - கைகளிலெடுக்கும், அப்பற்கு - (கங்கா சடாதாரியாகிய) பிதாவுக்கு, உபதேசம் - பிரணவப் பொருளைப் போதித்த, வில் - ஒளிமயமான, பாலன் - குழவியை, இடலால் - ஈந்ததாலும், கை - வெறுக்கத்தகுந்த, யமகரத்து அங்கம் - கணந்தோறு மியமனலுண்டு வரும் கன்ம சரீரத்தை, மாற்றலின் - நீக்குதலாலும், ஒல்கும் - நாணத்துடன் கூடிய, பங்கம் - சிறுமையை, இன் - இனிதாகிய, தாரு - கற்பக விருக்ஷமும் ஏற்கும்படி, மேற்கை கொளலால் - மேலான திருக்கரங்களைக் கொண்டுள்ளதாலும், காணும் - நோக்கு கின்ற, அச்சம் - பயத்தை விளைக்கின்ற, திருப்பார்வை - தெய்வீக வீட்சண்யமானது, பவராசி - பிறவிக்கூட்டங்களாகிய, அங்கு - அவ்விடத்திற் செலுத்தும், அட்டம் - புரியஷ்ட காயத்தை, கெடுப்பு - கெடும்படி செய்து, அமைகையால் - நிலைபெறுதலாலும்; தலை விக்கும்:

## சந்திரன் பகுதி.

(பதப்பொருள்) மையகம் - மேடத்தினும், கோவினில் - இட பத்திலும், இரட்டை - கன்னியிலுமாக, அங்கங்கு ஊர்ந்து - அவ் வவ்விடங்களினும் இவர்ந்து நீங்கி, வண்கடகம் ஏறுகையினல் - ஆட்சிவள மிசைந்த கடகத்தில் ஏறுவதாலும், வன் - கொடுமை யுள்ள, மடங்கல் - சிங்கத்தின்மேல், இவரலால் - மேற்கொள்ளலா லும், எண் - இலக்கமாகிய, அணி - வரிசையமைந்த, கன்னிவாசத் தில் - கன்னிராசி வசிப்பாலும், அத்தமார்ந்த - கையிலமைந்த, செய்ய - மேலான, தூக்கு - துலாராசியை, ஏற்று - விரும்பி, ஆல - விடத்தை, வால - வாலினிடத்து, மறை - ஒளித்துள்ள, அ - அந்த, விருச்சிகத்திசைவின் - (தன்னுடலிலுள்ள அமுத நிறைவால்) விருச் சிகராசியில், ஆவல் பெறலால் - வெற்றிகொண்டமைய விரும்புவ தாலும், சேயென்ன - குமாரனென்று, ஆண்டளப்பற்கு - வியாழ பகவானுக்கு, முன் ஓதும் - ஆட்சிவீடாகிய தனு மீனங்களின்

இயற்கை முன்னேக்கம் ஆக அல்லது வாரத்தின் முன்பாக இசைக் கும், விற்-புலமைச்சிறப்பிசைந்த, பாலன் - புதனை, இடலால் - ஈந்த தாலும், கைய - ஒழுக்கமைந்த, மகரத்து அங்கம் ஆற்றலின் - மகர ராசியில் மெய்யிளைப்பாறுதலாலும், ஒல் - பொருந்திய, கும்பம் கவின்று - கும்பராசியில் விளங்கி, ஆரும் ஏற்கை கொளலால் - பகையின்றி யாவர்களாலும் ஏற்றுக்கொள்வதாலும், காணும் - இமையற்ற கண்ணமைந்த, மச்சத்து - மீனராசியினிடத்து, இருப் பார் - தங்குதல் பொருந்திய, வைபவராசி - மகத்துவக்கூட்டங்களு டன், அம் - அழகிய, கண் - இடந்தோறும், தங்கு - மாருத நிலையுடன் இருக்கும், எடுப்பு - மேன்மை, அமைகையால் - இசைதலாலும்; **சந்திரனுக்கும்** ஒத்ததென்க.

## பேதம்.

மாதமொரு நாள்புரண மாதலுற மிக்கபிர
மாதமுளை நீயிவளருண்
மன்னுபரி பூரணனு னுன்னும்விரி காரணமெய்
மாட்சிநிறை காட்சியுடையாள்

கோதமையு முனதுசுதை கொண்டவர்க ளொண்டொ
குற்றேவ லாளரிவள்கண் [டியர்
கொண்டபேர் தங்கணெதிர் கண்டபேர்க் குயர்வீடு
கொள்ளைகொள நல்கவல்லோர்

சீதளவி யற்கலைக ளாதவனி டத்தொரு
தினத்ததிக மேற்கமுடியாச்
சிறியைநீ தாயிவட னறியகா தணிகோடி
திங்களொர் தினத்தாக்குமா

லாதலினு னைக்கூவன் மேதகைய கருணையா
லம்புலீ யாடவாவே
யாரூரர் பன்னிசைகொள் பேரூரர் பன்னியுட
னம்புலீ யாடவாவே. (ச)

மங்கையிவள் சிறியவொரு மகனடிமை யாமுனிவன்
மலையெச்சி லுண்டு*மயிலின்
வாயெச்சி லுமிழெச்சி லாய்மார வேணுணி
வண்டெச்சி லண்டெச்சிலா
நங்கையர்த மிதழெச்சி லுண்டகா முகர்வாய்கொ
ணுவெச்சி னிந்தைகொண்டே
ஞாயிறுமி ழெச்சிலா யவனுண்ட மிகையெச்சி
னன்கருந் தித்திரிவைநீ
சங்கையற வோதுநர்தம் வாயெச்சி லெய்தியவை
சதுர்மறைக ளெனவவற்றின்
றக்கமுடி மேற்குலவு முக்கணனு ளத்தூறு
தண்ணமுத வண்ணமமைவா
ளங்கையின ழைத்திடுமு னிங்கணை தன் மிக்கநல
மம்புலீ யாடவாவே
யாரூரர் பன்னிசைகொள் பேரூரர் பன்னியுட
னம்புலீ யாடவாவே. (ரு)

## வேறு — தானம்.

தொடுத்த புகழிந் திரனுமுன்
றேழன் றிரிலோ கன்கரிகாற்
சோழர் கன்னி யெழுவர்குசத்
துவச னடனீண் முசுகுந்தன்
கடுத்த பவவங் கிரன்சுமதி
கால வாதி முனிவர்பலோர்
கடத்தற் கரிய பவங்கடத்திக்
கடத்தில் வருந்தா திருங்கதியில்

* மயிலின் வாயெச்சில் – பாம்பு.

விடுத்த சரித மெண்ணிலவா
விளைந்த பிறவா நெறிப்புகழ்யான்
விண்டு முடிவ தோவயனும்
விண்டும் விண்டு முடியாநிற்
கடுத்த விரும்பாக் கியமென்னே
யாட வாரா யம்புலியே
யணியார் பேரூர் மரகதத்தோ
டாட வாரா யம்புலியே. (சா)

உன்னோ டுலவு மொருகதிருக்
குடையாப் பெரும்பே றுற்றிடலா
முரகத் துணையுன் பேருரைக்கி
னோடி யொளிக்கு முரம்பெறலாம்
பொன்னோ டியல்வா ணியும்பழிச்சும்
புகழ்ச்சீ ரமைந்தெங் கணுமெவரும்
போற்றி வணங்கப் பெற்றிடலாம்
பொன்றல் பிறத்த லின்றியொளிர்
மின்னோ வென்னும் பிரணவமா
மேனி யமைந்தெண் ணறுசித்தி
விளையாட் டியற்றிப் பலரொடருள்
வீட்டுட் புகலு மாம்விருந்தென்
றன்னோ வன்னை கூவின*ளே
தாட வாரா யம்புலியே
யணியார் பேரூர் மரகதத்தோ
டாட வாரா யம்புலியே (எ)

---

* ஐது — சீக்கிரம்.

## தண்டம்.

தன தன தானு தன தன தய்யன தானுதந்தனனு.

கலைமதியேநீ நிலைமதியெய்துபு
காணு தொன்றையுமே
கதிகொளலானுய் விதியிளையுள்ளுணர்
கால்யா ருங்கவல்வார்
விலைமதியாமா மணிநிகர்கௌரியுன்
மீதா குஞ்சினமார்
விளைவவமாமோ சிறிதுளமுள்ளலை
வீருர் பொன்கிரிநீள்
சிலைமதியாய் ‡நாணுடனுறுதையலர்
சேர்$நா ணுங்குறியாய்
||திருவணியார்மா தனமிசைவெள்ளமொ
நீரா வம்பறியாய்
மலைமதியாகேன் மலையருள்செல்விமுன்
வாவா வம்புலியே
மகிமைகொள்பேரூர் மரகதவல்லிமுன்
வாவா வம்புலியே (அ)

தத்தன தானன தன தன தய்யன தானுதந்தனனு.

மித்திரனீள்கதிர் தனதிளமெய்யிடை
மேனு லொன்றிடுகான்
மெய்ச்சிறைசேர்கொடி யவனுயிர்கொல்லடல்
வீரு ரொன்பதுபேர்

---

‡ நாண் — சர்ப்பநாரி. $ நாண் — மாங்கல்ய நாண்.

|| திருவணியார் மாதனமிசை வெள்ளமொல் தீரா அம்பு — விஷ்ணுவாகிய அம்புக்கும், உடுக்கூட்டங்களின் தனத்தை நனைக்கும் கண்ணீர்க்குமாகும் இரட்டுரை.

சத்திதன்வார்கழன் மணிதருதையலர்
தாமீ குஞ்சுதரோர்
சற்றறிவாரெனி லுனையவர்செய்கதி
தானுர் கண்டமைவார்
கத்தியுலாமக மறிமறிவல்லமை
காணு நின்றனையே
கற்றவர்தானவ னெனவிடுமொர்பெயர்
காவா வொன்றின்மெய்நீ
வைத்திலகாய்நிச நலமுறவல்லையில்
வாவா வம்புலியே
மைப்பொலிபேரையின் மரகதவல்லிமுன்
வாவா வம்புலியே. (சு)

தந்தன தானு தனதன தய்யன தானு தந்தனனு.

கங்குலை நேரோ தியின்மிசை மல்கொளி
கால்பூ ஞென்றுகைநேர்
கண்பெறு காதா ரரவென வுள்ளுபு
காணைப் கின்றிலனீ
தங்குயர் வோர்வா னெனில்¶விளி யல்லலெய்
தாதேப் பண்பனெனீர்
சங்கரி பாலோ தினமின முய்யுனேர்
சார்பா நின்றனம்யா
மிங்குவ ராயேன் மதியென வொல்பெய
ரேரா ருஞ்†சசிநீ
ரிசைதரு மோகோ வதுபெறும் வெய்யவர்
யாரே யுய்ந்தனர்காண்

---

¶ விளி அல்லல் — அழைக்கும் துன்பம், இறக்கும் துன்பம்.
† சசி நீர் — சசமுடைமை. மதிநீர் — மதமுடைமை.

மங்குதி யேலே கிலதெணி லைமைமுன்
வாவா வம்புலியே
மஞ்சுள பேரூர் மரகத வல்லிமுன்
வாவா வம்புலியே. (க0)

அம்புலிப் பருவம் முற்றிற்று.

---

## அம்மானைப் பருவம்.

---

சத்தியங் கைவிர லுதித்தியற் கங்கைவிண்
சம்புமுடி மேல்வலிந்து
தாங்குபுகழ் தாங்கியது நாங்கருவ மோங்கியது
தரிசனமு மெய்திலேமென்
றுத்தியற் பதுமாத னத்தன் பெருந்தவ
முனுற்றுமெய்ப் பாக்கியத்தா
லுன்கரத் திற்படலப லன்னவடி வங்கொண்
டுதித்துமுடி கண்டுபோற்றி
மெத்தியவு வப்பின்மிக வந்துவந் தென்னைக்கை
விட்டிடே லென்றுவேண்டும்
விதமென்று நின்கரப் பதுமநிதி போற்சங்கு
மேவவொன் றிடுதல்போலு
மத்திபொலி பேரைமர கதவம்மை நித்திலத்
தம்மானை யாடியருளே
யம்மானை யார்கைபொலி யம்மானை யார்கவுரி
யம்மானை யாடியருளே. (க)

மதுவாரி சச்சரவ ணத்தடத் திற்றிகழ்கு
மாரனுரு வாறுமொன்று
வண்கரத் தாலன்னை செய்திடக் கண்டுதனோர்
வல்லமை குகன்காட்டுவான்

கதுமெனப் பலவடிவ மொன்றினின் கைத்தலக்
கண்வந்து வீழ்ந்தெழுதல்போற்
கமலையல கிலரைமுத் திப்பதிப் புறமமை
கணக்கிலுன் காமர்பொற்றாட்

பதுமரா கந்தந்தெ மாவியேற் பதுமரா
கத்தில்விளை பதுமராகும்
பதுமரா கங்கெடப் பாற்றஞா னத்திளம்
பரிதிகளை வீசல்போலு

மதுலபே ரூர்மரக தம்பதும ராகத்தி
னம்மானை யாடியருளே
யம்மானை யார்கைபொலி யம்மானை யார்கவுரி
யம்மானை யாடியருளே. (உ)

தொண்டரித யக்கமல மொன்றிமு மலப்பகை
தொகுத்தமைத் துளசஞ்சிதந்
தொல்லையா காமியபி ராத்தமற வுண்டையிற்
சோராதெ டுத்தெறிதல்போ

லண்டவகை தோறுமிய லிந்திரர்கண் மாலென்
றடைந்துளார் பழிபாவமுற்
றரைநொடியி னீற்றியவ ராட்சிபொலி யுலகத்
தமைத்திடுத லிற்கருணையார்

கண்டமைசி வப்பினிற் காளிபடை யர்திய
கணந்தோன்றி யாடல்செயலிற்
கங்குலுரு மங்கையவிர் செங்கதிரி டங்கதிகொள்
காட்சிபோ லுந்தருவிணு

ரண்டர்புகழ் பேரையிற் பச்சைநா யகிநீல
வம்மானை யாடியருளே
யம்மானை யார்கைபொலி யம்மானை யார்கவுரி
யம்மானை யாடியருளே. (௩)

செங்கதிர்ச் செல்வனுறு பாகனையு மாழியந்
தேர்வலித் திடுமம்பரத்
திரைநிகர்கு திரைகளையு மெங்கென்று தேடவுஞ்
செவ்வேள் புயக்கிளியுடன்

பைங்கலப மயிலினைத் துருவவுங் கிளியான
பரியொடளி யானநாரிப்
பதியையவ னரிவில் லுடனடி வாடவுயர்
பாகசா தனனகரினிற்

பொங்கமார் பஞ்சதரு வேபஞ்ச தருவெனப்
போகமெய்ப் போகர்பரமெய்ப்
போகரா குங்காட்சி மாட்சிபெற வுள்ளம்
பொருந்துமல மங்கமலமாற்

றங்கமல வாவியார் பேரைமர கத*மரிசெ
யம்மானை யாடியருளே
யம்மானை யார்கைபொலி யம்மானை யார்கவுரி
யம்மானை யாடியருளே. (௪)

* அரி — மரகதம்.

தருவான மேற்குலவு சுரரிவர்க ணரரிவர்க
டாமெனத் தெரிதராதே
தலைமயங் கப்புறத் தொன்றல்போற் சூக்குமத்
தன்மையுந் துலையொத்துநீ
ளிருவான முத்தியருள் பிறவாநெ றித்தகைகொ
டிரவுபக லறியாதும்வா
ளிரவியென் றியல்கமல மலரமதி யென்றும்ப
வினமலர வின்பதுன்பத்
துருவான மெய்தரும் பேதமைகண் முற்றுமெங்
கோடியகொ லோவென்றுவிண்
டுள்ளூறு மானந்த ராகிடச் செம்மணியி
லோங்குவெண் ணித்திலத்தி
லருவான கம்மியன் பண்ணியற் கண்ணியத்
தம்மானை யாடியருளே
யம்மானை யார்கைபொலி யம்மானை யார்கவுரி
யம்மானை யாடியருளே. (௫)

வேறு.

இசையு முயிர்க *டிரிபுரத்தி
லெய்தித் தவிக்கத் ¶திரிபுரத்தி
லியற்று மலத்திற் †றிரிபுரத்தி
னிகலோர் புரிதீங் குணர்ந்தமையின்
வசையெய் திடுமென் றுன்னியவர்
மயங்கப் புடைத்துப் பின்பரனுன்
மாய்க்கை நலமென் றெறிந்திடல்போன்
மாடை நீல நித்திலத்தால்

* திரிபுரம் – செல்லும் சரீரம். ¶ திரிபு உரம் – மாறுபாட்டு வலிமை. † திரிபுரம் – முப்புரம்.

விசையுந் திடச்செ *யம்மனைகள்
விண்ணோர் வதியு ¶மம்மனைகள்
விளங்க வதியு $மம்மனைகண்
மிக்க வுவப்ப §வம்மனைநீ
யசையுங் கொடிப்பே ரூரினிடை
யாடி யருளா யம்மானை
யணியார் பச்சை நாயகியே
யாடி யருளா யம்மானை. (சு)

கொங்கார் மலர்மா லைகளாடக்
குளிறும் வண்டின் குலமாடக்
கோதை யாடக் காதியலுங்
குழையொண் குதம்பை யுடனாடப்
பைங்கார் முகநேர் நுதலாடப்
பனிக்குந் திவலை வியர்வாடப்
பனிமா மதிநேர் நுதலாடப்
படைக்கண் மணிமிக் கசைந்தாடப்
பொங்கார் வச்செவ் விதழாடப்
பொருமின் மருங்கு றுவண்டாடப்
பொலிகுங் குமப்பொற் குன்றாடப்
புரண்முத் தார மொளிர்ந்தாட
வங்கார் மேனி மரகதமே
யாடி யருளா யம்மானை
யணியார் திருப்பே ரூரினிடை
யாடி யருளா யம்மானை. (எ)

---

* அம்மனை — அம்மானை. ¶ அம்மனைகள் — அவ்வீடுகள்.
$ அம்மனைகள்—அந்த மனைவிமார்கள், § அம்மனை—அம்மை.

தன தன தானு தன தன தய்யா தானன தன்னுன.

கணிதமில் வேதா கமமுடி யெய்தோர்
    காரண னுண்ணீடு
  கதிருயி ராரோ வியவியன் மெய்யார்
    காமர்நன் மின்னேமெய்
மணிநிகர் மேலோர் துதியருள் வில்லேய்
    மாகவி தம்மோடு
  மதியிலெ னேர்வார் சிறுமொழி கொள்ளேர்
    வாரிச மின்னூர்செய்
பணிபெறு தாளாய் பரகதி நல்கூர்
    பாருயர் விண்ணுகர்
  பயிலுல கூடோர் வருமிசை மல்கூர்
    பாவலர் பன்னூர்பல்
கணிபொலி பேரூர் மருவிய செல்வீ
    யாடுக வம்மானே
  யருணிறை தாயே மரகத வல்லீ
    யாடுக வம்மானே. (அ)

தத்ததானன தத்ததானன தானு தன்னுன.

புத்த ராருக தர்க்கொர் கோளரி
    போலாய் வுண்ணீடு
  புத்தி யோர்கள்சி ரத்தின் மீதணி
    பூணேர் பொன்வீயை
யொத்த தாள்கொள்சு தற்க நாளினி
    லூணு மெஞ்ஞான
  வொப்பில் பாலருள் சத்தி மாயையி
    னூடா மென்னேரொல்

பித்தர் தாமுமெய் மிக்க தூயவர்
பேரு மன்வீடு
பெற்று வாழ்வுற வைப்பின் மேன்மைய
பேரூ ரின்மேவு
மத்தர் தாமகி ழிச்சை நாயகி
யாடா யம்மானை
யற்பு தாகர பச்சை நாயகி
யாடா யம்மானை. (கூ)

தன தன தானு தன தன தய்யா தன்னன தான தன.

பொருணிறை வார்கா வணிபொலி வில்லார்
பொன்னுடர் யாவருநீள்
புரிகுழன் மானு ருடன்மன மெய்தோய்
புண்ணுகி வாடிடுமா
றிருணிறைபேரா ணவமுடனுய்சீ
ரெண்ணுத தானவர்சீ
ரிழுதிசெய் வேலா யெழினிறை செவ்வே
ளின்மார்பின் மேவிடுவாய்
தெருணிறை மேலோ ரகவெளி யுள்ளே
செஞ்ஞாயி றேயொளிபார்
திருவடி நாயே னுளமிசை நல்கோர்
சென்மேனி மாமணியே
யருணிறை பேரூர் மருவிய செல்வீ
யம்மானை யாடுகவே
யமலசொ ரூபீ மரகத வல்லீ
யம்மானை யாடுகவே. (கo)

அம்மானைப் பருவம் முற்றிற்று.

## நீராடற் பருவம்.

முக்கட் பெருந்தகை பிணக்குற் றிடுந்ததியின்
முடியிலவிர் கங்கைநன்னீர்
முளரியடி கட்கன்பு வளரிசைவி னூட்டிமது
முருகலர்க் கொன்றைசூட்ட
மைக்கட் சிறப்பியற் கருணைபொழி யுந்தேவி
வாராவி ருந்தாகிமுன்
வந்திடக் கண்டார வாரமிக வேதன்னுள்
வாய்ந்தமணி பொன்னையலையார்
கைக்கட்கொ டியவுயிர்த் திரள்யாவும் வெம்பவக்
கடலினுமெய் முத்தியின்பக்
கரையேற விடுஞான விரையேறு தாளினிடை
கரையேற மலரொடிட்டு
மெய்க்கட் டழைத்தழைக் கும்பேரை யூர்க்காஞ்சி
வெள்ளநீ ராடியருளே
விச்சைநா யகர்வாஞ்சி பச்சைநா யகிகாஞ்சி
வெள்ளநீ ராடியருளே. (க)

§அள்ளங் கலந்தவுமை யென்பான்மெய் யன்பான்மல்
கானந்த முற்றுடலா
லாகாய கங்கையிணை யாகாய கங்கையென
வார்த்ததை யடங்கும்வண்ணம்

---

§ அள் — அள்ளிக்கொள்ளத்தகுந்த, அம் — அழகு.

விள்ளங் கதிர்த்தெழு திரைக்கைகொடு பாய்வரான்
மீனுன படைசெலுத்தி
மிளிர்காஞ்சி நதிதனுட ஞெளிர்காஞ்சி யணிபுனையும்
வித்தகித ஞெப்பில்கருணை
யுள்ளங் கலந்தசெயல் புறமுறுந் தோற்றத்தி
லோதியுட னேசைவல
மொன்ருகி யங்கரத் தோலிடுஞ் சங்கமென
வோலிடச் சங்கமின்ப
வெள்ளங் கலந்துனருள் வெள்ளங் கலந்தியல
வெள்ளநீ ராடியருளே
விச்சைநா யகர்வாஞ்சி பச்சைநா யகிகாஞ்சி
வெள்ளநீ ராடியருளே. (உ)

என்னையுமொர் கண்ணென்ன வுன்கணரு ணன்கெய்து
மியல்வலர்க ளேத்துநீர்மை
யெண்ணு திரண்டையுநின் வண்ணமாக் குஞ்செயலை
யித்ததியில் யான்பொறேனென்
றன்னைவிழி தன்வண்ண மாக்கவலை மாதுள்ள
மலைமாது கலைமாதுதண்
ணதரத் திசைந்தகங் கலைமாது செய்துநகை
யவிர்நிலாக் காட்டவம்மை
முன்னையுறு வெண்கம்பு பைங்கம்ப தாக்கிமறை
முதல்விதனை மலைமாதியன்
முறைபுரிந் தியாவையுமென் வண்ணமென வேகாட்டி
முதிர்பிணக் காட்டகலவே
மின்னைநிக ரிடையேய்ந்த தன்னைநிக ருமைகாஞ்சி
வெள்ளநீ ராடியருளே

விச்சைநா யகர்வாஞ்சி பச்சைநா யகிகாஞ்சி
வெள்ளநீ ராடியருளே. (௩)

பூமிசை விளங்குதிரு விருவருந் திருவரும்
பொருவரும் பணிசெய்ஞானப்
பூங்கோதை யாரியற் கைத்தெய்வ மணமூழ்கு
புனிதர்புற வுள்ளுடம்பிற்
றுமிசை தருங்கார ணத்தனுவொ டுண்டாடு
தகுசிறைப் புண்மாவினுந்
தாவரமெ னுதுறுந் தாவரமு மாங்காஞ்சி
தன்னினல மன்னியமையத்
தேமிசைச் சுவடுதரு தேமிசை பயோதரந்
தேக்குமின் பாற்பெருக்குந்
தீஞ்சுவைப் பாற்பெருக் கார்ந்துறுப ராசரன்
செல்வரென வுயிர்களெல்லா
மீமிசை யுறப்பேரை யாமிசை யணிக்காஞ்சி
வெள்ளநீ ராடியருளே
விச்சைநா யகர்வாஞ்சி பச்சைநா யகிகாஞ்சி
வெள்ளநீ ராடியருளே. (௪)

மலையிடை யுதித்துமிகு பாசொளி பரப்பியவிர்
மாழைபணி லங்கடகம்வின்
மணிப்பணிகை கொண்டுபர னுடவந் தன்பர்கண்
மலங்களைந் துயிரினங்கள்
நிலைபெற வளித்துற்ற சோகதா கங்களற
நீற்றிநன் செய்யுளணியாய்
நிறைபண்ணை யாளவர்க் கின்பதம் பொருள்கண்மிக
நித்தமீந் திடுதிறத்தா

லுலையுமென் பணிகொண்டு முத்தியின் பாக்குதவி
ஞெண்காஞ்சி யுந்தியாஞ்சீ
ரோங்கலிற் கண்விருந் தாம்பெருங் காட்சிதனி
லுன்னைபொப் பாய்க்கருணையார்
விலையில்பிற வாநெறித் தண்டுறைக் கண்டிரைகொள்
வெள்ளநீ ராடியருளே
விச்சைநா யகர்வாஞ்சி பச்சைநா யகிகாஞ்சி
வெள்ளநீ ராடியருளே. (ரு)

## அம்மைக்கும் காஞ்சிநதிக்கும் சிலேடை.

மலைப்பிறப்பாலும், பச்சை நிறத்தாலும், சங்கப்பணியும் பொன்மணிகளா லியற்றிய ஆபரணந்தரித்தலாலும், (பொன் சங்கு நண்டு மாணிக்கப்பாம்புகளை அலைக்கையிற்கொண்டுவருவதாலும்), பரமசிவன் விளையாட வருவதாலும் (அபிடேகமாடவருவதாலும்), அன்பர்மலம் — மும்மலம் (சரீர அழுக்கு) நன்செய்யுளணியாய் நிறை பண்ணையாள் அவர்க்கு — நல்ல கவிகளுக்கு அலங்காரமாகச் செறிகின்ற இசையை ஆட்சிசெய்யும் புலவருக்கு (வயல்களில் வரிசையாக நின்று செய்யும் வேலையாட்களுக்கு), பொருள்கள் — மெய்ப்பொருள், உலகப்பொருள்கள், நித்தம் — நித்தியத்தன்மை (தினந்தோறும்), பதம் — திருவடி (சோறு), என்பணி — எனது தொண்டு (எலும்பு வரிசை), முத்தி — மோட்சம் (கொஞ்சுதல்), காஞ்சியுந்தி — எண்கோவைமணிதரித்த உயர்ச்சி (காஞ்சிமரத்துந்தி யுதித்துவருதல்).

### வேறு.

திருவோ ரிருவோர் சசிபொடணிந்
திதைக மலினி யிமவரையிற்
றிகழ்ந்துன் சாபத் தியன்மனித
தேகம் பொருந்தி யீண்டுதெய்வ

வுருவா மடவா ரெழுவர்தவ
முற்ற முனிவர் பத்தினிய
ருவப்பிற் றிகழ்குங் குமச்செழுநீ
ரோங்கு சிவிறி வழிதமைநோ்

மருவார் பூங்கொம் பாிற்செலுத்த
மலர்கண் ணீரோ டுன்மீதில்
வாழி வாழி யெனப்பெய்து
மகிமைத் தொண்ட ரினம்புரையக்

கருவா ரிதியைக் கடத்துமம்மை
காஞ்சிப் புதுநீ ராடுகவே
காஞ்சி யிடையாய் பேரையருட்
காஞ்சிப் புதுநீ ராடுகவே. (சூ)

அலகி லுயிர்தோ றவைசெய்கன்மத்
தளவிற் றனுவா தியநான்கா
யகத்தும் புறத்து நிறைந்துநின்று
மறியா வண்ண மறைந்துறல்போ

லிலகும் புனலு ளபேதமுற
வெய்தி மறைய மறையவளு
மேனே யணங்கி னருந்தேடி
யெய்த்துத் தளர்கா லியன்ஞானத்

திகைம் புரைகண் ணீந்தருளத்
திருந்துன் மேனி யலதொன்றுந்
தெரியா தமைபத் திருவருண்மெய்ச்
செல்வ விளையாட் டியற்றிமருட்

கலகந் தவிர்க்குந் தேவியருட்
காஞ்சிப் புதுநீ ராடுகவே

காஞ்சி யிடையாய் பேரையருட்
காஞ்சிப் புதுநீ ராடுகவே. (எ)

தனதன தனதன தய்யா தாந்தத் தனனு தானதனு.

கரமல ரிணையிடை நொய்தா யேந்தற்
கவினுர் சேய்பெறுநோய்
கழிவுற வவுடத மொர்தாய் மாந்தக்
கடனே போலிகலே

பரவிய கொடுமல வல்லூ டோர்ந்துட்
பதிநீ ரோர்விலதேய்
பவமர ணமுதவு பொய்மால் வீண்கற்
பனைதோய் மாயையினீள்

கரவுகொ டுயிரின் மெல்லா மேங்கக்
கதிபாய் காமியமா
கடலெனு மலமறு மெய்மா ஞேங்கக்
கமழ்பே ரூரிடைசால்

புரணன திடமமை செல்வீ காஞ்சிப்
புதுநீ ராடுகவே
பொலியருண் மரகத வல்லீ காஞ்சிப்
புதுநீ ராடுகவே. (அ)

தானத் தாந்தத் தானத் தாந்தத் தனனு தானதனு.

காவைப் போங்கத் தேவர்க் கூர்ங்கட்
கவினீள் மாதரையார்
காவற் பாங்குய்த் தேமிக் கேங்கக்
கதிர்கால் வானிடையே

தீவைத் தாங்கப் பேரிற் சாம்பர்த்
திறமா மாறுசெய்தார்
சேரச் சாம்பெட் பேயக் காண்கைச்
செயவே லாநிகழ்வாய்

சாவைத் தாண்டப் பால்வித் தாம்பத்
தரிஞ வூடியலார்
சாரத் தீஞ்சொற் பாடற் பூண்பொற்
சரண்மீ தேயணிதோய்

பூவைக் காந்தித் தாய்நற் காஞ்சிப்
புதுநீ ராடுகவே
போதச் சாந்தப் பேரைக் காஞ்சிப்
புதுநீ ராடுகவே. (கூ)

தனன தனதன தய்யா தானன தாந்தத் தனதான.

அரிய யனொடல கில்லா நூலின
மாய்ந்தெட் டரிதாமோ
ரமல பரசிவ னுள்வா ழாருயி
ராஞ்சித் திரமானே

விரியு மெழுகட னெய்தே யாமென
மீந்திட் டுளமீதே
விரவு திருவருண் மைபோ லாவிகண்
மேம்பட் டியுமாறூர்

பரிவி னெடுபொழி மைதோய் காதணி
பாய்ந்தெட் டணியோர்சால்
பதும விழிபெறு கிள்ளாய் பேரைகொள்
பாந்தத் துவதேவீ

கரிய னுடன்வரு செல்வீ யாடுக்
காஞ்சிப் புதுநீரே
கதிர்கொண் மரகத வல்லீ யாடுக
காஞ்சிப் புதுநீரே. (கO)

நீராடற் பருவம் முற்றிற்று.

---

## ஊசற் பருவம்.

---

விலகிவில் லுமிழ்துகிர்க் கான்மீது தவளவொளி
மிளிர்வைர விட்டமேற்றி
விரிகிரண விழுதனைய தரளவட மிட்டருண
விகசிதம ணிப்பலகைமேற்

குலவுதிற நீறுபூத் தவிர்நெருப் பருண்மேனி
கொண்டகொண் டற்களத்தன்
குளிர்தய பஞ்சரத் தொன்றுதுவர் வாய்க்கிளிக்
கோலங்க டுப்பமும்மை

மலவிருளி டைக்குவிந் தியவுயிர்கள் பாவவற
வடிவான காயமேய்ந்து
வான்பாத லம்பூத லத்துற்ற வாம்போக
வகைநாடி யோடும்வஞ்சப்

புலனுற்ற வூசலற நலனுற்ற பேரையிற்
பொன்னூச லாடியருளே
புகழ்பட்டி லிங்கனுள மகிழ்பச்சை யம்பிகைகொள்
பொன்னூச லாடியருளே. (க)

செங்கேழ் விரிக்குமரு ணக்கதிர் மணிப்பலகை
சேரவமை வெண்ணித்திலத்
திரள்வடத் துண்ணீ விளங்குசெய விமையத்
திருப்பருப் பதவருகினிற்
கொங்கேய் தரங்கத் தடத்தியற் றமிழ்மணங்
கொண்டசைத் திடுதென்றலின்
குளிர்பரிச சத்தமுட் கொடுமுடி துளக்கியசை
கொள்கைபோ லுந்துள்ளுநீர்ப்
பைங்கேழ் விரிக்குமெழு பாடலத் தொற்றையம்
பாழியா ழித்தேரடற்
பானுமண் டலமுற்ற கோனிம்மண் டலமுற்ற
பதிகளிற் சீர்த்தகொங்கேய்
பொங்கேழ் பிறப்பொழிக் கும்பேரை யூர்த்தலைவி
பொன்னூச லாடியருளே
புகழ்பட்டி லிங்கனுள மகிழ்பச்சை யம்பிகைகொள்
பொன்னூச லாடியருளே. (உ)

செக்கரம் பவளத் தூணக்கா லுள் வெண்ணித்
திலத்திரு வடத்தினுண்ணீ
தேசியல் பசுங்கிரணம் வீசியமை தரலுற்ற
சீவபோ தவிராசதப்
பொய்க்கரண வாதனை கடந்துசத் துவஞான
போதவநு பூதியருளார்
புத்தமுத வின்பப் பெருக்கினிற் கிரவம்
போதிமிசை சேடன்மீதின்
மெய்க்கரத் திரையசைத் திடவாடு சோதரனில்
விரிபரிதி மண்டலந்தோய்

வெண்ணிலா மண்டலத் துண்ணிலா வுந்தகையில்
வேழவில் லேந்தாகுமம்
புக்கரத் தேவியணி மிக்கமெய்ப் பேரையிடை
பொன்னூச லாடியருளே
புகழ்பட்டி லிங்கனுள மகிழ்பச்சை யம்பிகைகொள்
பொன்னூச லாடியருளே. (௩)

கள்ளூறு வாசமலர் வாசமட வார்வடங்
கைப்பிடித் தாட்டவணியார்
கமலினி யனிந்திதைகண் மலர்மாலை பரிமளக்
களபமுத லேந்திநிற்ப
வுள்ளூறு மின்பிற் புலோமசையி ரதிகவரி
யோயா தசைத்துவப்ப
வோங்கட்ட மங்கலத் தொடுபடிய கம்பலப
லொண்டொடியர் தாங்கவுள்ளத்
தள்ளூறு முழுவலன் பின்பெருந் தொண்டர்பர
மானந்த மெய்தவொப்பி
லாதியா கும்பரஞ் சோதியவிர் மெய்பாதி
யாகவிர கம்பொருந்தப்
புள்ளூறு புரிமாய னுள்ளூறு சோதரீ
பொன்னூச லாடியருளே
புகழ்பட்டி லிங்கனுள மகிழ்பச்சை யம்பிகைகொள்
பென்னூச லாடியருளே. (௪)

பருவமதி யனையவத னம்புயத் திளநகை
பரந்தாட வொப்பில்கருணை
பரவுயிர்த் திரள்கண்மிசை பெய்விழித் துணைதோடு
பாய்ந்தாடி டப்புறத்திற்

கருமைபொலி பணிவேணி நுதியிலகு முச்சுடர்க்
காட்சியிற் குச்சிலங்கிக்
கதிரொளி விரித்தாட மார்பின்முத் தாரங்
கவின்ருட நுண் ணுசுப்புக்

குருமணிகொண் மேகலையு மாகலையு மாடவண்
கொச்சையூர்ப் பிள்ளையுள்ளங்
குளிர் தரப் பாலுதவு மொளிரிளங் குங்குமக்
குன்றங்க ளாடிடத்தற்

பொருமணி யடிச்சிலம் பாடிடப் பேரையிற்
பொன்னூச லாடியருளே
புகழ்பட்டி லிங்கனுள மகிழ்பச்சை யம்பிகைகொள்
பொன்னூச லாடியருளே. (ரு)

## வேறு.

ஒப்பற் றவிர்நின் கரத்தாள
மொப்பச் சிற்றம் பலத்தாடு
முரத்தா ளத்த னின்காம
ருரத்தா ளத்துக் கிசைவுறத்தன்

பைப்பற் றறுகட் கட்செவிவாள்
பரப்பு மணிமௌ லிமைத்துளக்கப்
பாகீ ரதிபார் வதியின்வலப்
பாகீ ரதியா நீயமையி

லெப்பற் றடியாட் குளதென்ன
வேத்தி நுரைவாய் பெறப்பொங்க
லீசன் றனைநித் திலவடங்க
ளேற்ற வூச லிட்டாட்டு

மப்பற் றமையப் பேரூரி
லாடி யருளாய் பொன்னூசல்
அவிர்சீர்ப் பச்சை நாயகியே
யாடி யருளாய் பொன்னூசல். (௬)

தருந்தாய் தந்தை யாமேனை
சயில மன்ன னுளத்துவகை
ததும்ப விவ்வி ருமைக்கண்ணுந்
தழைத்த விருமைக் கண்ணுமயில்
விருந்தா யண்ட பிண்டமுறும்
வித்தாய் வேத முடிபொருந்தும்
விமலாய் நிகரற் றிலங்குமணி
விளக்காய் வதிந்து மாயைக்குள்
வருந்தா யெனவென் னுள்ளருளால்
வருந்தாய் துன்பப் பிணிதவிர்க்கு
மருந்தாய் பட்டி லிங்கனுள்ள
மருந்தாய் தொண்டர் பாக்கியமா
ரருந்தாய் பிறவா நெறிவளர்தா
யாடி யருளாய் பொன்னூசல்
அவிர்சீர்ப் பச்சை நாயகியே
யாடி யருளாய் பொன்னூசல் (எ)

தனனதனதன தனனதனதன தானு தய்யான.

கமலா தனமிசை யிசைவே தியன்முடி
கார்நேர் மெய்நீடு
கடியார் துளவணி யுரமா யவனடி
காணு துள்வாடி

விமலா வுணையல தெமையாள் கதியினி
வேறே தையாவெம்
விழிநே ரணேகென வருள்பா டிடவருள்
வீரர் மெய்யோன்வெஃ

கிமயா லயம்வளர் கிளியே புவியின
மீரே ழுள்வாழு
மியமா னரொடுட லுதவா விளமையு
மேகா மெய்தோயு

மமலா யணிபொலி பிறவா நெறியின
ளாடாய் நல்லூசல்
அமுதே மரகத மயிலே மகிழ்வுட
ளுடாய் நல்லூசல். (அ)

தன்னுதானு தனதனதய்யா தானன தன்னன.

பொய்ம்மான் மேவா வடியவ ருள்ளார்
பூரண மென்னிடில்
பொன்னேர் தாளா யரதன வில்லேய்
பூணவிர் மெஞ்ஞான

மைம்மா ணுர்பா லருவியை நல்கோர்
மாடைகொள் கன்மானும்
வன்னேர் தேசோ மயவிள மைசான்
மாதன வன்னேயொல்

கைம்மா நாணு நடைபெறு கிள்ளாய்
காதணே கண்ணுன்மெய்
கண்ணுன் மேவா தருள்புரி கௌரீ
கார்நிக ரொண்மேனி

யம்மா பேரூர் பொலிதரு செல்வீ
யாடுக பொன்னூசல்
யம்மான் வாமீ மரகத வல்லீ
யாடுக பொன்னூசல். (கூ)

தனதான தானதன — தனதான தானதனு.

கனமேவ நீடரச மரம்வானி லாவமரர்
கனிவாயுண் மூவரெனவே
களியோகை யோடுபணி வுறுகாலை நீளுமிலை
களில்வீழ நீர்மெய்நிலைதான்
மனமீது தேரவரு ளுபுதிரு மாறுபரன்
வதிபேரை மேவுதிர்களேன்
மடியாது வாழ்குவிர்க ளுளமீதில் வாய்மையென
மதியீர்க ளாயினவண்மே
யினமான வேபிறவி யிலதாகி வாழ்புளியை
யிறவாதுநீள் டனையைநீ
ரிருபார்வை யாலறிய வெமதோடு மேவுமினெ
னியல்போலு மேன்மைபொலிசீ
ரனமேவு பானல்வய லவிர்பேரை யூரிறைவி
யணியூச லாடியருளே
யருள்வாரி நேர்கண்மர கதநாய கிமணிசெ
யணியூச லாடியருளே. (கO)

ஊசற் பருவம் முற்றிற்று.

பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

## நூற்பயன்.

தத்ததானன தய்யத்தனனு.

ஒட்டியேதுய ரெய்தப்புரிவீ
ணுற்றமாயையை வெல்லச்செயுமே
மட்டில்பூரண வெள்ளச்சுகமேல்
வைக்குமேன்மைகொள் தெய்வத்துணையே
யெட்டிவாழ்நிலை நல்கற்புதமே
யெய்ப்பில்பேரையில் வைகொப்பிலதோர்
பட்டிநாயகர் மெய்யுற்றிலகோர்
பச்சைநாயகி பிள்ளைத்தமிழே.

**தெய்வமே துணை.**



உ

தேவி சகாயம்.

# திருப்பேரூர் மரகதவல்லியென்னும்

# பச்சைநாயகி மாலை.

## சற்குரு காப்பு.

### கட்டளைக்கலித்துறை.

பேரூரில்லோனுயிர் பேரூரறக்கொள்பே ரூரினல்லோர்
நாரூர்மனத்திற் குதிகொண்டருள்பச்சை நாயகிதன்
சீரூர்பதத்தணி பாமாலையொன்றன்பிற் செப்புதற்குப்
பாரூர்புகழிரா மானந்தநாதன் பதந்துணையே.

## நூல்.

### கட்டளைக்கலித்துறைகள்.

பிறவாநெறிபுக் குழன்றிடுமென்கொடும் பேய்மனத்தைப்
பிறவாநெறியிற் புகுமாறருள்பிற வாநெறிப்பேர்
சிறவாநிற்குந்திரு வாதிபுரிமேற் சிதம்பரமா
நறவார்மலர்ப்பொழில் சூழ்பேரைவாழ்பச்சை நாயகியே. (க)

ஆண்பிள்ளைமேலென வோதுசொற்கொண்டன் றசல மன்னன், மாண்பிள்ளையாமுன்னை டாண்பிள்ளையொன்றெய் தின் மங்கலநாண், சேண்பிள்ளைத்திங்கட் சடையானினக்கிட றேருமன்னு, ணண்பிள்ளைதானுங்கொள் வான்பேரை வாழ் பச்சை நாயகியே. (உ)

அல்லுறழ்கண்டங்கொ ணம்பெருமான்கங்கை யானவளைப்
புல்லுவனென்றையங் கொண்டோவலா தருட் பொற்பமைந்த
வில்லுறநாமதி யாதுகொண்டானெனு மேக்கங்கொடோ
நல்லுருப்பாதியா ளுய்பேரைவாழ்பச்சை நாயகியே. (௩)

கம்பதிர்கங்கையை யல்லாலியற்பகை காதலியாங்
கொம்பனையாளையும் வேட்டேவிறகிற் குல்வழல்போற்
கும்பல்கொள்கூடல் வசியமின்னார்வளை கொள்ளவெழு
நம்பனைநம்பினை யேபேரைவாழ்பச்சை நாயகியே. (௪)

வாரென்றுவேணிகொள் கங்கையைநீவின வற்கணங்கே
நீரென்றுபன்மை யொருமைமயக்கி னிகழ்த்திலதைக்
காரென்றுகொண்டமை வாய்கற்புடையர்க்குக் காதலர்பா
லூரென்றுங்கொண்முறை யேபேரைவாழ்பச்சை நாயகியே. ()

தானப்பெருக்கந் தருந்தருப்போன்றநின் றளையரன்
வானப்பெருக்கறு கார்சிரமீதினின் மற்றவைகண்
மானப்பெருக்க முறப்புனையாமை மறையுமென்னும்
ஞானப்பெருக்கங்கொ டோபேரைவாழ்பச்சை நாயகியே. (௬)

மொச்சையுண் டான்றெழூந் தாதைநின் காமர் முதிர்வ
டிவி, விச்சையுண் டானின்கை யிட்டதுண் ணுன்றிண்ண
னெச்சிலுண்டான், பிச்சையுண்டான்சிறு பிள்ளையுண்டான்
வந்தி பிட்டையுண்டான், நச்சையுண்டான்பினென் னேபே
ரைவாழ்பச்சை நாயகியே. (௭)

சேயபங்கேருகம் வெண்டாமரைகொ டெரிவையர்க
ளாயவிலோசனங் கொள்ளன்னையேமல ரந்தணனு
மாயனுமற்றவர் நாயகரென்றசொல் வம்பவர்க்கு
நாயகனுதன்கண் டாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (௮)

தெள்ளருட்பாடல்சொ லூரனும்மூரிடஞ் சேரவரன்
பள்ளவுருக்கொளப் பள்ளியிற்றேயுணைப் பள்ளியினிற்
கொள்ளருட்சுந்தரங் கண்டகண்ணீர்விடக் கூழிடநீ
நள்ளகமெற்றமைந் தாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (கூ)

பித்தனென்றேதிய வாரூரன்மீதிற் பிழையுளதோ
வொத்தகுலப்பெண் மணம்போக்கிவேசை யுதவுபெண்ணின்
கைத்தலம்பற்றுவித் தங்கவளூடல் களையுமொற்றாய்
*நத்தமுற்றுற்றலேந் தாற்பேரைவாழ்பச்சை நாயகியே. (கO)

ஒருபாகந்தோயரன் செவ்வேளிடத்துப தேசமுற்றான்
குருவாங்குமரன் குறுகிடிலன்னவன் கோமலர்த்தாள்
பெருமான்வணங்கிட நீநீங்கொளுமையிற் பெற்றவிரு
நருமேதொழவருங் காண்பேரைவாழ்பச்சை நாயகியே. (கக)

வண்ணக்கரிமுகஞ் சான்மூத்தபிள்ளையை மாநிலந்தோ
யெண்ணற்றகுன்றிடத் துங்கோயில்கொண்ட விளஞ்சுதனை
யெண்ணத்தொடையொன்றான் றுள்ளீரிருவரு மெய்த
நண்ணற்கெதுபுரி வீர்பேரைவாழ்பச்சை நாயகியே. [வைத்து

ஓதமதிக்க வருநஞ்சமஞ்சிய வும்பருய்வான்
மாதயவாற்பெரு மானுண் ணுங்காலே மறுத்திடவு
மாதரத்துண்டத ஞலோசுதனை யருந்துமன்று
நாதனுக்கோதல்விட் டாய்பேரைவாழ்பச்சை நாயகியே.(கங)

எற்பாக்கைகொண்டுந் தளர்ச்சிசற்றின்றிவில் லென்னவுயர்
வெற்பாக்கியவர னேடுகொண்டூர்தொறு மேயிரந்து
நிற்பாக்கியனென் றுலகர்சொல்லாவண்ண நீமணையா
நற்பாக்கியம்படைத் தான்பேரைவாழ்பச்சை நாயகியே. (கச)

---

* நத்தம் — இராத்திரி.

உறவமைமநாதனைப் பிச்சாண்டியாயிரந் துண்ணவிட்டே
யறமொரெண்ணான்கையு நீவளர்த்தாலுமிவ் வம்புவியோர்
பிறர்சிறப்போதலர் நீயறம்விட்டுப் பிராற்றடுத்த
னறவமையோதிநன் ரும்பேரைவாழ்பச்சை நாயகியே. (கரு)

அன்மணங்கொண்ட குழலணங்குன்னை யசலமிசை
முன்மணங்கொண்டன னன்றரனின்பொன் முளரியந்தாள்
கன்மணங்கொண்டிட வைத்துணர்ந்தேமுடிக் கட்புனைந்து
நன்மணங்கொண்டனன் பின்பேரைவாழ்பச்சை நாயகியே. ()

பற்பட்டமூர லதனுற்றிரிபுரம் பல்கழலின்
முற்பட்டபஞ்சி லெரித்தார்தம்பாக முயங்கியுநீ
புற்பட்டதோலுடை யோடெலும்பாதிய பூணணியாய்
நற்பட்டணிகொண்ட தென்பேரைவாழ்பச்சை நாயகியே. ()

மகன்றந்தை சோதரன் காதலனிற்கு மலைநடஞ்செய்
குகன்றந்தைதந்தைக் கவன்குருமுன்வருங் குஞ்சரமா
முகன்றந்தைபோற்றிடு தெய்வமெல்லோர்க்கு முதல்விநிற்கு
நகன்றந்தைநும்முறை யென்பேரைவாழ்பச்சை நாயகியே. ()

அரியற்றுத்தேவியின் றையனையாறற்கெ ஞரணங்கேட்
டுரிமைக்குணத்தண்ண னின்னிலும்வேறின்றென் றுய்த்
தெரியிற்கொதித்திக லிப்பெரிதூளை யிடுமவர்தா [துணரா
நரியொப்பர்வாலுண் டெனிற்பேரைவாழ்பச்சை நாயகியே.()

போதம்பொருந்துன் றிருமுலைப்பாலைப் புசித்தளவில்
காதங்கமழும் பொழிற்காழிவள்ளல் கனிந்ததமிழ்
வேதங்கொடுன்னைத் துதியாதிறைபுகழ் விள்ளவைத்தாய்
நாதன்புகழ்க்கிச்சை யோபேரைவாழ்பச்சை நாயகியே. (உ0)

உன்றனைப்பாடத் துவக்கஞ்செயின்மனத் தூற்றெடுத்தே
யென்றனையிர்ப்பதிங் கென்றவமோநின் னிடக்கணெனுங்
குன்றனைத்தாம்புள கக்கொங்கைநாமகள் கொட்டருளே
நன்றனைத்தும்பொலி யும்பேரைவாழ்பச்சை நாயகியே. (உக)

தானம்புயலிற் பொழிசிந்துரத்திற் றருக்கிமிக
வீனம்புணருங் கொடியோரிடைபுல ரென்னையுயர்
வானம்புணர்நின் கழல்கொண்ட பேரின்பவாரியிடை
நானம்புரியப் புரிபேரைவாழ்பச்சை நாயகியே. (உஉ)

காவாருலகி னரகிற்புவியிற் கறங்கெனவே
யோவாதுசுற்றி யுழலுமென்னுவிமை யுன்னுண்மதித்
தாவாவெனச்சற் றிரங்குகண்டாய்பவ வாழியின்மீள்
நாவாயெனத்திக ழும்பேரைவாழ்பச்சை நாயகியே. (உ௩)

அம்மாவெனவுனை யோர்தரமன்பி லழைப்பவர்பாற்
சும்மாவிருக்குஞ் சுகோததியாழ்த்தத் தொடர்தல்கண்டு
மிம்மாநிலத்தில் வறிதலைந்தேனெனை யேன்றுகொளாய்
நம்மாதரநிறை யும்பேரைவாழ்பச்சை நாயகியே. (உச)

ஊடத்திருத்தி பெறமடவாரை யுயருமணி
மாடத்திருத்திட வாஞ்சைகொள்வேனைவெள் வாரிசத்தாள்
பாடத்திருத்திருத் தங்கிடவொப்பனை பண்ணுநின்றுள்
நாடத்திருத்திடு வாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (உரு)

நிலக்கண்ணிமைந்தவர் யாவரும்பத்திமை நேர்ந்திடநின்
வலக்கண்ணருள்சற் றிரந்தேனெனையின்ன மாநிலத்தி
லலக்கண்ணமையவி டாதேநின்பாதத் தடைக்கலமெய்ந்
நலக்கண்ணளித்தருள் வாய்பேரைவாழ்பச்சை நாயகியே. ()

பீடுந்தியமறைக் கெட்டாநின்சீர்த்திப் பெருக்கையன்பிற்
பாடும்புலவர் தமக்கெளிதேகொடைப் பைந்தருக்கீழ்க்
கூடும்புலவர்தம் வாழ்க்கையும்வாரிசன் கொண்டல்வண்ண
ளுடும்பிறவுந் திருப்பேரைவாழ்பச்சை நாயகியே. (உஎ)

அன்னேமரகத வல்லீயென்றன்பி லழைப்பதற்கு
முன்னேயவர்விழி முன்னேவருமருண் முற்றமைந்த
பொன்னேநவமணி யேயுனேயோவறப் போற்றுமொரு
நன்னேயமேதரு வாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (உஅ)

அவியாமுண்வுண் டரம்பையரேவல ராகுநர்கட்
செவிபூணெனக்கொண் டவனுள்ளெழுதுநின் சேவடியைக்
குவிவாமனத்தொடு கண்ணிற்கண்டானந்தங் கொண்டுநின்
நவிலாப்புலவரன் றேபேரைவாழ்பச்சை நாயகியே. [சீர்

வஞ்சம்பொருந்து மனத்தேனெனினுநின் மாமலர்த்தாட்
கஞ்சம்பொருந்திலென் குற்றமென்னேர்பனிக் காட்சியன்றே
தஞ்சம்பொருந்திமை யோர்களின்பெய்திடச் சார்களத்தி
னஞ்சம்பொருந்தினன் றேய்பேரைவாழ்பச்சை நாயகியே. ()

பாட்டிற்றுதிக்கு மெளியேற்குனதருள் பாலித்திடாய்
நீட்டித்திருப்பதென் முன்னொருபாட னிகழ்த்தினன்பின்
காட்டிற்றிரிந்தயர் பாதாம்புயமென் கருத்தினுள்ளே
நாட்டிற்சிவக்குமென் றேபேரைவாழ்பச்சை நாயகியே. (நக)

ஏதக்கணங்கணந் தோறுநல்கிக்கணத் தேயொழியும்
பூதக்கடம்பற் பலயோனியூடும் புகுந்திளைத்தேன்
மேதக்கநின்றிருத் தொண்டர்கள்போலினி மேலெனினு
நாதக்கழற்புகுத் தாள்பேரைவாழ்பச்சை நாயகியே. (நஉ)

சேயேயெனவெனைச் சொந்தமதாக்கொண்ட செல்வவருட்
டாயேயென்குற்றங்க ளெண்ணிநின்னுள்ளந் தனிற்சினந்து
நீயேபுறந்தள் ளிடிலினிவேறெவர் நெஞ்சுவந்திந்
நாயேனையாதரிப் பார்பேரைவாழ்பச்சை நாயகியே. (௩௩)

சகம்பெற்றமாயை வலியான்மனமிக்ச் சஞ்சலிப்பே
னகம்பெற்றவைப்பென வோங்குநின்னின்ப வருள்வடிவை
முகம்பெற்றகண்கொண்டு காணவெந்நாளன்பின் முன்வரு
நகம்பெற்றவாரமு தேபேரைவாழ்பச்சை நாயகியே. [வாய்

முகிற்போலிருண்ட குழன்மடவார்தம் முலையருந்தத்
திகிற்சாருநெஞ்சம் படைத்தயர்வேற்குட் சிறிதிரங்கி
யகிற்றூபமாடப் பிரமாபுரப்பிள்ளைக் கன்றளித்த
நகிற்பால்சிறிதரு ளாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (௩௫)

பகைப்பாணமேவ வருமாரன்மெய்பக் கெனவெரியப்
புகைப்பாரனையர் கொளுந்தவவேடம் புனையநல்கித்
திகைப்பாகிவாட வடியேனை வைத்தது தெள்ளியர்க்கு
நகைப்பாகவோபுக லாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (௩௬)

பொக்கம்படும்பொருட் டாயகமாம்புன் புலாலுடம்புட்
டுக்கம்பொருந்தி யுழல்வேனைநின்னருட் டொண்டடியார்
பக்கம்பொருந்த வமைத்தெனைக்காப்பதுன் பாரங்கண்டாய்
நக்கன்புகழமு தேபேரைவாழ்பச்சை நாயகியே. (௩௭)

கொங்கார்கணைசிலை பாசமொடங்குசங் கொண்டவிர்நின்
பைங்காமர்மேனிகண் டெந்நாள்பணியப் பணித்தருள்வாய்
வெங்காமவேளை யெரித்தானும்போற்ற விளங்குமெழி
னங்காயிணையற் றவிர்பேரைவாழ்பச்சை நாயகியே. (௩அ)

விசைபெருக்கும்புல வேடருட்பட்டு வெதும்பியழி
தசைபெருக்கித்தளர் நாயேனுன தருட் டாட்டுணைதோய்ந்
திசைபெருக்குந்தின மொன்றுளதோபட்டி யீச்சுரனுண்
ணசைபெருக்குங்குயி லேபேரைவாழ்பச்சை நாயகியே.(௩௯)

துச்சமுறுங்கன வேபோன்றொழியுமித் தூலமிசை
நிச்சயபுத்தி படைத்திறுமாந்துழ னீசனெனக்
கச்சமிலானந்த வாழ்வுறுமாறென் றருள்புரிவாய்
நச்சரவாழிகொள் வாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (௪0)

வசிக்குங்கொடுவிழி யார்சுகத்தூண்டிலின் வாயிரையைப்
புசிக்கும்படிவிடுத் தேவினைதீர்தரும் போழ்திலுடல்
சுசிக்குண்டியாக வெனதாவியையம தூதர்பற்றி
நசிக்கும்படிகை விடேல்பேரைவாழ்பச்சை நாயகியே. (௪௧)

போராடுமன்மதன் பூங்கணைபாயப் புலர்ந்துமின்னார்
சீராடல்கண்டவர்க் கேவல்செய்வேனின் றிருவடிக
ளாராதனம்புரிந் தானந்தமெய்த வருள்வதென்றே
நாராயணன்றங்கை யேபேரைவாழ்பச்சை நாயகியே. (௪௨)

ஒளிகொண்டெனுள்ளத் தொளிகொண்டநின்னடி யுன்னியன்பிற், களிகொண்டநெஞ்சுந் துளிகொண்டகண்ணுநின் கஞ்சமன்ன, வெளிகொண்டதாளும் வெளிகொண்டுகாண விளங்கிடுவாய், நளிர்கொண்டதண்பணை சூழ்பேரைவாழ் பச்சை நாயகியே. (௪௩)

ஈனத்தரணியி னுட்சுழல்வேனை யெடுத்தருளாற்
கானத்தருமறைக் கெட்டாநின்சீர்த்தி கழறவைப்பாய்
வானத்தமரரும் வானத்தனுமகிழ் வானத்துமோர்
ஞானத்தனிச்சுட ரேபேரைவாழ்பச்சை நாயகியே. (௪௪)

தேனேமதுரச் செழுங்கனியேசிற் சுகப்பொலிவார்
வானேமவுன வெளியேவெளியில் வளர்நிறைவே
யூனேயெனதுயி ரேயின்பமாரொளிக் குள்ளொளியே
நானேயுனைநம்பி னேன்பேரைவாழ்பச்சை நாயகியே. (சரு)

காலங்கடந்த சிவபோகருள்ளங் களிப்பவருட்
சீலங்கடந்தரு ளும்பதகஞ்சத் திருநிதியே
கோலங்கடந்த பெருஞ்சுகமெய்திடக் கூட்டிடுவாய்
ஞாலங்கடந்தவர் தாழ்பேரைவாழ்பச்சை நாயகியே. (சசு)

தேன்கண்டனமொழிச் செல்விநின்றன்மணச் சேவையிமக்
கோன்கண்டுவான்கண்ட பின்னேமலையங் குலவுமுனி
தான்கண்டுவக்கப் புரிந்தாயத்தன்மையிற் சற்றருளால்
நான்கண்டுவக்கப் புரிபேரைவாழ்பச்சை நாயகியே. (சஎ)

உற்றாய்பவருளத் தோவாதுபேரின்ப மூற்றுமறை
முற்றாய்சராசர கோடிகளீந்து முலைமுதிரப்
பற்றாயடியர்தம் பற்றாயெனது பவமொழித்தாள்
நற்றாய்நினக்கப யம்பேரைவாழ்பச்சை நாயகியே. (சஅ)

பண்ணிற்பொலிசெந் தமிழ்கொடுன்சீர்துதி பண்ணிடுவா
னெண்ணிற்சுகமிக் கிசைவதென்றாலினி யென்னிதயக்
கண்ணிற்கண்டுனமை கண்ணிற்கண்டோங்கநின் காட்சிநல்க
நண்ணிற்புகல்வதென் னேபேரைவாழ்பச்சை நாயகியே.(சகூ)

கனியேயினியகற் கண்டேகணபதி கந்தன்வருந்
தனியேதனிமுதற் கோர்துணையேமெய் தழைத்தமனேன்
மனியேநவமணி யேகண்மணிக்குள் வளருமின்னே
நனியேத்துமன்பர்க் கருள்பேரைவாழ்பச்சை நாயகியே.(ருO)

இற்பாலமையவி டாண்மாயையென்னை யெடுத்திடுக்கி
வற்பாலையாமுல கிற்சேர்த்திகற்றத்து வப்பெயர்தோய்
துற்பாலர்கைக்கொடுத் தாள்சோகதாகந் துதைந்திளைத்தே
னற்பாலளித்தனை யாள்பேரைவாழ்பச்சை நாயகியே. (ருக)

மாலக்கவங்கன் முதலோர்துயரற மாந்துநஞ்ச
நீலக்கண்டப்பெரு மானுடனொப்பக னீவதியு
மோலக்கங்காணப் புரியினுஞ்சேர்த்தியை யோதுதற்கு
*நாலக்கஞ்சற்றல்ல வோபேரைவாழ்பச்சை நாயகியே. (ருஉ)

கன்றுவன்றுன்பப் பனிப்பற்றொழியவென் கண்ணெதிரே
யென்றுபல்லாயிரம் போலுநின்சேவையை யீந்தென்வினை
குன்றும்வண்ணம்புரிந் தென்சோதனைகள் குயிற்றிடினு
நன்றுநன்றேயஞ்சி டேன்பேரைவாழ்பச்சை நாயகியே. (ருங)

ஊனோர் பொருளென வேகாட்டுமாயையி னுட்கிடந்து
நானேரெளியன் படும்பாடனைத்தையு நன்குணர்ந்து
மேனேதயவிலர் போலிருந்தாய்சற் றிரங்கியருண்
ஞானோதயம்பெறச் செய்பேரைவாழ்பச்சை நாயகியே. (ருச)

மாண்மலர்மேற்கொளேந் தாருக்கணுண மருவவிரைத்
தாண்மலர்காட்டுந் தருவேதிருவருட் சாகரமே
வாண்மலர்க்கண்கொண்ட வாரிசமாதர் வகிர்ந்துகட்டு
நாண்மலர்ஞானக் குழற்பேரைவாழ்பச்சை நாயகியே. (ருரு)

நினையறிவாகியென் னெஞ்சகமீதி னினைக்கினுட
னனையறியாதவொர் சூலினின்சீரெழு மாயினரன்
றனையறியாவின்பந் தேக்குநின்னேடொன்றுந் தன்மையி
னனையடியேன்பணி யான்பேரைவாழ்பச்சை நாயகியே. [னின்

---

* நா, இலக்ஷம் எனப்பிரிக்க.

புண்ணியன்மாயைத் துயர்நின்றெனேடோதவென் புந்தியிடை
யெண்ணினன்பாட லிசைத்திடுகாலையி லென்னதுள்ளத்
துண்ணிறைதுன்பகன் றேடுவதாலென் னுளத்தினுள்ளே
நண்ணியதேயுரைப் பேன்பேரைவாழ்பச்சை நாயகியே. (ருஎ)

அலைமங்கைமான்மார் பலைமங்கையாகிட வாதரஞ்சால்
கலைமங்கையுள்ளங் கலைமங்கையாகக் கவினிமய
மலைமங்கையீசன் மலைமங்கையாகினை மற்றெவர்க்கு
நலைமங்கைநீகா ணருட்பேரைவாழ்பச்சை நாயகியே. (ருஅ)

தீயேனைமாயை மயக்கத்திலாழ்ந்தொரு திக்குமற்ற
பேயேனையெண்ணுக் கடங்காததுன்பப் பெருக்கினனைத்
தாயேனைமானிடர்க் கெய்தாதசுத்தசன் மார்க்கமுய்த்திந்
நாயேனைக்கைக்கொண் டருள்பேரைவாழ்பச்சை நாயகியே.()

ஊனைமதித்துக் கடன்மதித்தால முறச்சுரர்தந்
நானைமதிக்கிலர் நாரியர்நானை மதித்தழுங்கி
மானைமதிச்சடை யார்க்கோதவுண்டார் மறுத்திலைநின்
ஞானைமதித்துநங் காய்பேரைவாழ்பச்சை நாயகியே. (சூ0)

காட்டியன்மாக்களின் காயங்களுக்கிடு காடுகளாய்
நாட்டியன்மாக்கள்சன் மார்க்கப்பயிரை நசிக்கின்றவால்
வீட்டியல்வேட்டம் புரியப்புரியருள் வெள்ளிமன்றில்
நாட்டியன்மெச்சி யணைபேரைவாழ்பச்சை நாயகியே. (சூக)

போகம்பரவுன் முலையாரமுதம் புசிக்குநர்தெய்
வீகம்பரவு மடியார்க்குநல்கும் விறலர்பரி
பாகம்பரவ வொருவர்க்கருளிரு பாலுமுற்ற
*நாகம்பரவும் புகழ்ப்பேரைவாழ்பச்சை நாயகியே. (சூஉ)

---

* நாகம் – நாகலோகம், தேவலோகம்.

மரகதவல்லிநின் றன்றிருநாமம் வழுத்திடுவார்
துரகதம்யானை யிரதத்திலூர்குநர் தொண்டுகொண்டே
யரகதப்புன்சம யத்தர்தங்கொற்ற மறுத்திருடோய்
நரகதமாக்குநர் காண்பேரைவாழ்பச்சை நாயகியே. (௬௩)

மன்னுயிர்க்கும்புகட் கெய்திடுந்துன்ப வகைகளெல்லா
மென்னுயிர்க்குற்றன போலெண்ணியுற்றோ ரிடர்களைந்து
பொன்னுவந்தேத்துநின் றாளுடணையவென் புந்தியுட்டோய்
நன்னுதலற்கருள் வாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (௬௪)

பான்மறைத்தேசிறு சேய்க்குநல்காவன்னை பண்பெனவே
யேன்மறையாகம மேத்துன்கருணைசற் றெண்ணுகிலாய்
தான்மறைத்தாயொரு வர்க்கீயிலெண்ணிலர் தாமுய்வரே
நான்மறையேத்தும் புகழ்ப்பேரைவாழ்பச்சை நாயகியே. ()

அடியார்சிறந்தவ ரோதெய்வமோவென்னு மையமிந்தப்
படியார்படியா ரிடத்தினுமேசற்றும் பற்றலின்றிக்
குடிபோடுநின்றனப் பால்வெளியாகிற் குலவுமன்றி
னடியார்வன்றோயுநங் காய்பேரைவாழ்பச்சை நாயகியே.(௬௬)

தம்மாலியல்கை கரத்தனல்லோர்க்குத் தருமமன்றென்
றம்மாபெரியர் புகன்றிடக்கேட்டன னுதலினன்
மைம்மாலொத்தாடல் புரியநிற்கொப்பில் வரமளிக்க
நம்மான்முற்றுதென்பை யோபேரைவாழ்பச்சை நாயகியே. ()

நீபமலர்ப்புயத் தான்குஞ்சரமுக னேரருட்சீர்த்
தாபதர்தங்குழு வூடிருத்தற்குத் தகேனெனினும்
பாபவுவர்ச்சுழிப் பட்டுழலுங்கொடும் பாவியென்னை
ஞாபகஞ்செய்தியன் னேபேரைவாழ்பச்சை நாயகியே. (௬௮)

இழுதெரியுற்றென்ன நெஞ்சுருகித்துண ரிட்டுவந்து
பழுதறுசெந்தமி ழாலுனைத்தோத்திரம் பண்ணியன்பிற்
றொழுதிலனேனுநின் னாலயத்தைச்சுற்றி லேனெனினு
நழுவவிடேலன்னை யேபேரைவாழ்பச்சை நாயகியே. (சுகூ)

உள்ளத்திற்குற்ற மொருகோடியெய்தினு முற்றுப்பெற்ற
பிள்ளைக்குந்தாய்க்குமோர் பேதமுண்டோபிழை யன்றியென்
வெள்ளத்தனைநல மின்றின்றுமெய்ம்மை யிசைத்தனனு [பா
னள்ளற்கருள்புரி வாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (எO)

செம்மலராடொழுந் தாய்நின்கருணைத் திருவுளத்திற்
சம்மதித்தெத்தகு தண்டஞ்செய்தாலுஞ் சகிப்பன்கண்டாய்
மெய்ம்மருவும்பிணிக் கௌடதமீயின் வெறுப்பருண்டோ
நம்மயல்போக்கத் திருப்பேரைவாழ்பச்சை நாயகியே. (எக)

எவ்வாறெனைப்புரிந் தாயினும்யாக்கை யெனக்கெனவே
செவ்வாரிசன்படை யாதுநின்வாரிசச் சேவடிக்க
ணெவ்வாசின் மெய்க்கதி யீந்தனைகாப்பதிங் குன்பரங்கா
*ணவ்வாகியபதத் தாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (எஉ)

வினைவடிவாகுமிக் காயத்துக்கெவ்விடர் மேவினும்யா
னினைமறவாவரந் தந்தாளுலக நிரயமிசை
யெனையோர்கணம்விட்டி டேல்சகியேனிமை யோர்மலரா
னனையருட்சேவடி யாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (எங)

நலங்கிளர்மெய்த்தொண் டடியவர்யாருநின் னுண்மலர்த்தாட்
கலங்கிடைத்தேறினர் நானேழைஞானமெய்க் கண்ணிழந்து
சலங்கிளர்வல்வினைக் காயத்தைமெய்யெனத் தட்டழிந்து
நலங்கினன்காணன்னை யேபேரைவாழ்பச்சை நாயகியே.(எச)

* நவ்வு – தோணி.

நீலமணிக்குன்றம் போலவென்றுயிங்கு நீயிருந்துஞ்
சாலமியற்றுபொய்த் தத்துவவேடர்க டம்மிடையா
ஞுலவராக்கெளவுந் தேரையொத்தெய்த்தன ஞவிதுதான்
ஞாலவழக்குமன் றேபேரைவாழ்பச்சை நாயகியே. (எரு)

புல்லாருமான்முத லாமுயிரூன்களுட் போடகட்டுப்
பொல்லார் தலைக்கிடி போற்கவிபாடிநின் பொன்னடிக்கண்
வல்லார்பலருட னும்புகுமாறுளம் வாஞ்சைகொண்டே
னல்லாய்சிறிதருள் செய்பேரைவாழ்பச்சை நாயகியே. (எசு)

எத்தனைகாலமின் னங்கழித்தாலுநின் னீடிலருட்
சித்தமிரங்கினல் லாலுய்யுமாறு தெளிகிலன்யான்
மெத்தருட்சாகர நீயெனிற்றேல்வினை வேண்டிடுவாய்
நத்தன்னையேசிவை யேபேரைவாழ்பச்சை நாயகியே. (எஎ)

தெய்வமொன்றென்னத் தெளியாவறிவிலர் செப்புமொழி
மெய்வழக்காயினன் றேயொன்றிளைத்துறின் வேறருட்சீர்
செய்வதற்கெய்திடு மொன்றென்றசொற்சித்தித் திட்டலவோ
னைவளித்திட்டதிங் ஙன்பேரைவாழ்பச்சை நாயகியே. (எஅ)

முத்தாரக்கொங்கை மடமாதர்வாஞ்சையுண் மூழ்குபுவீண்
வித்தாரம்பேசி வெளிவேடங்காட்டிமண் வித்தமிசை
பித்தாகிவாடிடு பேயேனுன்பாதம் பெறுவதுண்டோ
நத்தார்தடம்பணை சூழ்பேரைவாழ்பச்சை நாயகியே. (எகூ)

மாமிசபிண்டங் களையாண்பெண்ணென்ன மதித்துமதன்
பூமிசைபாயத் தளராதுனதருட் புண்டரிகப்
பூமிசைசூடப் புரிநமன்போற்றப் புகுவதற்கு
*நாமிசைஞான வருட்பேரைவாழ்பச்சை நாயகியே. (அ0)

---

* நாம் — அச்சம்.

மனைமக்கள்வாழ்க்கை சதமென்றுநம்பியிம் மாநிலத்திற்
பனையொத்ததுன்பப் படுவார்களோடெண்ணப் பட்டவமே
வினையிற்றவிக்கவிட் டாயன்றிமெய்ச்சுக வேலையிடை
நனையச்செய்தாயில்லை யேபேரைவாழ்பச்சை நாயகியே. (௮௧)

பைங்காசைமாமலர் மேனியினனுட் பரிவமைந்த
தங்காயம்மட்டினிற் றங்காயவன்பணி சங்கரன்றன்
பங்காயளவறும் பண்பாய்நின்சீர்த்தி பகரவருள்
நங்காய்மறைக்கு மறைபேரைவாழ்பச்சை நாயகியே. (௮௨)

சோறுதவாத்தெய்வம் பின்னேமிகவுயர் சொர்க்கமெனும்
பேறுதவுங்கொலென் றேதும்பழமொழிப் பெற்றிநம்பி
வீறுறுநம்பி விலகாமனெல்வினை வித்துநல்க
நாறுநட்டாய்கொலம் மேபேரைவாழ்பச்சை நாயகியே. (௮௩)

மாதாவென்றல்ல பிதாகுருதெய்வமு மற்றனைத்து
நீதானென்றெண்ணிநம் புந்தமியேன்மிசை நெஞ்சுவந்தே
யேதாகினுமொரு பேறளித்தாயிலை யேங்கவிட்டாய்
நாதாந்தியேமுறை யோபேரைவாழ்பச்சை நாயகியே. (௮௪)

தேனென்றுயர்செந் தமிழ்கொண்டுனைத்துதி செய்திடினு
மேனென்றுகேள்வி முறையற்றிருந்திடி லெய்த்தடியே
னானென்றுநின்று மடிவதல்லாலுன துண்மைகண்டு
நானென்றுகூடுவ தோபேரைவாழ்பச்சை நாயகியே. (௮௫)

பாலக்கனவெவ் வனக்கனவாகியப் பால்விருத்தக்
கோலக்கனவெய் தியதினிவேறுடற் கூட்டிடவே
காலக்கனவு வரும்வருமுன்னுட் கருணைவைத்திஞ்
ஞாலக்கனவொழிப் பாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (௮௬)

வாடப்புரியு மடவார்வலைப்பட்டு மண்ணொடுபொன்
றேடப்புரிகின் றிலையருள்கொண்டுநின் சீர்த்திகளைப்
பாடப்புரிந்தனை யென்மனத்துன்னைப் பகலிரவு
நாடப்புரிந்தனை யாள்பேரைவாழ்பச்சை நாயகியே. (அஎ)

மாடாடுகாடு மகற்கிட்டிடுமன்னை மார்களுஞ்சேய்
தேடா தழித்திடின் வற்புறுத்திப்புத்தி செப்பிடுவார்
கூடாநெறிச்செலி னீகூவிநல்லருட் கூட்டிடவே
நாடா திருப்பதென் னேபேரைவாழ்பச்சை நாயகியே. (அஅ)

ஐயிடைப்பட்டய ரீப்போலவன்பவ வாக்கையெனும்
பொய்யிடைப்பட்டுப் புழுங்குகின்றேன்வினை போக்கியன்பின்
கையிடைப்பட்டமெய்த் தொண்டருட்கூட்டக் கணித்தரு
ளையிடைப்பட்டுடை யாய்பேரைவாழ்பச்சை நாயகியே. [ளாய்

ஊன்முகக்காய மிதிலமைந்தேயுணர் வென்றமைந்த
மேன்முகக்கண்கொண் டுனைப்பேணிச்சிற்சுக வேலையிடை
தான்முகந்தாவிப் பயிர்தழைப்பக்கவி தான்பெயச்செய்
நான்முகனேத்தும் புகழ்ப்பேரைவாழ்பச்சை நாயகியே. (கூ0)

தசையார்மெய்நானென் றதற்கின்பம்போற்றுயர் தந்ததன்றி
யிசையான்மநிச்சயந் தேர்கின்றிலேன்மறை யின்முடியின்
மிசைதோய்நின்சேவடி காண்பதுண்டோபட்டி வித்தகனுண்
ணசைதோயருள்வடி வோய்பேரைவாழ்பச்சை நாயகியே. ()

நந்தோதநீருண் டெழுகந்தரங்கண்முன் னண்ணமகிழ்
பைந்தோகைபோ லுன்பொற் பாதாம்புயங்கண்முற் பார்த்து
சந்தோடசாகரத் தின்மூழ்கவென்று தயைபுரிவாய் [லப்பில்
நந்தோடநீக்கும் படிபேரைவாழ்பச்சை நாயகியே. (கூ௨)

பொன்மணிமார்பன்ற னம்மணியேவிடப் போனகங்கொ
ளன்மணிகண்டத்த னுன்மணியேயெ னகக்கமலத்
தொன்மணியேயெங்க ணன்மணியேயரு ளோமணியே
நன்மணியேயணி யேபேரைவாழ்பச்சை நாயகியே. (கூங)

ஏதேதுநான்சொல்லி யேத்தினுநீயிரங் காமலின்னஞ்
சூதேதுவக்கினை பாணித்திருந்திடிற் சூழ்ந்தடியேன்
மீதேதுஞ்செய்ய வறிகின்றிலேனருள் வேலையெனு
ஞாதேயமாரன்னை யேபேரைவாழ்பச்சை நாயகியே. (கூச)

மதிகொண்டவேணியர் நீயுளத்தூடன் மருவிடுமத்
ததிகொண்டணிந்திடு பூவடியேன்சிரந் தன்னில்வைத்துக்
கதிகொண்டவாழ்க்கைக் கதிகொண்டிடவருள் காஞ்சிவள
நதிகொண்டவாதி புரப்பேரைவாழ்பச்சை நாயகியே. (கூரு)

வானத்தமையினு மாநிரயத்தின் மருவினுமித்
தானத்தமையினும் புள்விலங்காகித் தழைத்திருண்ட
கானத்தமையினு மோர்குறையின்றுன் கழற்றுணையே
நானத்துபத்தி யருள்பேரைவாழ்பச்சை நாயகியே. (கூசா)

புயனிகர்த்தேகவி கோடிபெய்தானுகர் புல்லர்தமக்
கியமனெப்பாயன்பர்க் கன்னையொப்பாகி யிருந்துவிண்ணோர்
வியனுறுபேரரு ளாடல்கள்செய்ய விரும்புமென்கோ
ணயமல்லவோவிசை யாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (கூஎ)

உன்றனையெவ்விதத் துங்கைவிடேனென் றுரைத்தநின்வாக்
கொன்றனைக்குன்றிலக் காமென்றுநம்பி யுறுமடியே
னென்றனைக்குன்ற வலைப்பதென்னேயெனக் கெய்ப்பில்வைப்
நன்றனைத்துந்தரு வான்பேரைவாழ்பச்சை நாயகியே. [பா

ஆணிப்பொன்னேபொன் புயத்தான்பணியும்பொன் னம்புயத்
மாணிக்கமேயருள் பொங்குகட்டெய்வ மலர்த்தருவே [தாண்
காணிக்கையாவெனைத் தந்தேனருள்புரி காமர்வண்டு
நாணிக்கவிர்கரத் தாய்பேரைவாழ்பச்சை நாயகியே. (கூகூ)

அன்னேயடைக்கலஞ் செம்பவளக்குன் றதிற்பொருந்துந்
தன்னேர்மரகத வல்லீயடைக்கலஞ் சைலமன்னன்
மின்னேயடைக்கல நாயேனெனைக்கை விடாதருளார்
நன்னேயத்தொண்டரொ டாள்பேரைவாழ்பச்சை நாயகியே.

அளித்தேனுடல்பொரு ளாவியையென்னை யருகமைய,
விளித்தேபிறப்பிறப் பென்றியன்மையல் விலகுமுண்மை,
தெளித்தேன்றுகொண்டரு ணின்னுணைவேறொரு திக்குமி
லேன், நளித்தேன்மலர்ப்பொழில் சூழ்பேரைவாழ்பச்சை
நாயகியே. (கOக)

வாழிநின்பேரருள் வாழிமெய்த்தொண்டர்கள் வான்பொழிந்
வாழிநற்பேரை வளர்பட்டிலிங்க மகிணனுடன் [து
வாழியென்னுள்ளத்தி னீங்காதுபேரின்ப மல்கவென்றும்
வாழியருட்பச்சை நாயகியாகு மரகதமே. (கO௨)

மாலை முற்றிற்று.

## பிரபந்தங்கள் முற்றுப்பெற்றன.

## தெய்வமே துணை.

திருச்சிற்றம்பலம்.

---

உ
குருவே துணை.

# இந்நூலாசிரியர் இயற்றிய வேறு நூல்கள்.

---

## அச்சிட்டுள்ள பகுதிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| பக்தமான்மியம் | .... | விலை | ரூ. | 5—0—0 |
| சங்கராசாரியார் வைபவம் | .... | ,, | ,, | 1—0—0 |
| வண்ணத்திரட்டு | .... | ,, | ,, | 0—8—0 |
| மருதாசலப் பிரபந்தம் | .... | ,, | ,, | 0—6—0 |
| பக்தமான்மிய சாரம் | .... | ,, | ,, | 0—6—0 |
| கௌசைப்புராணம் பிரபந்தம் | .... | ,, | ,, | 0—8—0 |
| அவிநாசிப் பிரபந்தம் | .... | ,, | ,, | 0—6—0 |
| வேற்கடவுள் மாலை சந்தம் வகுப்பு முதலியன | .... | ,, | ,, | 0—4—0 |
| இரத்திநசலப் பிரபந்தம் | .... | ,, | ,, | 0—6—0 |
| ஸ்ரீ இராமானந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ் | .... | ,, | ,, | 0—6—0 |
| வெள்ளியங்கிரி சத்திநாயகர் மாலை, பதிகம்; ஷை விநாயகர் பதிகம் | | ,, | ,, | 0—8—0 |
| அன்னியூர்த் தலபுராணம், தோத்திரத்திரட்டு | .... | ,, | ,, | 0—8—0 |
| பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் பிள்ளைத்தமிழ் | .... | ,, | ,, | 0—8—0 |

## அச்சிடாத பகுதிகள்.

பேரூர் கோவை.
ஷை கலம்பகம்.
ஷை புராண சாரமாகிய பட்டிநாயகர் மாலை.
ஷை சிலேடை வெண்பா.
ஷை சந்தப்பதிகம்.
பல தெய்வ தோத்திரப் பதிகங்கள்.
குருந்தாசலப் பிரபந்தம்.
பழனிமலைப் பிரபந்தம்.
பத்திராசலப் பிள்ளைத்தமிழ்

கோயமுத்தூர்
கூட்டுறவு அச்சுக்கூடம், லிமிடெட்.